கல்கி

KALKI 13.1.91 ரூ. 2.50




சுற்றுலாச் சிறப்பிதழ்




DIPR-2020/MS/90/ELEGANT

இந்தியாவில் சுற்றுலா ஆண்டு!



பரிசு ரூ.250!

நீங்கள் தமிழகச் சுற்றுலா நிபுணரா?



இங்கே தமிழ் நாட்டின் வரைபடமும் எட்டு குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிப்பும் தமிழகத்தின் சிறப்பு மிக்க ஓர் ஊரைக் கோடி காட்டுகிறது. குறிப்புக்களின் உதவியுடன் அந்த ஊர்களை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு வரைபடத்தில் அந்த எட்டு ஊர்களும் எங்கே உள்ளன என்று நிர்ணயிக்க வேண்டும். அந்த இடங்களில் காணப்படும் எண்களை ஒவ்வொரு குறிப்புக்கும் அருகே உள்ள வட்டத்தில் ஒவ்வொன்றாகப் பொருத்தம் பார்த்து எழுத வேண்டும். பின்னர் இந்தப் பக்கத்தைக் கத்திரித்துத் தபாலில் எங்களுக்கு அனுப்பவும். எட்டு எண்களையும் சரியாக எழுதியவருக்குப் பரிசு ரூ 250/-. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் இருக்கவே இருக்கிறது பகிர்ந்தளிக்கும் முறை!

முடிவு தேதி: 23.1.91

உறையின் மேல் "சுற்றுலாப் பரிசுத் திட்டம்" என்று அவசியம் குறிப்பிடவும்.

உங்கள் பெயர்: ....

விலாசம்: ....

....

....

குறிப்புகள்:

1. மரம் ஒன்றானாலும் ருசி நான்கு!
2. பெருமைப்படத்தக்க அழகிய அசிங்கம்!
3. இங்கே வரும் அயல்நாட்டு விருந்தாளிகளுக்கு விசா வேண்டாம்!
4. ஊரறிந்த ரகசியம்!
5. இங்கே போனால் மொட்டை!
6. என் நிழல் என் மீதே!
7. நாலு சகோதரர்கள் உள்ள குடும்பத்தில் மூத்தவர்!
8. திருடர்களை விரட்டும் ராஜா!



பெண்ணின் தந்தை: நீங்க கேட்கிற வரதட்சணையை நான் தர்றேன். ஆனால், ஒரு கண்டிஷன் உங்க பையன் முதுகிலே, "Hypothecated to Mr. GOneson" அப்படின்னு போர்டு தொங்க விட்டுக்கணும், சரியா?

— சுசுந்தி முத்துமன்னார், லால்குடி.

□

● அஞ்சல் வழிக் கல்வியின் எம். எட். கோர்ஸ் செமினார் வகுப்பு. சுற்போர் அனைவரும் ஆசிரியர்களே.

அறுவைப் பேராசிரியர் ஒருவரின் வகுப்பில் ஓர் ஆசிரியர் நன்றாகத் தூங்கி விட்டார். பேராசிரியர் அருகில் சென்று அவரை எழுப்பி, "என்ன கனவு காண்கிறீர்கள்?" என வினவினார். தூங்கியவர், "நீங்கள் மிகவும் அருமையாகக் கற்பிப்பது போல் கனவு கண்டேன் சார்!" என்று பதிலளிக்க, உடனே மற்றோர் ஆசிரியர் எழுந்து, "பகல்கனவு எப்போதுமே பலிக்காது சார்!" என்றாரே பார்க்கலாம்!

— அ. மணிவாசகன், சேலம் — 3.

□

"'கமாண்டர் — இன் — சீஃப்' யார்?"

"கமாண்டரின் மனைவியாகத்தான் இருக்கும்!"

— ஆர். பத்மாவதி, சென்னை — 62.

□

மனைவி: பழைய பேப்பர்க்காரன் என்ன சொல்லிட்டுப் போறான்? இப்படிச் சோகமா இருக்கீங்க?

எழுத்தாளர்: போஸ்ட் ஆபீசுக்குப் பக்கத்திலே சொந்தமாகக் கடை வச்சிட்டானாம். போஸ்ட் மாஸ்டருக்கு 'பவர் ஆஃப் அட்டார்னி' எழுதிக் கொடுத்துட்டா திரும்பி வர்ற கதைகளை அங்கேயே வாங்கிகிட்டு கிலோவுக்கு ஒரு ரூபாய் கூடப் போட்டுத் தர்றானாம்!

— ஜெயமணி மனோகரன், சென்னை—99.

□

"என்னது...? ரவுடி ரங்கசாமி, யுனிவர்சிடியிலே போய் லெக்சர் குடுத்துட்டு வந்தானா...?"

"ஆமாம் சார்... 'குற்றவியல் கலைகளும் அவற்றின் நவீன வளர்ச்சியும்'ங்கிற தலைப்பிலே பேசிட்டு, டெமான்ஸ்ட்ரேஷனும் செஞ்சுட்டு வந்திருக்கான்...!"

— 'யானை', போடிநாயக்கனூர்.

□

● என்னிடம் குறும்புத்தனமாய் வம்பு செய்வதையே வாடிக்கையாய்க் கொண்ட நண்பன் துரையிடம், 'விளையாட்டு ஒருநாள் வினையாகப் போகிறது' என்று எத்தனையோ முறை கூறியும் பயனில்லை. ஒருசமயம் நாங்கள் பெங்களூரிலிருந்து பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தோம். நான் அசந்து தூங்கிய கொஞ்ச நேரத்தில் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துப் பார்க்க, துரையை ஏனைய பயணிகள் அடித்துக் கொண்டிருந்தார்கள். "டேய் வாக, டேய் வாக" என்று இவன் கூச்சலிட்டான். அவர்களைத் தடுத்து விசாரித்த பிறகுதான் தெரிந்தது, என் சட்டைப் பையிலிருந்த பணத்தை எனக்குத் தெரியாமல் துரை விளையாட்டாக எடுத்ததை ஒரு பயணி பார்த்துவிட, இவனை 'பிக்பாக்கெட்' என்று எண்ணி அடித்திருக்கிறார்கள் என்பது!

அன்றைய சிரிப்பு சோகம் கலந்த சிரிப்பு மட்டுமல்ல; நண்பனைத் திருத்திய சிரிப்பாகவும் விளங்கியது.

— எல். மாணிக்கவாசகம், கோடிக்கரை.



• ஒவ்வோர் ஊரிலும் ஐந்தாறு பந்தி...

ஊர் ஊராகச் சென்ற சினிமா யூனிட்...!

ஒவ்வொரு ஊரிலும் கல்யாண அமர்க்களம்...!

ஒன்பது அம்பாசிடர் கார்கள், மூன்று வேன்கள், இரண்டு அவுட்டோர் யூனிட் வேன்கள், கிரேன்களைச் சுமக்கும் இரண்டு லாரிகள், இருபது மோட்டார் சைக்கிள்கள் இவற்றைப் பராமரித்துப் பழுது பார்க்க ஒரு மெக்கானிக் குழு உள்பட சுமார் முந்நூற்றைம்பது பேர்கள் அடங்கிய ஒரு யூனிட், அவுட் டோர் ஷூட்டிங் முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறது! நடிக நடிகையர், இயக்குனர் தயாரிப்பாளர், போன்று படத்தோடு நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்கள் தவிர பத்து சமையல்காரர்கள், ஏழு சர்வர்கள், தச்சர்கள், பெயின்டர்கள், இரண்டு டெய்லர்கள் (தையல் மிஷினுடன்), காஸ்ட்யூம் டிசைனர்கள், சண்டை வீரர்கள், இரண்டு காமெரா யூனிட்டுகளைச் சேர்ந்த ஆட்கள் இவர்களுக்குத் தேவையான சாமான் செட்டுகள் என்று ஒரு மினி சூப்பர் மார்க்கெட்டையே அள்ளிப் போட்டுக் கொண்டு போய்த் திரும்பியிருக்கிறார்கள்!

குடும்பத்துடன் வெளியூர் போய் வந்தாலே 'போதுமடா சாமி!' என்று ஆகி விடுகிறதே; 'தர்ம துரை' பட யூனிட் பெங்களூர், மைசூர், ஹொகனேக்கல் ஹொசாய்காட், ஸ்ரீரங்கப் பட்டணம், பல்மூரிச் சேத்ரா, சாமுண்டி ஹில்ஸ் ஆகிய இடங்களுக்குப் போய்த் திரும்ப என்ன பாடுபட்டிருக்கும்!

ஆனால் தயாரிப்பாளர் ராமநாதனோ ''இந்த அவுட்டோர் ட்ரிப் ஏறக்குறைய ஒரு பிக்னிக் போலத்தான் இருந்தது'' என்கிறார். 'ஒவ்வொரு ஊரிலும் ஐந்து ஆறு பந்திகளாகச் சாப்பாடு, கல்யாண அமர்க்களம் தான்! அதுவும் டிசம்பர் 12 அன்று ரஜினியின் (பட ஹீரோ) பிறந்தநாள். சென்னையிலிருந்து அவர் மனைவி லதாவும் குழந்தைகளும் நண்பர்களும் வந்திருந்தனர். அன்று மகாதேவ்புரம் என்ற கிராமத்தில் ஷூட்டிங். அந்த ஊர் மக்கள் 1500 பேருக்கும் வடை பாயசத்தோடு சமையல் செய்து போட்டுச் சந்தோஷமாகக் கொண்டாடினோம்'' என்கிறார் ராமநாதன்.

புரொடக்ஷன் செலவைப் பற்றிக் கவலைப்படாமல், ஒரு குறிப்பிட்ட காட்சிக்காக மாருதி காரை வாங்கி அடித்து நொறுக்கச் செய்த ராமநாதன், யூனிட்டின் சந்தோஷத்துக்காகவும் தாராளமாகவே செலவு செய்திருக்கிறார். புரொடக்ஷன் மானேஜர் நாராயணனைச் சந்தித்தபோது அவர் சொன்னார்:

''டிசம்பர் ஒன்று முதல் பதினைந்து வரை ஷூட்டிங். ரஜினிகாந்த்துக்கு ஏசி வசதி

• படப்பிடிப்பின் போது...

யுடன் ஸ்பெஷல் கார். கௌதமி, நிழல்கள் ரவி, சரண்ராஜ், வைஷ்ணவி என்று ஒவ்வொருவருக்கும் ஓய்வு நேரத்தில் ஊர் சுற்றிப் பார்க்கத் தனியாகக் கார்கள் கொடுத்தோம். இதைத் தவிர ஜூனியர் ஆர்டிஸ்ட்கள், டெக்னிஷியன்கள் என்று ஒவ்வொரு குழுவுக்கும் தனித் தனி வேன்கள். திப்புசுல்தான் கோட்டை, சாமுண்டி ஹில்ஸ், பிருந்தாவன் கார்டன்ஸ் என்று எல்லோரும் சுற்றிப் பார்த்து விட்டு வந்தார்கள்.''

செலவு செய்வது தயாரிப்பாளர்தான். ஆனால் அத்தனை பேருக்கும் காலையில் பல்துலக்க பேஸ்ட் கொடுப்பதிலிருந்து இரவு படுக்கப் போர்வை தருவது வரை சகலமும் புரொடக்ஷன் மானேஜர்தான் பார்த்துப் பார்த்துச் செய்ய வேண்டும். அவர் இப்பணிகளைப் பிசிறில்லாமல் செய்ய வேண்டுமென்றால் டைரக்டரின் முழு ஒத்துழைப்பும் தேவை.

'தர்ம துரை' பட டைரக்டர் ராஜசேகரன் சொன்னார்:

''அவுட்டோர் கிளம்புவதற்கு முன்னால் படப்பிடிப்பு நடத்தவேண்டிய இடங்கள், அந்தந்த இடங்களில் எடுக்க வேண்டிய காட்சிகள், அதற்குரிய கால அளவு, தேவையான பொருட்கள், ஆர்டிஸ்ட்கள், டெக்னிஷியன்கள் என்று தெளிவாக 'சார்ட்' போட்டு வைத்துக்கொள்வோம். அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப ரயில் டிக்கெட் ரிசர்வ் செய்யப்பட்டு ஷூட்டிங் தொடங்கும். சிறு இடையூறோ எதிர்பாராத மாற்றமோ ஏற்பட்டால் கூடப் பல ஆயிரங்களிலிருந்து பல லட்சங்கள் வரை நஷ்டமாகக் கூடும். எனவே, ரொம்ப கவனமாக டைரக்டர் செயல்பட வேண்டும்.''

'தர்மதுரை' படப்பிடிப்பில் ஏற்பட்ட எதிர்பாராத இடையூறு ஒன்றினைச் சமாளித்ததை விவரித்தார் தயாரிப்பாளர் ராமநாதன்: ''ஒரு மலைச் சரிவின் காட்டுப் பகுதியில் இரவு நேர ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. நிறைய பவர்ஃபுல் லைட்டுகள் போட்டதும் ஒளியால் கவரப்பட்டு ஆயிரக் கணக்கில் பூச்சிகள் பறந்து வந்து மொய்த்துவிட்டன. சருகுகளை எரித்துப் புகையுண்டாக்கிப் பூச்சிகளை விரட்டினோம்!

''சமாளிக்க முடியாத பிரச்னையும் ஒன்று ஏற்பட்டது... ரஜினியை மொய்த்த ரசிகர்கள் கூட்டத்தைத்தான் சொல்கிறேன்.. தமிழ் நாட்டில் ஷூட்டிங் எடுத்தால்தான் கூட்டம் கூடும் என்று நினைத்தோம்; ஆனால் கர்நாடகத்திலும் ரஜினிக்கு ஏராளமான ரசிகர்கள்'' என்றார் ராமநாதன்.

— பாரதிபாலன்





ஒரு கதைஞனின் விலை!

"ஸார் கோதண்டபாணி வீடு இது தானே?'' என்று தயக்கத்துடன் கேட்டேன்.

சின்ன இரும்பு கேட்டைத் திறந்து வழி விட்ட மனிதருக்கு வயது அறுபது இருக்க லாம். வயதையும் மீறின குழந்தைத்தனம் முகத்தில்.

''ஆமாம், ஆமாம்! வாங்க; ஜனார்த் தனம் சொன்ன பையன் நீங்கதானே? கே. எம். பி. பேங்க்லேதானே வேலை? பிராஞ்ச் இங்கிருந்து ரொம்ப கிட்ட.'' என்று வீட்டி னுள் நுழைந்தார்.

கோதண்டம் வீட்டின் பல அறைகளைச் சுற்றிக் காண்பித்தார். ஒவ்வொன்றும் துப்புரவாய் இருந்தது. கடைசியாய் முன் வராந்தாவிலேயே பூட்டிக் கிடந்த அறை யைத் திறந்தார். ''இதுதான் உங்களது'' என்றார். எட்டுக்கு எட்டு இருக்கலாம் போல் குட்டி அறை. சுத்தமான சுவர்கள் என்னைக் காதல் கொள்ள வைத்தன.

''ஸார், பாத், லெட்ரீன் தனியா இருக்கா?'' என்றேன் மெல்ல:

''நீங்க ஒத்தை ஆன்னு ஜனார்த்தனம் சொன்னாரே. நானும் மாமியும் மட்டும் தான் வீட்டிலே. அதனாலே எங்களோட தையே நீங்க உபயோகப்படுத்திக்கலாம்'' என்று நான் சம்மதம் சொல்லி விட்ட தாகவே முடிவு செய்து கொண்டு பேசத் தொடங்கினார்.

''திங்கட்கிழமை அமாவாசை. அன் னைக்கே பால் காய்ச்சிட்டுக் குடி வந்து டுங்க'' என்றார் கோதண்டபாணி. சந்தோஷ மாய்த் தலையாட்டி விட்டு 'வர்றேன் ஸார்,' என்றேன்.

திங்கட் கிழமை ஆட்டோவில் சகல சம்பத்துகளுடன் நான் வந்து இறங்கிய போது கதவைத் திறந்தவர் மாமியாகத்தான் இருக்க வேண்டும். ஐம்பதிலிருந்து ஐம்பத் தைந்துக்குள் ஏதாவது ஒரு வயது இருக்க லாம். அநேகமாய் 'லக்ஷ்மி' என்றோ 'மங்களம்' என்றோ பெயர் இருக்கலாம். சாமான்களை வராந்தாவில் எடுத்து வைக்க வும் சாவி கொண்டு வந்து தந்தார். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். சின்னதாய்க் கோலத்துடன் விநாயகர் போட்டோ உருவில் காத்திருந்தார். மாமியின் கைங்கர் யம். மிகச் சிறிய பித்தளை விளக்குகள் இரண்டு, எண்ணெய்க் குளத்தில் மிதந்த பூத்திரிகளுடன் எனக்காகக் காத்திருந்தன. அலமாரியில் ஸ்டவ்வும், பாத்திரத்தில் பாலும், மந்திரத்து மாங்காய் போல் கொலு விருந்தன. பால் காய்ச்சி நைவேத்தியம் செய்து விட்டுத் திரும்பிய போது, டக் கென்று சின்ன ஓசை. நுரை பொங்கும் காப்பி, பொன் முறுவலுடன்.

இந்த வீட்டிற்குக் குடி வந்ததிலிருந்து இரவு எட்டு மணியிலிருந்து, பதினொன்று, பன்னிரண்டு வரை தினமும் கதை எழுத முடிந்தது. தினமும் ஒரு கதையை முடித்துத் தபாலில் சேர்ப்பது என்று முடிவு செய்து கொண்டேன்.

பதினைந்து நாட்கள் கழித்துக் கோதண்ட பாணி கேஷுவலாக என்னைக் கேட்டார். ''டிபார்ட்மெண்டல் பரீட்சைக்குப் படிக்க றீங்களா? இரவு ரொம்ப நேரம் விளக்கு எரியுதே?'' ஆமாம் என்று சொல்ல எனக் குப் பயம். நேராக பேங்கிலேயே சென்று விசாரித்து விடுவாரோ என்றிருந்தது. ''ஒண்ணுமில்லே சார். சும்மா கதைப் புத்தகங்கள் படிச்சுக்கிட்டிருந்தேன். அது என்னோட பொழுதுபோக்கு'' என்று மழுப்பினேன்.

''அப்படியா, என்ன மாதிரி புத்தகங்கள் படிக்கறீங்க. எனக்கும் போர் அடிக்குது. பகல் போதிலே படிச்சுட்டுக் குடுத்துட றேனே,'' என்றார் விடாக்கண்டனாக.

''ஆபீஸ் சர்க்குலேஷன் லைப்ரரியி லிருந்து தினமும் ஒரு புத்தகம் கொண்டு வருவேன். அது போக, கொஞ்சம் சொந்தப் புத்தகங்கள் இருக்கு.'' என்று அரதப் பழசான இரண்டு நாவல்களை அவர் கையில் திணித்தேன்.

அவர் சந்தேகமாய், ''இதெல்லாம்தான் படிச்சிட்டிருந்தீங்களா?'' என்றார். நான் மாடு போல் தலையாட்டினேன்.

அன்றிலிருந்து விளக்கை அணைத்து விட்டு, சின்ன சிம்னி விளக்கின் துணை யுடன் என் கதையெழுதும்படலம் தொடர்ந் தது.

அடுத்த நாள் இரவு கோதண்டபாணி திரும்பவும் வழிமறித்தார். ''அறைக்குப் போறதுக்கு முன்னாலே கொஞ்சம் வாங்க ளேன்'' என்று உள்ளே அழைத்தார். பலியாடு போல உள்ளே சென்று சோபாவில் அமர்ந் தேன். கதவு வைத்த அலமாரியைத் திறந்து



பக்தியுடன் ஒரு நோட்டைக் கையில் எடுத்தார். அலமாரியின் கீழ்த் தட்டு முழுவதும் தடிதடியாய்க் கவர்கள். மேல் தட்டில் பேப்பர், பேனா, இங்க் வகையறாக்கள். அடுத்ததில் கற்றை, கற்றையாய் பேப்பர்கள். மையெழுத்துக்களைப் பிரசவித்து, ரகம் வாரியாய் அடுக்கப்பட்டிருந்தன. எனக்கு ஏதோ கொஞ்சம் புரிந்தது. அவரும் விளக்கவுரை சொன்னார். 'சண்முகசுந்தரம், ஒரு ரகசியம் உங்களுக்குச் சொல்லப் போறேன். யார்கிட்டேயும் சொல்லக் கூடாது. சின்ன வயசிலிருந்தே கதை எழுதணும்னு ரொம்ப ஆசை எனக்கு. பதினைஞ்சு வயசிலிருந்து எழுதிக்கிட்டிருக்கேன். இதுவரைக்கும் ஒண்ணு கூட பிரசுரம் ஆனதில்லே. நடுவிலே வெறுத்துப் போய் ஆறு மாசம் எழுதாமல் இருப்பேன். அப்புறம் திரும்பவும் எழுத ஆரம்பிச்சுடுவேன். அறுபத்தொரு வயசாகுது எனக்கு இப்ப. இன்னும் இந்தப் பித்து விடலே. இப்பக் கூட நாலு கதைகள் முடிச்சு வெச்சிருக்கேன். திரும்பி வந்த கதை பதினைஞ்சு இருக்கு. பாதி முடிச்சது அஞ்சாறு இருக்கும். பொழுது போகாமல் பழைய புத்தகங்களைப் படிக்கறதுக்கு, இதைப் படிச்சுட்டு உங்க அபிப்பிராயம் என்னன்னு சொல்லுங்க,' என்று கூறிவிட்டு, திரும்பி வந்த இரண்டு கதைகளை என் கையில் திணித்தார். பதிலே சொல்லாமல் அறைக்குத் திரும்பினேன்.

கோதண்டபாணி எழுதிய கதைகளைப் படிக்கப் படிக்கச் சிரிப்பாக வந்தது. சம்பவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்தன. தீம் என்று ஒன்றே இல்லை. நிறைய அடித்தல் திருத்தல்களுடன், கோழிக் கிறுக்கல் வேறு. படித்தே பார்க்காமல் திருப்பியனுப்பியிருப்பார்கள் என்றே தோன்றியது. கஷ்டப்பட்டுப் படித்துவிட்டுப் படுத்தேன்.

காலையில் ஆபீஸிற்குக் கிளம்பும்போதே முகம் முழுதும் புன்னகையோடு வாசலில், நின்றிருந்தார் கோதண்டபாணி. 'கதை எப்படியிருக்கு?' என்றார் ஆவலுடன். நூறு ரூபாய் வாடகையும், இதர சலுகைகளும் என் வாயைக் கட்டிப் போட்டன. 'பிரமாதம், என்ன செய்யறது. இன்னும் வேளை வரலே. பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்' என்று சிரிப்பையடக்கியவாறு கூறி விட்டுக் கிளம்பினேன். அதன்பின் கோதண்டபாணி அடிக்கடி தம் கதைகளை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். நானும், பொறுமையுடன் படித்து, சகிப்புத் தன்மையுடன் பாராட்டுக்களை அள்ளி வழங்கினேன்.

ஒரு நாள் கிணற்றடியில் என் பேண்ட், ஷர்ட் குவியல்களுடன் ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டாடிக் கொண்டிருந்த போது, மாமி மெல்லிய குரலில் வேலைக்காரியுடன் பேசுவது கேட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு, 'மாமி ஊமையல்ல' என்ற விவரம் தெரிந்து ரொம்பச் சந்தோஷமானேன். மாமி நான்

ஜி.எஸ். சித்ரா


● கே. ஏ. காளிமுத்து, காரை.

? 'அடுத்த பொதுத் தேர்தல் எப்போது என்பதை நான்தான் முடிவு செய்வேன்; இ. காங்கிரஸ் அல்ல' என்று பிரதமர் சந்திர சேகர் கூறியிருக்கிறாரே?

! இப்படி அவர் சொல்ல வேண்டும் என்பது ராஜீவின் விருப்பமாக இருக்கும்!

● ஆர். ஸ்ரீதரன், கும்பகோணம்.

? தீவிர அரசியலில் குதிப்பதாக ராஜேஷ் கன்னா அறிவித்திருப்பது பற்றி...?



* தமிழக விஜயம்?



* கண்டு களித்த இசை!

! கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில், "இளைஞர்களை அதிகம் பாதிப்பது (கெடுப்பது?) அரசியலா? சினிமாவா?" என்று பட்டிமன்றம் நடத்தினார்கள். அதை அறிந்த இந்தியன் வங்கி சேர்மன் கோபாலகிருஷ்ணன், பட்டிமன்றத்துக்கு முன்பு, அதே மேடையில் சொன்னார்: "இது என்ன கேள்வி? இந்தியாவில் அரசியலுக்கும் சினிமாவுக்கும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை!" அரங்கம் சிரிப்பிலும் கைதட்டலிலும் அதிர்ந்தது! உங்கள் கேள்வி இந்தச் சம்பவத்தைத்தான் நினைவூட்டுகிறது. ஐயோ பாவம், இந்தியா!

● வித்யா, தர்மபுரி.

? சமீபத்தில் தங்களை வியக்க வைத்த விஷயம்?

! ஓர் ஏழை சினிமா பத்திரிகையாளருக்குச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை ஆபரேஷனுக்குப் பணம் தேவைப்பட்டது. சினிமா நட்சத்திரங்கள் உதவுவார்கள் என்று நம்பி ஏமாந்தார். கேட்ட உடனே இருபதாயிரம் நன்கொடை அளித்தவர்: வாழப்பாடியார்!

● முஹமது உமர் அயூப்கான், சத்திரம் கருப்பூர்.

? 'ஜெயலலிதாவைக் காண அவர் வீட்டுக்குப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் செல்வது போல் பிரதமர் சென்றுள்ளார்,' என்ற பண்ருட்டியாரின் வர்ணனை பற்றி?

! தேசப் பிரதமருடைய தகுதிக்கு அது சரியல்லதான். அங்கே அரசாங்கப் பிரதம வழக்கறிஞர் ஜி. ராமசாமி உடனிருந்தது, அதைவிடப் பெரிய தவறு. என்ன செய்ய, பதவிப் பித்துப் பிடித்தால் இப்படித்தான்! ஆனால் ஒன்று, 'டாக்டர்' ஜெயலலிதா இந்தப் பித்தை அதிகரிக்கச் செய்வாரே தவிர, குணப்படுத்தப் போவதில்லை!

● எஸ். ராஜசேகரன், கொளப்பாடு.

? 'தி. மு. க. கருணாநிதி குடும்பத்தாரின் புரொப்ரைட்டர் ஷிப் நிறுவனம் ஆகிவிட்டது' என்று ராமகிருஷ்ணன் குற்றம் சாட்டுகிறாரே?

தி.மு.க. அரசு பற்றி ஆர்.வியிடம் 'ஜெ' புகார் செய்திருக்கிறாரே?

! அதுவாவது தேவலாம்; அவர் சேர்ந்திருக்கும் அ. தி. மு. க., ஜெ.யின் 'ஸோல் புரப்ரைட்டர்ஷிப்' ஆச்சே!

● ஆர். மனோகரன், திருச்சி.

? பிரதமரின் தமிழக விஜயம் பற்றி...?

! ஏதோ விமான நிலையத்தில் கொஞ்சம் மறியல் நடந்ததோ, சற்றே பரபரப்பு ஏற்பட்டதோ! மற்றபடி 'சப்'! ஸ்பெஷல் விமானத்துக்கு எரிபொருள் வேஸ்ட் ஆனதுதான் மிச்சம்!

* கதவு திறந்தார்!





* வர்ணனை!

● என். சுரேஷ், சேலம்.

? பல் குத்த உதவிய சிறு துரும்பு (கவேச்சை கமலக்கண்ணன்) இப்போது அமைச்சரவையைக் காப்பாற்ற உதவவில்லையே?

! பல் குத்தத்தான் சிறு துரும்பு உதவும்; பல்லே சொத்தையாகிவிட்டால் துரும்பு என்ன பண்ண முடியும்?

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.

? மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் ஆணைகள் பிறப்பிக்கிறதே; அந்த மன்றத்துக்கு அத்தகைய அதிகாரங்கள் உண்டா?

! அதைத்தான் இப்போது நீதிமன்றம் விசாரித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஒரு மேல் முறையீடு வழக்கில்.

● கே. ஆர். விஜயா, கோவை.

? 'தேசிய முன்னணி ஆட்சி நீடித்திருந்தால் மேகம் கலவரம் விசாரணைக் கமிஷன் நீதிபதி மதன் ராஜினாமா செய்திருக்க



* தீவிர அரசியல்!



* கேட்டவுடன் உதவி!

மாட்டார்' என்று ஒரு கேள்விக்குப் பதில் அளித்துள்ளீரே! நீதிபதி மதன், தன் ராஜினாமாவின் போது, தேசிய முன்னணி ஆட்சியாளரைக் குறைகூறியிருந்தாரே, பார்க்கவில்லையா?

! அதற்குத் தேசிய முன்னணித் தலைவர்கள் பதில் சொல்லியிருந்தார்களே, கவனிக்கவில்லையா?

● மு. வெங்கடேஸ்குமார், திருச்சி — 20.

? தி. மு. க. அரசு குறித்து ஆர். வி. யிடம் புகார் கூறும் ஜெயலலிதா பற்றி?

! பிரதமரையும், குடியரசுத் தலைவரையும் சந்தித்து, தி. மு. க. அரசு பற்றிய ரகசியங்களைக் கொடுத்திருக்கிறாராம்! அதுபற்றி உள்துறை அமைச்சகம் விசாரணை செய்கிறதாம்! இதையெல்லாம் அலட்சியப்படுத்தி ஒதுக்கலாம் என்று பார்த்தால், கருணாநிதி இங்கு குமணன் கதை கூறிக் கலங்குகிறாரே. அதுதான் கவனத்தைக் கவருகிறது! பிரதமரின் உறுதி மொழியையும் அப்படியே ஏற்க முடியவில்லை. 'பட்ஜெட் வரை வரி கிடையாது' என்று கூறிய நாலு நாட்களுக்குள் மேலும் அபரிமித வரி போட்டு வதைக்கும் அவர், 'ஆட்சிக் கலைப்பு' இல்லை என்று கூறியதை எப்படி நம்புவது? சரித்திரம் திரும்பும்படி செய்வதில் ஜெ வெற்றி பெற்றுவிட்டால், ஜனநாயகப் பற்றுள்ளவர்கள் விசனிக்கவே செய்வார்கள்.

● குரு கிருஷ்ணா, திருச்சி.

? தி. மு. க. முந்நாள் அமைச்சர் ராமகிருஷ்ணன் அ. தி. மு. க. வில் சேர்ந்து விட்டாரே?

! அதற்குப் பதில் இங்கே காளிமுத்துவுக்குக் கலைஞர் கதவு திறந்து விட்டாரே! ஜெயலலிதாவை நாக்கில் நரம்பில்லாமல் திட்ட அவரை அனுமதிப்பது அ. தி. மு. க. வுக்கு அனுதாபத்தைப் பெருக்கி தி. மு. க.வை மேலும் பலவீனப்படுத்தும் என்பதைக் கலைஞர் மறக்காமல் இருந்தால் சரி.

● ஆர். புதுவை சேகரன், பாண்டிச்சேரி.

? புதுவையில் தி. மு. க. அரசு கவிழ்ந்து விட்டதே?

! சதி பண்ணிக் கவிழ்த்ததுதான் மிச்சம். மாற்று ஆட்சி அமையவும் வாய்ப்பில்லை போலிருக்கிறதே! கொஞ்ச காலத்துக்கு ஜனாதிபதி ஆட்சிதான் அனுபவிக்கப்போகிறீர்கள், போல!

● ஆர். அண்ணாதுரை, திருப்பத்தூர் *

? கர்நாடகத்தில், ஆந்திரத்தில், பாண்டிச்சேரியில் காங்கிரஸ் செய்த படுகொலைகளைப் பார்க்கும் போது அக் கட்சிக்குச் சென்ற வருஷம் மக்கள் கொடுத்த தண்டனை போதும் என்று நினைக்கிறீர்களா?

! மக்கள் தொடர்ந்து தண்டனை கொடுக்க எண்ணினாலும் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டு நின்று, வோட்டுக்களைச் சிதறச் செய்து, அந்தத் தண்டனை நிறைவேற முடியாமல் செய்து விடுவார்களே!

● பி. எஸ். கோவிந்த ராஜன், திருச்சி.

? உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத, கண்டு களித்த இசை நிகழ்ச்சி எது?

! சரியாகத்தான் கேட்டீர். 'கண்டு களித்த இசை நிகழ்ச்சி' என்று! மாஸ்டர் சசாங்கன் குழல் இசையைக் கேட்டு ரசிப்பதுடன் அந்த மேதைக் குழந்தையின் கள்ளமற்ற, கடுக்கன் அணிந்த முகத்தைக் கண்டு ரசிக்கவும் முடியும்!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஆர். அண்ணாதுரை,
49, தியாகி சிதம்பரனார் தெரு,
திருப்பத்தூர், (வ. ஆ.) — 635 601.



செய்தி - குவைத்தை விட்டு வெளியேற ஈ.ராக்குக்கு ஜனவரி 15 வரை காலக்கெடு.



கல்கி

1991 ஜனவரி 13
மலர் : 49   இதழ் : 24
பிரமோதூத மார்கழி 29



பிரதமர்: முரண்பாடுகளின் மொத்த உரு!

சூழ்ச்சி செய்தும், பண முதலைகளின் உதவியோடும் ஓர் ஆட்சியைக் கவிழ்த்து விட்டுப் பதவிக்கு வந்துவிடுவது சுலபம்; ஆனால் நல்லாட்சி வழங்குவது கஷ்டம் என்பதைச் சந்திரசேகர் இதற்குள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஒருவேளை அவர் புரிந்து கொள்ளவில்லையென்றாலும் அவரது தடுமாற்றங்கள் அவர் ரொம்பவும் குழம்பிப் போயிருப்பதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன.

1340 கோடிக்கு மறைமுக வரிகள் விதித்துவிட்டு, 'இனி பட்ஜெட்டுக்கு முன்னால் வரிவிதிப்பு கிடையாது' என்று அறிவித்தார் பிரதமர். சொல்லி வாய் மூடுவதற்கு முன்னால் நிதி அமைச்சர் மேலும் 810 கோடி ரூபாய்க்கு நேர்முக வரிகள் விதித்திருக்கிறார்! 'சந்திரசேகர் பொய் சொல்லி மக்களை ஏமாற்றினார்' என்பதா; அல்லது, தமது அமைச்சரவையில் என்ன நடக்கிறது என்று பிரதமருக்கே தெரியவில்லை என்பதா? இந்த அக்கிரம வரிவிதிப்புக்கு ஆதரவுக் கட்சியான இ. காங்கிரஸே எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சென்னைக்கு வந்த பிரதமர், ஜெ. வாழப்பாடியார் ஆகியோரைச் சந்தித்து அளவளாவிய பிறகு, ''ஆட்சிக் கவிழ்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை; வதந்திகளைப் பரப்ப வேண்டாம்'' என்றெல்லாம் அறிக்கைகளை விட்டுவிட்டு டில்லி திரும்பினார். திரும்பியவர், மறுபடி 'ஜெ'க்கு நேரம் ஒதுக்கி, அவர் கொடுத்த ''ரகசிய''ப் புகார்களை விசாரிக்குமாறு உள்துறை அமைச்சகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதன் மூலம் மேலும் வதந்திகள் உருவாகிப் பரவ இடமளித்திருக்கிறார்.

இதோடு போயிற்றா? சிம்ரஞ்சித்சிங் மானுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறேன் என்று அவரைப் பட்டாக் கத்தியுடன் வரவேற்று உபசரிக்கப் போக, மான், 'அரசியல் சாசனத்தின் 51வது பிரிவின் அடிப்படையில் பஞ்சாப் பிரச்னையை அணுகலாம்' என்கிறார். அந்தப் பிரிவு, அயல்நாடுகளிடையே ஒப்புரவையும், நட்புறவையும் வளர்க்க இந்தியா பாடுபட வேண்டும் என்று விதிக்கிறது. ஆக, பஞ்சாபை அயல்நாடாகக் கருதிச் சந்திரசேகர் பேச்சு வார்த்தைகளைத் தொடர வேண்டும் என்பதை மான் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி விட்டார். இதைத்தான், ''பயனுள்ள பேச்சு வார்த்தை'' என்று வர்ணித்தார் பிரதமர்! இ. காங்கிரஸின் காட்டமான எதிர்ப்பு கிளம்பவே, விழித்துக் கொண்டு, இப்போது அவரே, 'யாரும் பயப்பட வேண்டாம்; சும்மா உளளாக் கட்டிக்குத் தான் மானுடன் பேச்சு வார்த்தை நடந்தது; எதையும் விட்டுக் கொடுத்துவிட மாட்டேன்' என்று ஆறுதல் சொல்கிறார்!

விடுதலைப் புலிகளுக்குக் கருணாநிதி இடம் கொடுக்கிறார் என்பதுதான் இங்கே அவர் மீது எதிர்க்கட்சிகளின் பிரதானக் குற்றச்சாட்டு. அந்த அடிப்படையில்தான் தமிழக அரசைத் தாம் பதவி ஏற்ற கையோடு மிரட்டினார் சந்திரசேகர். தமிழக முதல்வரும் இங்கே தீவிர நடவடிக்கை எடுத்ததுடன், மேலும் எச்சரிக்கையாக இருக்கும் நோக்கில், படைகள் தந்து உதவும்படி மத்திய அரசைக் கோரினார். ஆனால் இதற்குப் பிரதமர் செவி சாய்க்காதது மட்டுமல்ல; இப்போது விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த நாடகத்துக்கு ஆதரவு தந்தும் பேசுகிறார்! புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே பேச்சு வார்த்தைகளை வரவேற்பதாகக் கூறுகிறார்! தமிழ்நாட்டில் நாம் விடுதலைப் புலிகளை நம்பக் கூடாதாம்; ஆனால் இலங்கை அரசு விடுதலைப்புலிகளை நம்பிப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட வேண்டுமாம்! இது எப்படி இருக்கு!

காங்கிரஸ் தமக்கு ஆதரவுக் கட்சி என்பதால் இங்கே வந்தபோது வாழப்பாடியார் தோள் மீது கைபோட்டு இழைந்தார் பிரதமர். டில்லி சென்ற பிறகோ, ராஜீவ் பிரதமர் மீது நேரடியாகப் பாய்கிறார்! ''தேசிய முன்னணி அரசே எவ்வளவோ தேவலாம்; நாடாளுமன்றத்தில் நடக்கப் போகிறது என்ன? என்பது பற்றியாவது எதிர்க்கட்சியான எங்களைக் கலந்து ஆலோசித்தார்கள்; ஆனால் நீங்களோ, ஆதரவுக் கட்சியான எங்களை அடியோடு ஒதுக்கி விட்டுக் காரியம் பண்ணிக் கொண்டு போகிறீர்கள்'' என்று சாடினார். அப்புறம் ஏதோ சமாதானம் சொல்லி ராஜீவைச் சாந்தப்படுத்தியிருக்கிறார் பிரதமர்.

ஆக மொத்தம், முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சி தந்து, தாம் ரொம்பவும் குழம்பிப் போயிருப்பதையும், ஆள்வதற்குத் தாம் அருகதையற்றவர் என்பதையும் தெளிவாக நிரூபித்து வருகிறார் சந்திரசேகர்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



தைத்திங்களில்
தமிழகமெங்கும்
கலைப்புலி
R.பார்த்திபன் in
S.தாணுவின்
தையல்காரன்
SP.முத்துராமன் · மகேந்திரன்
S.P.பாலசுப்பிரமணியம்
T.S.விநயகம்·விட்டல்·சுப்பர்

வார்த்தை ஜாலங்களில் சுற்றுலாத் திட்டங்கள்!

தேர்தலின் போது தான் வாக்குறுதிகள் வாரி இறைக்கப்படுகின்றன என்பதில்லை... பதவிக்கு வந்த பிறகும் மந்திரிகள் கொடுக்கும் வாக்குறுதிகள் அநேகம். 1979 இல் சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பாக இருந்தவர் ஆர். எம். வீரப்பன். அப்போது ஒரு பேட்டியில் (கல்கி உல்லாசப் பயணிகள் சிறப்பிதழ் 1979) 'ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின் போது தமிழகத்தில் சுற்றுலாவுக்கு நான்கு கோடி ரூபாய் செலவிடப்படும் என்று அறிவித்தார். இப்போது எட்டாவது ஐந்தாண்டு திட்டமும் வந்துவிட்டது! நான்கு கோடி ரூபாய்க்கு என்னென்ன செய்தார்கள் என்று தெரியவில்லை! அப்படியே செய்திருந்தாலும் அதற்கு ஈடான சுற்றுலா வளர்ச்சியைக் காணோம்!

பிரசித்தி பெற்ற கூவத்தில் 'படகு விடும் திட்டம்' போல் வாக்குறுதி மன்னர்கள் அறிவித்து நிறைவேறாத இதர பல திட்டங்கள்:

●● டெல்லி – ஆக்ரா – ஜெய்பூர் என்று அந்நிய நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வது போல, (இந்தச் சுற்றுலாவை Golden Triangle என்று சொல்வார்கள்) மதுரை, திருச்சி, தஞ்சை என்று சிறிய விமானத்தில் ஒரு பாக்கேஜ் டூர் போல அழைத்துச் செல்ல வசதி செய்யப்படும்.

●● Tourism Grid உருவாக்கப்படும். இதன் மூலம் தென் மாநிலங்களுக்கிடையே போக்குவரத்தில் பர்மிட் பிரச்னைகள், நுழைவு வரி, ஹோட்டல் முன் பதிவுப் பிரச்னை போன்றவை தளையப்படும்.


●● சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை, ஹோவர் கிராப்ட் படகுப் பயணம் ஏற்பாடு செய்யப்படும்.

●● மதுரை திருமலை நாயக்கர் மகாலிலும், மீனாட்சி அம்மன் கோயிலிலும் உள்ளது போன்று ஒலி, ஒளிக் காட்சி மகாபலிபுரத்திலும் ஏற்பாடு செய்யப்படும்.

●● ஹொகேனக்கல் நீர் வீழ்ச்சியை முழுவதுமாகக் கண்டு களிக்க, தொங்கு பாலம் அமைக்கப்படும்.

●● நயாகரா நீர் வீழ்ச்சியைக் கலர் விளக்குகள் மூலம் அலங்கரித்துச் சொர்க்க லோகம் போல வைத்துள்ளார்கள். அதே போன்ற ஏற்பாடுகள் குற்றால அருவியிலும் செய்யப்படும்.

●● கன்னியாகுமரியில் விவேகானந்தா பாறைக்



• பரிதாபமான கூவம்

கும், கரைக்கும் இடையில் பாலம் ஒன்று அமைக்கப்படும்.

●● வள்ளுவர் கோட்டம் போலவே, சென்னையில் கம்பர் கோட்டம் ஒன்று கட்டப்படும்.

●● முட்டுக்காடு கடற்கரையில் வருடம் முழுவதும் தண்ணீர் இருப்பதற்கு வசதியாக, கடற்கரை முகத்துவாரத்தைத் தூர் எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும், ஆண்டு தோறும் தண்ணீர் விளையாட்டுகள் (Water Sports) நடத்தப்படும்.

●● மகாபலிபுரம் கடற்கோயிலுக்கு அருகில் ஒரு சுற்றுலா வளாகம் உருவாக்கப்படும். திறந்தவெளி சிற்ப அருங்காட்சியகம் அமையும்.

●● பல்லவரின் கலைச் சிறப்பை உணர்த்துவதாகவும் நமது கைவினைப் பொருள்களின் மேன்மையைப் பிரதிபலிப்பதாகவும் சுற்றுலா மையம் ஒன்று காஞ்சிபுரத்தில் அமைக்கப்படும்.

●● "டெல்லியிலிருந்து ஜெய்சால்மர் வரை செல்லும் Palace on Wheels ரயில் வண்டி போல, சென்னையிலிருந்து மதுரைக்கு ஒரு வண்டி விடப்படும். ஆங்காங்கே உள்ள சுற்றுலாத் தலங்களைப் பயணிகள் பார்த்து விட்டு மறுபடியும் வண்டியில் பயணத்தைத் தொடரலாம். ஐந்து நட்சத்திர ஹோட்டல் வசதி இந்த ரயிலிலும் இருக்கும். மேலும் திருச்செந்தூர் அருகே உள்ள முத்தாரம்மன் கோயிலில் வருடம் ஒரு முறை நடக்கும் விழாவில் ஏராளமான கிராமிய கலைஞர்கள் பங்கு பெறுகிறார்கள். அந்த விழாவுக்கு அயல்நாட்டுப் பயணிகளை அழைத்துச் செல்லலாம்." இது சென்ற ஆண்டு சுற்றுலா அமைச்சர் கே.பி. கந்தசாமி கொடுத்த லேட்டஸ்ட் வாக்குறுதி.

"சுற்றுலாத் துறையில் திட்டங்கள் நிறைவேறாமல் இருப்பதற்குக் காரணம் நிதி நிலைமை அல்ல; அதற்கு ஒதுக்கப்படும் பணம் வேறு துறைகளுக்குத் திருப்பிவிடப் படுவதுதான்" என்றார் அரசு அதிகாரி ஒருவர். மேலும், எல்லா அரசுத் துறைகளையும் போல் இதிலும் ஏகப்பட்ட கோல்மால்கள்! ஆக, சுற்றுலாத் துறை வார்த்தை ஜாலங்களிலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது!

— ப்ரியன்.



• எஸ். தாணு

சினிமா சிறப்பிதழ்: வாசகர் போட்டி முடிவு

'டிக் போடலாம் பரிசு தட்டலாம்' என்ற தலைப்பில் வெளியான போட்டியில் விடைகளை டிக் செய்து உறையிலிட்டு ஸீல் செய்து எங்களுக்குத் தந்தவர், பிரபல சினிமா தயாரிப்பாளர், இயக்குனர், இசையமைப்பாளரான எஸ். தாணு. முடிவு தேதிக்குப் பிறகு உறையை உடைத்துப் பார்த்த போது அவர் டிக் செய்திருந்த விடைகள்:

(அ) பதினாறு வயதினிலே; (அ) பார்த்திபன்; (அ) ஷாம்லியின் நடிப்பு; (அ) மண்ணில் இந்தக் காதல் (அ) வீரப்பாவின் அட்டகாசச் சிரிப்பு (அ) இது எப்படி இருக்கு? (இ) அந்த ஏழு நாட்கள் (அ) திருவிளையாடல் நாகேஷ்.

மலையாகக் குவிந்த கூப்பன்களில் எட்டு விடைகளையும் சரியாக டிக் செய்து அனுப்பிய வாசகர்கள் மொத்தம் 13 பேர். பரிசுத் தொகையைப் பத்து ரூபாய் அதிகரித்து, ரூ.260 பகிர்ந்து இவர்களுக்குத் தலா ரூ.20 வீதம் அனுப்பப்படுகிறது.

பரிசு பெறுபவர்கள்: 1. எம். லட்சுமி, 17-A, 5வது குறுக்குத் தெரு, பரமசிவபுரம், லால்குடி — 621 601; 2. திருமதி எஸ். வேதநாயகி, 57, எஸ்.எம்.கே. ஆர். எம். வீடு, மீனாட்சிபுரம் சாலை, அரிமளம் — 622 201; 3. எம். குருமூர்த்தி, 44, பெருமாள் கோயில் தெரு, எட்டயபுரம் — 627 902; 4. ஜெ. பத்மா, 27, மேல சிந்தாமணி, திருச்சி — 2; 5. ஏ. ஆர். பாலசுந்தரம், ஸ்ரீராம் நிவாஸ், 28, பி.டி. காலனி, கவுண்டம்பாளையம் காலனி அஞ்சல், கோயமுத்தூர் — 641 030; 6. எஸ். ஜூலாவுதீன், 19, பழைய காவல் நிலைய வீதி, தாராபுரம் — 638 656; பெரியார் மா. வ.; 7. ஆர். ரமேஷ், 8-A, பழைய கார்கானா தெரு, திருவண்ணாமலை, 606 601; 8. திருமதி பி. எஸ். சம்பூர்ணம், அரசினர் தொடக்க நிலை சுகாதாரக் கேந்திரம், பவுஞ்சூர், செங்கை அண்ணா மா. வ. — 603 312; 9. மீனா பிரேம்நாத், 86-A, சாந்தி காலனி, 4 வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை — 600 040; 10. ஆர். மலர் விழி, 6, மாடி போர்ஷன், மேற்கு தெப்பக்குளம் தெரு, துறையூர், திருச்சி மா. வ. — 621 010; 11. ஜெயா வரதராஜன், 9-B/4, வி. ஜே. ஃப்ளாட்ஸ், சுப்பிரமணியம் அவென்யூ, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை — 600 041; 12. எஸ். சந்தான கிருஷ்ணன், 8, முதல் கிராஸ் தெரு, அண்ணா நகர், பம்மல், சென்னை — 600 075; 13. ஆர். பாண்டியன், மே/பா. ராக. டி. மீனாட்சிபுரம் அஞ்சல், தேவாரம் வழி, உத்தமபாளையம் வட்டம் — 626 530.

கல்கி

பொங்கல் வாழ்த்து!

விழா
மனிதருக்கு மட்டுமல்ல
மாட்டிற்கும் உண்டு என்னும்
குறிப்பு கண்டா இந்த
குழந்தைகளுக்குக் குதூகலம்!
கன்றுக்கா கற்பூர ஆரத்தி.
இல்லை, ஜீவ
காருண்யத்திற்கு அல்லவா!
பொங்குக பொங்கல்!

* வண்ணப்படம்: உத்ரா.

கல்கி

பொங்கல் வாழ்த்து!

அங்கயற் கண்ணி! ஆலவாய் அண்ணல்!
அழகிய தெப்பம்! அற்புதக் காட்சி!
பொங்கிடும் மகிழ்வில் மக்களின் கூட்டம்!
புவனமேல் இதைவிட வேறெதில் நாட்டம்!
அம்மை யப்பனின் அருளின் வண்மை
அனுதினம் பொங்கலாய் ஆக்கும் உண்மை!

* மதுரை மாரியம்மன் கோவில் தெப்போற்சவம்.
வண்ணப்படம்: வி. முத்துராமன்.





ஆகாசத் தாமரை

1

இந்திரா பார்த்தசாரதி

அவனுக்கு 'துருவ்' என்று ஏன் பெயர் வைத்தார்கள்? இது அப்பா விரும்பி வைத்த பெயர் என்று அவன் அம்மா அடிக்கடி கூறுவாள்.

புராண காலத்து துருவன், அவன் அப்பாவின் மடியில் உட்கார முடியாமல் போனதற்காகத் தன் இலட்சியத்தின் குறைந்தபட்ச எல்லை கடவுள் தரிசன மாகக் கொண்டு,— கடவுளைக் கண்டானோ இல்லையோ தெரியாது — இன்று நட்சத்திர மாக ஒளிர்கின்றான்.

வானம் தெளிவாக இருந்தது.

'நட்சத்திரங்களின் ஒளி நம்மை வந்த டைய கோடிக்கணக்கான வருஷங்களாகின் றன. ஆகவே நாம் இப்பொழுது பார்ப்பது அவை முன்பு அங்கிருந்த இடத்துக்கு அடை யாளமான ஒளியைத்தான். இல்லாத நட்சத் திரங்களைத்தாம் நாம் இன்று பார்க்கின் றோம்!

எல்லாமே பாவனை!

துருவ் 'பால்கனி'யில், உட்கார்ந்திருந் தான் — வானத்தைப் பார்த்துக் கொண்டே. அமைதியில் சூழ்நிலை போவது எவ்வளவு சுகமாக இருக்கிறது!

"துருவ்."

அவன் திரும்பிப் பார்த்தான்.

'ஹாலி'ல் அவன் அம்மா நின்று கொண் டிருந்தாள். அவள் குரலில் தெரிந்த கடுமை அவனுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

சிறு வயதிலிருந்தே அவன் பழகிவிட்ட 'கடுமை'

அம்மாவின் மீது ஒரு விநோதப் பார்வை யைச் செலுத்திவிட்டு, அவன் மீண்டும் ஆகாயத்தை நோக்கினான்.

இரண்டு நிமிஷங்களுக்கு முன்பு அவன் பார்த்த நட்சத்திரம் எங்கே?

அல்லது, பார்த்ததாக அவன் நினைத்துக் கொண்டானா?

தோற்றம், மறைவு ஆகிய எல்லாமே பார்வையின் நிறைகள், குறைகள்.

"துருவ்."

அம்மா இரண்டாம் தடவையாக அவனைக் கூப்பிட்டாள்.

"என்ன?"

"என் மேஜை மேலே ஒரு குறிப்பு வச்சிருந்தியே, அதுக்கு என்ன அர்த்தம்?"

"ஏன், புரியலையா? சந்தியா பேரிலே எனக்கு இனிமே 'இன்ட்ரெஸ்ட்' இல்லே, அவ்வளவுதான். அவ ஃபோன் பண்ணா, சொல்லிடு..."

சொற்களை மீறிய, பொருள் பொதிந்த மௌனத்தின் கனம், 'ஹாலை'ச் சுற்றிச் சூழ்ந்தது. அதை ஒரு இடப் பொருளாக உணர முடிவது போல் துருவ்வுக்குப் பட்டது.

பனிப் பாறையாய் இறுகியிருந்த மௌனத்தின் சிகரத்தைத் தகர்ப்பன போல், அவளிடமிருந்து மிக உஷ்ணமாய்ப் புறப் பட்ட சொற்கள் வெடித்துச் சிதறின.

"அயோக்கியனுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்? நீயா போய் அந்தப் பொண் ணோட பழகிட்டு, இப்போ எனக்கு அந்தப் பொண்ணு மேலே 'இன்ட்ரெஸ்ட்' இல் லேன்னா என்ன அர்த்தம்? சந்தியா என்ன பொம்மையா, இஷ்டமிருந்தா நீ விளையா டுவே, இல்லாட்டா தூக்கி எறிவியா? வாட் டு யு திங்க் ஆஃப் யுவர்செல்ஃப்?"

அவன் பதில் சொல்லவில்லை.

அவன் 'பால்கனி'யில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த நிலையினின்று மாறி எழுந்து நின்றான்.

அவன் நல்ல உயரம். அவன் அம்மா மஞ்சுளாவும், இந்தியப் பெண்களின் சராசரி உயரத்துக்கு அதிகமென்று தான் சொல்ல வேண்டும். அவன் அருகே வந்து மஞ்சுளா அவன் தோளைப் பரிவுடன் தொட்டுப் பேசினாள்: "சந்தியா உன்னைப் பத்தி என்ன நினைச்சுப்பா?"

"மற்றவர்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றி நான் எப்பொழுதாவது கவலைப்பட் டிருக்கேனா? யு நோ இட்," என்றான் துருவ்.

"இப்போ அவள் பேரிலே உனக்கு ஏன் 'இன்ட்ரெஸ்ட்' இல்லே?"

அவன் மௌனமாக நின்றான்.

"வாட் ஹாப்பென்ட்?" என்றாள் மஞ்சுளா.

துருவ் 'ஹாலை'க் கடந்து சென்று தன்னறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

மஞ்சுளா என்ன செய்வதென்று அறி யாமல் சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

என்ன பிள்ளை இவன்!

இவன் அப்பா பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இவனையும், அவர் நிர்வகித்து வந்த

தொழில் நிறுவனத்தையும் இவள் பொறுப்பில் விட்டுப் போய் விட்டார்.

பெண் தொழிலதிபர் என்ற முறையில் பல பிரச்னைகளை அவள் எதிர்நோக்க வேண்டியதாயிற்று. அவள், ஏமாற்றவிருந்த பலருடன் போராடி, தொழில் நிறுவனத்தின் லாப வரைகோடு சிகரத்தை எட்டும் படி அயராது உழைத்தாள். பங்குதாரர்கள் அனைவருக்கும் சந்தோஷம்.

ஆனால், இன்னொரு பொறுப்பாகிய துருவ்?

சின்ன வயதிலிருந்தே அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆறாவது வயதில், சதுரங்கம் ஆடக் கற்றுக் கொண்டு, ஒன்பதாவது வயதில் தில்லி சாம்பியனானான்.

சாம்பியனான அன்றுதான் அவன் கடைசி ஆட்டம் ஆடினான். அப்புறம் அவன் ஆடுவதேயில்லை.

இது அவன் அப்பாவுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அவனுக்குத் தொடர்ந்து விளையாட ஏன் இஷ்டமில்லை என்று கேட்டுப் பார்த்தார்.

அவன் பதில் கூறவில்லை.

வயதுக்கு மீறிய புத்தகமொன்றைப் படிப்பதில் ஆழ்ந்திருந்தான். அவளுக்குக் கோபமாக வந்தது.

புத்தகத்தைப் பிடுங்கி எறிந்தாள். அவன் புன்னகை செய்ததுதான் அவளுக்கு இன்னும் எரிச்சலைத் தந்தது.

அவன் அப்பா சொன்னார்: 'நீ செய்யறது தப்பு, மஞ்சு... அவனைப் பதில் சொல்லுன்னு நம்மாலே கட்டாயப்படுத்த முடியாது!'

அவர் போகும் போது ஆஸ்பத்திரியில் பலஹீனக் குரலில் சொன்னது, அவள் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது:

'துருவ் ஈஸ் எ ப்ராடிஜி. டேக் கேர் ஆஃப் ஹிம்.'

'ப்ராடிஜி'க்குப் பதிலாக ஒரு சராசரி கெட்டிக்காரப் பிள்ளை பிறந்திருக்கக் கூடாதா?

'இன்ஜினியரிங்' படித்தான். கடைசி வருஷம் கல்லூரிக்குப் போவதை நிறுத்தி விட்டான். கம்ப்யூட்டர், கார் மெக்கானிஸம் எல்லாம் அவனாகவே கற்றுக் கொண்டவை.

இசையறிவும் அவனுக்கு இயல்பாகவே வந்தது. முதலில் வாய்ப்பாட்டு... பிறகு வீணை.

அவன் தன்னறையில் வீணையில் வாசிக்கும் சப்தம் கேட்டது. அந்நாதம், மெல்லிசையாகக் காற்றில் கலந்து அவள் மனத்தை நெகிழ்வித்தது.

காபி ராகம்... என்ன சுகமான ஆலாபனை! அவனே அந்த ராகத்தில் கரைந்து விடுபவனைப் போல் என்ன அருமையாக வாசிக்கிறான்!

அவனுடைய இந்தத் திறன் மற்றவர்களுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காக அவள் ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்தாள்.

முதலில் மறுத்தவன், பிறகு ஒப்புக் கொண்டான்.

கமானி ஆடிட்டோரியத்தில், அவள் இதற்காகச் செய்த விளம்பரத்தின் காரணமாகக் கூட்டம் பொங்கி வழிந்தது.

புகழ்பெற்ற இசை விமர்சகர்களும் வந்திருந்தார்கள்.

'ஹம்ஸத்வனி'யில் தொடங்கியவன், ஆலாபனையைப் பாதியில் நிறுத்திவிட்டு, கல்யாணிக்குத் தாவினான்.

நிஷாதத்தில் சுருதி பிசகாமல் அற்புதமாக நின்று இளைப்பாறியவன் அனைவரும் மெய்மறந்திருக்கும் அச்சிரஞ்சீவி கணத்தில், திடீரென்று வாசிப்பதை நிறுத்தினான்.

எத்தனை நேரந்தான் ஜனங்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியும்?



கச்சேரி கலவரத்தில் முடிந்தது. அதற்குப் பிறகு அவன் தனக்குத்தானே வாசித்தானே தவிர, வேறு யாருக்காகவும் வாசிப்பதில்லை.

காபி ராக ஸ்வரங்கள், தேவர்கள் பூக் கூடைகளைக் கவிழ்ப்பது போல், உதிர்ந்து கொண்டிருந்தன:

திடீரென்று இசை நின்றது. அவள் எதிர்பார்த்ததுதான்.

அவன் தன்னைத்தானே வருத்திக்கொள்கின்றானா? அவன் தன்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். ஆனால் சந்தியாவுடன் பழகிவிட்டு, அவளிடம் இப்பொழுது தனக்கு 'இன்ட்ரெஸ்ட்' இல்லை என்று சொல்வது பெரிய துரோகம்.

அந்தப் பெண்ணின் அழகுக்கும், அறிவுக்கும், அந்தஸ்துக்கும் அவள் கவனத்தைக் கவர்வதற்காக எத்தனை பேர் காத்துக் கொண்டிருப்பார்கள்! பழைய காலமாக இருந்தால், ஒரு ராஜகுமாரனே, வெள்ளைக் குதிரையில் வந்து அவளைத் தூக்கிக் கொண்டு போயிருப்பான்!

துருவ் சந்தியாவிடம் ஈடுபாடு கொண்டது ஓர் எதேச்சையான சம்பவம். அவன் அவளை ஒரு கருத்தரங்கில் பார்த்திருக்கிறான்.

இரண்டாம் முறை பார்த்த போது, அவள் அவனைக் கருத்தரங்கில் பார்த்ததை மறந்து போய் விட்டாள்.

அவனாகவே அவளை மறுபடியும் நாடிச் சென்றிருக்கிறான்.

இங்குதான் தொடங்கியது அவர்களுடைய நட்பு.

நேற்றும் அவளைப் பார்த்திருக்கிறான். இன்று ஏன் இந்த மனமாற்றம்?

சந்தியா இவனை விரும்புவாளா இல்லையா என்பது பற்றி மஞ்சுளாவுக்குச் சந்தேகமாகத்தானிருந்தது.

நல்ல கெட்டிக்கார அழகான பெண், ஓய்வு பெற்ற உயர்தர ராணுவ அதிகாரியின் மகள் — அவளுக்கு நல்ல பையன் கிடைப்பதா கஷ்டம்?

துருவ் வாழ்க்கையில் என்ன செய்திருக்கிறான், உருப்படியாக?

இந்தக் காலத்துப் பெண்கள், வெற்றிப் படியில் முதலாவதாக நிற்கும் ஆண்களைத் தானே தேர்ந்தெடுப்பார்கள்? அதுதானே அவர்களுக்கு இயல்பான காரியம்?

ஆனால் சந்தியாவும், துருவ்வை விரும்புவது போல் அவளுக்குத் தெரிந்த போது, அவள் அடிமனத்தில் ஒரு நெருடல் ஏற்பட்டது.

துருவ் அவளுக்கேற்ற கணவனா? இத்திருமணம் தோல்வியுற்றால், அது துருவ்வை எந்த வகையில் பாதிக்கும்? ஆனால், எந்தப் பெண்ணையும் ஏறிட்டுப் பார்க்காத அவன், சந்தியாவுடன் பழகியது அவளுக்குச் சந்தோஷமாகத்தானிருந்தது. சந்தியா சமூகப் பிரச்னை தீர்வுகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பெண். இருவரும் இதுவரை நன்றாகவே பழகினார்கள்.

இவ்வளவு பழகிய அவளிடம் இப்பொழுது ஈடுபாடில்லை என்றால் அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா?

சந்தியாவைப் பார்த்தால் இதனால் பெரிய அளவில் பாதிக்கப்படக் கூடிய பெண்ணாகத் தோன்றவில்லை என்பது உண்மைதான். எதைப் பற்றியும் சிந்தித்துத் தீர்மானமான முடிவை எடுக்கக் கூடிய பெண்.

ஆனால் நஷ்டம் இவனுக்குத்தான். தன்னால் முடியாததை அந்தப் பெண்ணால் செய்ய முடியுமென்று மஞ்சுளா நம்பினாள். மேதைத் தனத்தைக் கருவறையில் பூட்டி வைப்பது சமூக விரோதச் செயல்.

சந்தியாவிடம் ஈடுபாடு கொண்டவன், அவள் வார்த்தைக்கும் கட்டுப்படுவானென்றுதான் மஞ்சுளா எதிர்பார்த்தாள்.

ஆனால்...

இப்பொழுது இப்படிச் சொல்லுகிறானே!

அவன் அறைக்குச் சென்று கதவைத்





"கறுப்புப் பூனை மெய்க் காப்பாளருடன் சென்று கொண்டிருக்கிறாரே! அவர் யார்? அமைச்சரா?"

"இல்லை. தொலைக்காட்சி நாடகங்களில் நடிப்பவர். பொதுமக்களிடமிருந்து பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம்!"

— என். சிவராமன்.

தட்டிப் பார்க்கலாமா என்று யோசித்தாள்.

அப்பொழுது 'இன்டர்காம்' ஒலித்தது. அவள் எடுத்தாள்.

"எஸ்..."

"பம்பாயிலிருந்து ஃபோன், கொடுக்கட்டுமா?" என்றான் ராமலிங்கம், கீழே அலுவலக அறையிலிருந்து.

"நீ இன்னும் போகலியா?"

"மத்தியானம் மேனேஜர் சொன்னார், ராத்திரி பம்பாயிலிருந்து ஃபோன் வரலாம், வீட்டுக்குப் போயிடாதேன்னு. காத்திட்டிருந்தேன்."

"சரி... ஃபோனைக் கொடு."

பம்பாயில் ரிஸர்வ் பாங்க் ஊழியர்களின் மின்னல் வேக வேலை நிறுத்தம். வேலைகள் ஸ்தம்பித்துக் கொண்டிருக்கின்றன. நாளைக்குள் அவளுடைய தொழில் நிறுவனமொன்றில் முக்கிய 'ப்ராஜெக்ட்'டுக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணி ஒப்புதல் கிடைப்பதென்பது கஷ்டந்தான். நாளைக் காலை முதல் காரியமாக, மத்திய அரசாங்க நிதித் துறையின் மிகுந்த உயர்மட்டத்தில் அவள் பேசினால்தான் காரியம் நடக்கும். பேசி முடித்த பிறகு டில்லியிலிருந்து பம்பாய்க்கு 'டெலெக்ஸ்' உடனே அனுப்பினால்தான், தொடர்ந்து செய்ய வேண்டிய காரியங்களைக் கவனிக்க முடியும்.

இதுதான் பம்பாயிலிருந்து அவளுக்கு வந்த தகவல்.

அவள் கீழே இறங்கிச் சென்றாள்.

ஆஃபீஸ் துரித கதியில் இயங்கிற்று. டெலிஃபோன் எண்கள் சுழன்றன.

ஒரு மணி நேர முயற்சிக்குப் பிறகு, அவள், அடுத்த நாள் காலை பத்து மணிக்கு நிதித் துறைச் செயலரை அவருடைய அலுவலக அறையில் சந்திப்பதென்பதாக ஏற்பாடாயிற்று.

அவள் சோர்ந்த நிலையில், நாற்காலியில் சாய்ந்தவாறு கண்களை மூடிக்கொண்டாள்.

இந்த நாட்டுக்கு எதிர்காலம் உண்டா? எதற்கெடுத்தாலும் லஞ்சம்! நாலைந்து நாட்களுக்கு முன்பு அவள் செய்தித்தாளில் படித்தது, அவள் நினைவுக்கு வந்தது.

ஏதோ ஓர் ஊரில் ப்யூன், முப்பது ரூபாய் லஞ்சம் வாங்கியதாகக் கையும் களவுமாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவனை உடனே வேலையினின்றும் நீக்க உத்தரவிட்டாராம் உயர்தர அதிகாரி!

என்ன நேர்மை, என்ன கண்ணியம்! இப்பொழுது அரசியல், சமூகச் சூழ்நிலையில், இந்தச் செய்தி நகைச்சுவையாகத்தான் படுகிறது!

அவள் கண்களைத் திறந்தாள். ராமலிங்கம் நின்று கொண்டிருந்தான்.

"ஐ ஆம் ஸாரி. நீ போகலாம், ராமலிங்கம்."

"இன்னொரு ஃபோன்லே மிஸ் சந்தியா பேசினாங்க... உங்களை 'ஃபோன்' செய்யச் சொன்னாங்க..."

"ஐ ஸீ... எப்போ ஃபோன் பண்ணினா?"

"அரை மணி ஆச்சு... நீங்க 'பிஸி'யாயிருக்கீங்கன்னேன். 'ஃப்ரீ' ஆனப்புறம் ஃபோன் பண்ண முடிஞ்சா, பண்ணச் சொன்னாங்க."

"தாங்க் யூ... நீ போகலாம்... கார்த்தாலே எட்டரை மணிக்கு வந்துடு..."

"சரிம்மா..."

ராமலிங்கம் போனதும், மஞ்களா சந்தியாவுக்கு ஃபோன் செய்தாள்.

"எஸ்... சந்தியா..."

"நான்தான்... 'ஃபோன்' பண்ணியா?"

சில விநாடிகள் மௌனம். பிறகு சொன்னாள்: "ஆமாம்... துருவ் சாயந்திரம் வரப் போறதாச் சொன்னார், வரல்லே. நான் ஃபோன் பண்ணினேன், அம்மாவோட பேசிக்கச் சொல்லுன்னாரே, வாட் ஈஸ் ஹிஸ் ப்ராப்ளம்?"

"ஹி ஈஸ் ஹிஸ் ஓன் ப்ராப்ளம்... தனக்குத் தானே பிரச்னையாக இருக்கிறவனோட என்ன செய்ய முடியும்?"

"என்ன சொல்றீங்க, ஆன்ட்டி?"

"யு நோ துருவ்..."

"தெரியாது... தெரிஞ்சுக்கப் பாக்கறேன், அவ்வளவுதான்."

"சந்தியா... யு ஆர் எ நைஸ் கேர்ள். என் பிள்ளைகிட்டே கூட இல்லே, உன் பேரிலேதான் எனக்குப் பரிவு ஜாஸ்தி. நான் சொல்றபடி கேக்கறியா?"

"என்ன ஆன்ட்டி?"

"துருவ் உனக்குத் தகுதியானவனில்லே. ஹி ஈஸ் நோ குட் ஃபார் யூ... அவனை மறந்துடு."

சந்தியா சிரித்தாள்.

(தொடரும்)


"கூடுதல் எடையைக் குறைத்தேன், வேறெந்த இழப்பும் இன்றி!"
Complan
"காம்ப்ளானுக்கு நன்றி"
எடையைக் குறைப்பதற்கு 'டயெட்டிங்' செய்யலாம். ஆனால் அதே சமயம் ஊட்டத்தை இழக்கக்கூடாது. பருகுவீர் காம்ப்ளான் திட்டமிட்ட பரிபூரண உணவு. உங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து 23 இன்றியமையாத ஊட்டச்சத்துக்களும் அடங்கியதாகும் காம்ப்ளான். தினமும் காம்ப்ளான் பருகுவீர். நல்ல ஆரோக்கியத்தைப் பெறுவீர்.
Complan
23
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/21/202 TAM

அவங்க நம்ம ஊரு பொண்ணுங்க



ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என்கிற ஆதார நூலில் தொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்.

நிழலான காரியங்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்ட கிராமத்துப் பெருந்தனக்காரன். அவனுடைய நடவடிக்கைகள் அனைத்திலும் துணை நிற்கும் ஆணவக்காரியான அவன் மனைவி. இவர்களுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறார்கள் விஜியும் அவருடைய தோழிகளும்.

தங்கள் லட்சிய நோக்கை அடைவதற்காக அவர்கள் கராத்தே பாணியில் அடித்து நொறுக்க. அவர்களை எதிர்க்கும் ஒவ்வோர் ஆணும் அடி தாங்காமல் முதுகு காட்டி ஓடுகிறான்!

சூழ்ந்து கொள்ளும் அடியாட்களை ஒரே நேரத்தில் சமாளித்து ஓட ஓட விரட்டுவது தமிழ்ப் படக் கதாநாயகனின் தனி உரிமையல்ல என்று நிரூபித்திருக்கிறார் விஜி. நீண்ட நாட்களுக்குப்பின் தோற்றம். இது அவருக்கு ஒரு நல்ல திருப்பம்.

சம்பவாமி யுகே யுகே பாணியில் அவ்வப்போது அக்கிரமத்துக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்துவதோடு நில்லாமல் இடையிடையே அந்த அப்பாவிக் கதாநாயகனைக் (பாவம்!) காதலிக்கவும் செய்கிறார்.

குடும்பத்தின் முன் விரோதம் காரணமாக விஜியை ஒதுக்கித் தள்ளிவிட்டு வேறு இடத்தில் அவனுக்கு மண முடிக்க அவனுடைய அன்னை மனோரமா மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்க விஜி அண்ட் கோ எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் களை.

தெறித்து விழாமல் கட்டுக்குள் அடக்கி வைத்துள்ள ஆணவத்தைப் பிரதிபலிக்கும் நடிப்பில் மனோரமாவின் தனி முத்திரை. துணை நிற்பவர், இரட்டை அர்த்த வசனத்தில் இனைக்கும் எஸ்.எஸ். சந்திரன்.

இடம் பெற்றுள்ள பாத்திரங்கள் பதினேழு என்றாலும் குழப்பமில்லை. அவரவர் வட்டத்தில் அவரவருக்கென்று தனித் தனி வாய்ப்பு. குறிப்பாக, செல்வமாக வரும் கங்கா.

பெருந்தனக்காரனின் அனுசரணையான பேச்சில் மயங்கி, அவன் செய்யும் உதவிகளில் அடிபணிந்து போய், தன்னுடைய புது மனைவிக்குப் பரிசளிக்கப்படும் புடைவை – நகைகளில் மனம் நெகிழ்ந்து போய், புலி பதுங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் கிட்டத்தட்டக் கொத்தடிமை நிலையை எட்டிவிடும் அவர், தன் தந்தையைப் போலக் கருதிய அந்தப் பெருந்தனக்காரன் தன் மனைவி மீதே குறி வைத்து விட்டான் என்பதைப் புரிந்து கொண்டதும் எதிர்த்துப் போராடி, அதன் காரணமாக உயிரையே விடும் போது சம்பாதித்துக் கொள்வது அனுதாபம்.

நீண்ட இடைவெளிக்குப் பின் இயக்குனர் காஜாவின் படம்.

கதையின் அடிப்படை நோக்கம் பெண்ணின் பெருமை என்றாலும் அதை அடைவதற்கான வழிமுறை இரட்டை அர்த்த வசனங்களில் கொச்சைப் படுத்தப் பட்டுத் தடம் மாறிப் போய்விடுகிறது.

— டி. ஆர். கே.

வட்டமேஜை

'நமக்குத்தான் இன்னும் வேளை வரவில்லை!'

• தங்கவயல் தமிழர்களின் கண்ணீர்க் கதை நெஞ்சத்தை உலுக்கியது. தமிழ்நாட்டில் அரசு சார்பாகத் தொடங்கப் பெறும் புதிய தொழிற்சாலைகளில் இவர்களுக்கு முன்னுரிமை தந்து வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம். அல்லது கர்நாடக அரசை அவ்வாறு செய்யுமாறு வற்புறுத்தலாம்.

சென்னை — 92, இ. ராஜகோபால்.

• நஷ்டத்தின் காரணமாக அரசு கோலார் தங்க வயலை மூடிவிட நினைத்தால், எத்தனையோ துறைகளை (உதாரணம் — இரயில்வே) இழுத்து மூட வேண்டி வரும். தமிழர்களின் வயிற்றில் அடிக்கும் இந்தப் பாதகச் செயலுக்குத் தமிழினத் தலைவர் முதல்வர் கலைஞர் கண்டிப்பாகக் குரல் கொடுக்க வேண்டும்.

சேலம் — 3, என். உமேஷ்.

• 'கல்கி'யில் வெளிவந்த "தங்க வயல் தமிழர்களின் கண்ணீர்க் கதை" மிகவும் பரிதாபகரமாக இருந்தது. தமிழினத் தங்கத் தலைவர் தங்களைச் சந்திக்காமல் கோபாலபுர வாசலில் காக்க வைத்தாலும், தங்கள் நலனுக்காகக் குரல் கொடுப்பார் என நம்பிக் கொண்டிருக்கும் தங்கவயல் தமிழர்களுக்கு அவர் நிச்சயம் ஏதாவது செய்ய வேண்டும்.

கோவை, கே. ஆர். விஜயா.

• மழையையும், மலேரியா நோய்க்கு மருந்தையும் தருகின்ற சின்கோனா மரங்களை அழித்துவிட்டு, பணத்துக்கு ஆசைப்பட்டுத் தேயிலைத் தோட்டத்தை அரசாங்கமே வளர்க்க நினைப்பது, வேலியே பயிரை மேயும் கதைதான்!

இலால்குடி, எம். இராஜேந்திரன்.

• க. சமுத்திரம் எழுதிய கதை படித்தேன். நமது அரசு நிர்வாக இயந்திரம் எவ்வளவு முடங்கிய நிலையில், பயனற்ற முறையில் செயல்படுகிறது(!) என எண்ணித் தலையில் கைவைத்துக் கொண்டேன்!

சென்னை — 28, எம். தியாகராஜன்.

• ஸ்ரீவத்ஸன் எழுதிய 'பிழைக்கத் தெரியாதவன்!' சிறுகதை மற்ற ஒரு பக்கக் கதைகள் போலத்தான் இருக்கும் என்றெண்ணிப் படித்தேன். எதிர்பாராத இறுதித் திருப்பத்தைப் படித்தபின்தான் 'குட்டிக்கதை என்றால் இதுதான்!' என்று பாராட்டத் தோன்றியது.

சென்னை — 82, எஸ். யோகலிங்கம்.

• இந்து — முஸ்லிம் — ஒற்றுமை உருக்குலைந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், இஸ்லாமியப் பெரியவருக்காகக் கட்டப்பட்டுள்ள இந்துக் கோயிலைப் பற்றிப் படத்துடன் வெளியிட்டு, ஒற்றுமையைப் பேண உதவும் கல்கிக்கு ஓராயிரம் நன்றிகள்!

திருவெண்ணெய் நல்லூர், நந்தன்பாலா.

• இவ்வார அட்டைப்படத்தைப் பார்த்தவுடன் எனக்கு இன்ப அதிர்ச்சி! தெருக்கள் தோறும் STD வசதி அமைத்துத் தருவது குறித்து இரண்டு மாதங்களுக்கு முன் நான் கல்கிக்கு எழுதியிருந்தேன். என் பெயர் வாசகர் யோசனையில் இடம்பெறாவிட்டாலும் வருத்தமில்லை... அதுபற்றிய நல்ல கட்டுரை வெளிவந்துள்ளதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை — 8, பொருசி.

• கல்கி 30.12.90 இதழில் ஒளிப்பதிவுக்காகத் தேசிய விருது பெற்ற ஒளிப்பதிவாளர் பற்றிய குறிப்பு வெளியாகியுள்ளது. ஒரு சிறு திருத்தம்: அவரது பெயர் மார்கஸ் பார்ட்லே (Marcus Bartley); மார்கஸ் 'பிராட்லே' அல்ல.

சென்னை — 86, முகுந்தன்.

• காதலைப் பெண்கள்தான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது என் கருத்து. அதைக் "கல்கி"யின் போட்டி நிரூபித்துவிட்டது. பரிசு பெறும் நால்வரில் மூவர் பெண்களாயிற்றே!

மதுரை — 1, கே. ஆர். உமாதேவி.

• மத்திய அரசு எவ்வளவுதான் வரிகளைச் சுமத்தினாலும் அது பணக்காரர்களையும், அரசியல்வாதிகளையும் பாதிக்காமல், இறுதியில், ஏழைகளின் தலையிலேயே விடியும் என்பதை, ஆதாரத்தோடு எடுத்துக்காட்டிய தலையங்கம் வெகு அற்புதம்.

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

• ஒவ்வோர் அரசாங்கமும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறதோ இல்லையோ... கொடுக்காத வாக்குறுதி ஒன்றைத் தவறாமல் நிறைவேற்றுகிறது. அது இந்த "வரிமேல் வரி விதித்து" மக்களை இம்சிப்பதே...

மேலப்பட்டி, 'விழியரசி'

• நமது அண்டை நாடாகிய ஸ்ரீலங்கா அரசுடைமையாக்கப்பட்டு வரும் எல்லாத் தொழில்களையும் தனியார் வசம் ஒப்படைக்க ஆரம்பித்து விட்டது. (ஆதாரம்: தமிழ்நாட்டில் வெளிவந்த செய்திக் கட்டுரை)

பொதுவுடைமை விஷயத்தில் நமது குருவாகிய சோவியத் யூனியன் 500 நாட்கள் கெடு வைத்துள்ளது — தனியார் துறைக்குத் தொழில்களை மாற்றி விடுவதற்கு. அதிசயம் என்னவென்றால் USSR என்ற சோவியத் ரஷ்யாவின் பெயரிலிருந்து கூட சோஷலிஸ்ட் என்ற பெயரையே ஒழித்து விடுவதில் தீவிரம் காட்டினார் அதிபர் கோர்பசேவ்!

"காபிடலிசம்," "முதலாளித்துவம்" என்பவை ஒரு காலகட்டத்தில் கெட்ட வார்த்தைகளாகக் கருதப்பட்டன. இப்போது, Free Market Economy என்ற புதிய நாமகரணத்துடன் ராஜாஜியின் கொள்கையான சுதந்திரப் பொருளாதாரம் உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கிறது. ஹூம்! நமக்குத்தான் இன்னும் வேளை வரவில்லை! சோஷலிசத்தைப் பூண்டோடு ஒழித்தால்தான் அதிக வரிவிதிப்பும், அரசு மான்யங்களும் ஒழிந்து உண்மையான சுபிட்சம் நிலவும். ஹூம்!

சென்னை — 40, எஸ். அனந்தராமன்.



துவளிவு

பானுமதி ராஜகோபாலன்

வீட்டுக்குள் நுழைந்த போது ஒரு கட்டு தபால்கள் மேசைமேல் என்னை எதிர் கொண்டழைத்தன.

ஆவலுடன் சரசரவென ஒவ்வொன்றாகத் தள்ளியபோது நான் எதிர்பார்த்த இந்திய உறையும் இருந்தது. தாய் நாட்டுக்கும் எனக்குமுள்ள ஒரே நூலிழை இந்தத் தபால்கள் மட்டும் தான்.

வேகமாகப் பிரித்தேன். அண்ணா பிள்ளை ரமேஷ்தான். அவன் கடிதம் என்றாலே எனக்கு ஒரு சுவாரசியம். என்னைப் போலவே அவனும் கல்லூரிப் படிப்புடன் காதலையும் சேர்த்துக் கொண்டிருந்தான்.

என்னுடையது பழங்கதை. இருபத்திரண்டு வருஷம் கடந்த சோகக்கதை. ரமேஷின் காதல் புத்தம் புதிய அரும்பு.



ரமேஷ் ரொம்ப உருக்கமாக எழுதியிருந்தான்.

''சித்தப்பா! எங்கள் காதலைப் பற்றிப் பல முறை உங்களிடம் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். மணந்தால் உமாவையே மணப்பது என்ற தீவிர முடிவில் இருக்கும் போது அப்பா எனக்காக வேறு இடங்களில் பெண் தேடுகிறார். என்னையும் வேறு பெண் பார்க்க அழைக்கிறார். என் கதையும் உங்கள் கதையாக ஆகிவிடுமோ எனப் பயமாக இருக்கிறது. அப்பாவிடம் தெரிவிக்கவும் தயக்கமாக இருக்கிறது. நீங்கள் ஒரு முறை இங்கு வந்து அப்பாவிடம் எனக்காக வாதாட வேண்டும். தை முடிவதற்குள் என் கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்று ஒரே முயற்சியாக இருக்கிறார் அப்பா. ப்ளீஸ் என் எதிர் காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது சித்தப்பா...''

கடிதத்தைப் பார்க்க என் மனம் பதறியது. கடிதத்தின் மேலுறையைக் கவனித்தேன். இருபது நாட்களுக்கு முந்திய தேதி. கிட்டத்தட்ட ஒருமாதமாகவே நான் அமெரிக்காவில் இல்லையே. தை முடியப் பத்து நாட்கள் தானே இருக்கிறது. இதற்குள் அண்ணா ஏதாவது முடிவு செய்திருப்பானோ?

பார்க்காத கடிதக்கட்டுகளை அலசினேன். மேலும் ஓர் இந்திய கவர் அண்ணா கையெழுத்துடன் வெளி வந்தது. பரபரப்பாகப் பிரித்தேன். சுற்றிலும் மஞ்சள் தடவி நடுவில் அண்ணாவின் எழுத்துகள்.

''சிரஞ்சிவி ரகுவுக்கு ஆசீர்வாதம். உபய க்ஷேமம். இப்பவும் சிர. ரமேஷுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது. வருகிற பிப்ரவரி பத்தாம் தேதி முகூர்த்தம் வைத்திருக்கிறது. பெண் இந்த வருஷம் மெடிகல் முடிக்கிறாள். இவனும் எம்.பி.பி.எஸ். முடித்து விட்டு ஹவுஸ் சர்ஜனாக இருக்கிறான். பெண் வீட்டில் நல்ல வசதி. நிறையச் செய்கிறார்கள். ஜாதகம் முதல் எல்லா விஷயங்களும் நமக்கு ஒத்து வருகிறது. நீ அவசியம் கல்யாணத்துக்கு வர வேண்டும்....''

இந்தக் கடிதம் வந்து இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தது. ஆக அண்ணா, ரமேஷ் பயந்தபடியே தைக்குள் பெண் பார்த்து முகூர்த்தம் வைத்தும் விட்டான். ரமேஷின் மனம் இப்போது எப்படி துடித்துக் கொண்டிருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது.

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன் நான் இருந்த நிலையும் இதேதானே. ஒரு சின்ன திருத்தம். கல்யாணம் நிச்சயமானது எனக்கல்ல. நான் உயிருக்குயிராகக் காதலித்த நிர்மலாவுக்கு.

அதற்கு முன் என் வீட்டிலும் நிர்மலா வீட்டிலும் நடந்த போராட்டங்கள் எழுதி மாளாது.

''டாக்டராகி நிறையச் சம்பாதிக்கப் போறே இல்லே! அந்த பேராசை. காதல்னு சொல்லி உன்னை இழுத்து வளைச்சுக்கப் பார்க்கறா!'' என்று எகிறினார் என் தந்தை. நான் உறுதியாக நின்றேன்.

''இதோ பாருடா. அசட்டுப்பிசட்டுனு அந்தப் பொண்ணு கழுத்திலே தாலி கட்டி இந்த வீட்டுக்குள்ளே அழைச்சிண்டு வந்தே.... என் பொணத்துக்குத்தான் நீ நமஸ்காரம் பண்ணணும்,'' என்று அழுகையுடன் மிரட்டினாள் அம்மா.

அப்பா அம்மாவை எதிர்க்க முடியாமல் மூன்று வயதுக் குழந்தை ரமேஷைத் தூக்கிக் கொண்டு நின்ற அண்ணாவின் தவிப்பு. பக்கத்தில் மிரள மிரள விழித்தபடி மன்னி.

தலை குனிவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை அப்பொழுது. நடைப்பிணமாக ஆஸ்பத்திரிக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். நிர்மலாவை என் கண்ணிலேயே காட்டவில்லை அவர்கள் வீட்டில். கேள்விப் பட்டதில் நிர்மலாவும் அவள் வீட்டில் போராடிக் கொண்டிருப்பதாகத் தான் தெரிந்தது. இருந்தும் என்னால் துணிந்து எந்த முடிவுக்கும் போக முடியவில்லை.

நிர்மலாவுக்குப் பலவந்தமாகக் கல்யாணம் செய்து காரைக்கால் அனுப்பிவிட்டார்கள் எனத் தெரிந்து உடைந்து போனேன். டியூட்டிக்குப் போகாமல் லீவு போட்டு விட்டு வீட்டிலேயே முடங்கிக் கிடந்தேன்.

ஒருநாள் அண்ணா விகவம் ஒரு பேப்பரைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான். ''டேய் ரகு! இந்த நியூசைப் பாருடா...'' என்றான் பதற்றத்துடன்.

அசுவாரசியமாகப் பார்த்தவன் நெருப்பை மிதித்தது போல் துள்ளி எழுந்தேன்.

''காரைக்காலைச் சேர்ந்த இளம் பெண்

நிர்மலா தீயில் கருகிச் சாவு. சமைக்கும் போது சேலையில் தீப்பற்றிக் கொண்டது. அவளுக்குத் திருமணமாகி ஒரு மாதமே ஆகிறது.'

நெஞ்சு வெடித்தது போல் கதறத்தான் முடிந்தது என்னால். சுத்தமாக நொறுங்கியே போனேன். என் நிலை கண்டு பயந்தே போனான் அண்ணா விசுவம்.

தயக்கத்துடன் ஒரு நீண்ட உறையை நீட்டினான். "ரகு! இதிலே இருக்கிற அப்ளிகேஷன்லே கையெழுத்துப் போடு. அமெரிக்காவிலே இருக்கிற ஒரு யுனிவர்சிடிக்கு உனக்கு மேல் படிப்புக்காக அப்ளிகேஷன் எழுதியிருக்கேன். உனக்கு நிச்சயம் சீட் கிடைக்கும் ரகு.'

அமெரிக்காவில் படிக்க எனக்கு சீட் கிடைத்தது. அப்பொழுது அமெரிக்கா வந்தவன்தான். படித்து முடித்து வேலை தேடிக் கொண்டு அமெரிக்காவிலேயே செட்டில் ஆகிவிட்டேன். அப்பாவும் அம்மாவும் அண்ணாவும் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லிக் கடிதம் மேல் கடிதமாகப் போட்டு அலுத்துப் போனார்கள். காலப் போக்கில் ஒருவர் பின் ஒருவராகப் போய்ச் சேர்ந்தார்கள்.

குடும்பத்தில் நான் ஒருவன், துணிவு இல்லாததால் இந்தச் சோகத்துக்குப் பலியானது போதும். ரமேஷாவது இஷ்டமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும். அதற்காகப் போராடுவதே என் ஒரே வேலை என்ற வெறியோடு கிளம்பினேன்.

விமான நிலையத்தில் என் அண்ணா எதிர்கொண்டான். ஆரத்தழுவிக் கண்ணீர் விட்டான். காரை விட்டு இறங்கி வீட்டுக்குள் நுழையும் போது மன்னி ஓடி வந்தாள்.

ரமேஷைக் காணாமல் என் மனம் தவித்தது.

"ரமேஷ்! எங்கேண்ணா?" என்று கேட்டேன்.

"புது மாப்பிள்ளை எங்கேயோ போறதுக்காக டிரஸ் பண்ணிண்டிருக்கார். மாடியிலே தான் இருப்பார்."

உடனே மாடிக்குத் தாவினேன். இதோ வந்து விட்டேன் ரமேஷ். எப்படியும் உன் காதலை நிறைவேற்றி விட்டுத்தான் அமெரிக்கா திரும்புவேன். இது உறுதி.

தலைவாரிக் கொண்டிருந்த ரமேஷ் என்னைக் கண்டதும் உற்சாகத்துடன், "சித்தப்பா!" என்று கூவியபடி வந்து என்னைக் கட்டிக் கொண்டான். "ஒரு கேஸ் விஷயமா வெளியே போயிட்டேன். அதான் உங்களை


இவ்வினிய
பொங்கல்
திருநாளில்
எங்கள் உளமார்ந்த
வாழ்த்துக்கள்
அண்ணாமலை
பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 252, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641 043.
போன்: 42224 தந்தி: "ராஜ்தூத்" டெலக்ஸ்: 0855-586.
பெங்களூர் : போன் : 227365. பம்பாய் : போன் : 243602. கோயமுத்தூர் : 438, டாக்டர் நஞ்சப்பா ரோடு. புது
டெல்லி : போன் : 5752417, 5752531. எர்ணாகுளம் : போன் : 360425. ஈரோடு : போன் : 79800.
கள்ளக்குறிச்சி : G.K.M. பில்டிங்ஸ், 70, சேலம் மெயின்ரோடு, கள்ளக்குறிச்சி : போன் : 3029. கோபி செட்டிபாளையம்
142, முதல் மாடி, போலீஸ் ஸ்டேஷன் ரோடு. மதுரை : போன் : 24450. சென்னை : அண்ணா நகர் : போன் :
6213405. பூந்தமல்லி ஹைரோடு : போன் : 561858. அண்ணாசாலை, போன் : 865228, 861228, 862430.
தி. நகர் : போன் : 440248. மைலாப்பூர் : போன் : 71993. பாண்டிச்சேரி : போன் : 28507. புனே : போன் :
20834. சேலம் : போன் : 68899, 68896. சத்தியமங்கலம் : போன் : 420. திருநெல்வேலி : போன் : 25144,
26307. திருச்சி : போன் : 40272. வேலூர் : போன் : 26371.



"இதென்னது ஹோட்டல்ல உட்கார்ந்தபடியே லெட்டர் எழுதித் தபால் பெட்டியில் போடச் சொல்லி அனுப்பறீங்களே, அப்படி என்ன எழுதியிருக்கீங்க?"

"சர்வரை நம்ப மேஜைக்கு வரச் சொல்லித்தான்!"

— ராஜநிலா.

வரவேற்க ஏர்போர்ட்டுக்கே வர முடியலை. சாரி சித்தப்பா!'' என்றான்.

''பரவாயில்லைடா,'' என்று கூறிவிட்டு அவன் முகத்தையே உற்றுப் பார்த்தேன். சோகமோ, ஏக்கமோ, துக்கமோ இன்றிப் புது மாப்பிள்ளையாய் லட்சணமாய்ப் புது மலராக மலர்ந்திருந்தான். எனக்குக் குழப்பமாக இருந்தது

என்னைக் கண்டதும் தேக்கி வைத்த சோகத்தைக் கண்ணீராகக் கொட்டிக் கதறுவான் என நினைத்துக் கொண்டிருந்தால் உற்சாகமாகப் புன்னகைக்கிறானே? ஒருவேளை மணப்பெண் அவன் காதலித்த பெண்ணேதானோ?

"ஏண்டா ரமேஷ்! கல்யாணப் பெண் உனக்கு மேட்சா இருப்பா இல்லையா?'' என்று பொதுவாக ஒரு கேள்வியை எழுப்பினேன்.

''ஸென்ட் பர்சன்ட் மேட்ச்தான் சித்தப்பா. சொல்லப் போனா மேட் ஃபார் ஈச் அதர்'' என்று சொல்லிச் சிரித்தான்.

என் குழப்பம் தீரவில்லை. ''ரமேஷ்... வந்து... நீ முன்னேயெல்லாம் எனக்கு லெட்டர் போடுவியே உமா என்கிற பெண்ணை நீ காதலிக்கிறதா. அவளைத் தானே இப்போ...''

அவசரமாக மறுத்தான் ரமேஷ். ''நோ... நோ... அவ இல்லை சித்தப்பா... நாங்களே பேசி முடிவு பண்ணி எங்க காதலை வித்ட்ரா பண்ணிண்டுட்டோம். இந்தப் பெண் அப்பா ஏற்பாடு பண்ணினது.''

அதிர்ந்தேன் நான். ''ஏண்டா அப்படி?''

''எல்லாம் எங்க எதிர்காலங்களை உத்தேசித்துத்தான். அவ எஞ்சினியரிங் ஸ்டூடண்ட். நான் மெடிகல். இரண்டு பேர் லைன்களுமே வேறே வேறே. கல்யாணம் பண்ணிண்டா லைப்லே கூட எதிர் 'எதிர்த் திசையிலேதான் வேலை செய்ய முடியும். அவ அப்பா சொந்தத்திலேயே ஒரு பிள்ளையைத்தேர்ந்தெடுத்திருக்காராம். பிள்ளை பி. ஈ. முடிச்சுட்டு பிரைவேட் கன்ஸல்டன்ஸி வெச்சிருக்காராம். இவளும் பிஇயா இருக்கிறதாலே அந்தப் பிள்ளையைக் கல்யாணம் பண்ணிண்டா தொழில் முறையிலேயும் அவருக்கு உதவியா இருக்கும். அதே சமயம் எனக்கும் அப்பா மெடிகல் லைன்லேயே பெண் பார்த்திருக்கார். பெண்ணோட அப்பா எனக்கு வெளிநாட்டிலே மேல் படிப்பு படிக்கவும், படிச்சு முடிச்சதும் இங்கே கிளினிக் வைக்கவும் உதவி செய்யறதாச் சொன்னாராம். அதுதானே என் எதிர்காலத்துக்கும் நல்லது. அதான் நாங்க ரெண்டு பேரும் — உமாவும் நானும் யோசனை பண்ணிப் பார்த்தோம். காதல் அது. இதுன்னு சொல்லி நாங்க கல்யாணம் பண்ணிண்டா, எதிர்காலம் அவ்வளவு பிரகாசமா இருக்காதுன்னு தோணித்து. அதனாலே இனி. நல்ல நண்பர்களா இருப்போம்னு முடிவு பண்ணிப் பிரிஞ்சு வந்துட்டோம்.'' சர்வசாதாரணமாகச் சொல்லி முடித்தான் ரமேஷ்.


''என்னடா இது? கல்யாணத்துக்கு ரெண்டே நாள்தான் இருக்கு. இப்பப் போய் அமெரிக்கா போகணுங்கிறியே,'' சற்றே கோபமும் அதங்கமுமாகக் கேட்டார் அண்ணா.

''இல்லே அண்ணா! முக்கியமான வேலைகள் நிறைய இருக்கு. நடுவிலே ஒரு வாரம் ஓய்வு கிடைச்சது. ஓடி வந்து உங்களையெல்லாம் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்,'' என்றேன்.

ரமேஷுக்குக் கூடக் கொஞ்சம் வருத்தம் தான், தன் வருங்கால மனைவியையும் மாமனாரையும் நான் சந்திக்கவில்லையே என்று.

என்னோடு பணிபுரியும் எமிலி அடிக்கடி என்னைக் கேலி பண்ணுவது நினைவுக்கு வந்தது: ''உங்க இந்திய இளைஞர்களுக்கு இன்னும் கூடத் தைரியம் வரவில்லை. தானாகப் பெண்ணைத் தேடி மணந்து கொள்ள மாட்டார்களா? இன்னமும் கூட அரேஞ்ச்டு மர்ரேஜ்தானா? முன்னேறவேயில்லை உங்கள் நாட்டு இளைஞர்கள்'' என்பாள்.

விமானத்தில் அமெரிக்கா திரும்பும் போது எமிலிக்கான பதிலை மனப்பாடம் செய்து கொண்டேன்: ''இல்லை எமிலி. நீ நினைப்பது தவறு. இந்த இருபது வருடங்களில் இளைஞர்கள் பல படிகள் முன்னேறி விட்டார்கள். எதிர்காலச் சௌகரியங்களுக்காகக் காதலையே நட்பாக மாற்றிக் கொள்ளும் அளவு அவர்களின் மனம் 'பக்குவ'ப் பட்டுவிட்டது!''



• வென்னா ஏரியில் உல்லாசப் படகுச் சவாரி.

பஞ்ச்கனி: மலைகள் தாலாட்டும் சிற்றூர்!


"உங்கள் உள்ளத்தில் இளமை துள்ளுகிறதா? இதயத்தில் காதல் உணர்ச்சிகள் பொங்குகின்றனவா? நீங்கள் விண்ணில் பறப்பது போல உணர்கின்றீர்களா? அப்படியானால் நீங்கள் பஞ்ச்கனி — மகாபுலேஷ்வரை அடைந்து விட்டீர்கள்! இதுதான் உங்கள் சுவர்க்கம்" — பஞ்ச்கனியை நெருங்கும்போது முகமன் கூறி வரவேற்கும் இந்த வாசகம், மிகைப்படுத்தலேயில்லை!

கண்ணுக்கெட்டிய தூரம் வரை நெடிது நிமிர்ந்த மலைகள்; செறிந்து அடர்ந்த காடுகள்; மிதந்து வரும் நீலமேகங்கள்; கீழே சிற்றோடையாக நெளிந்து, தவழ்ந்து செல்லும் கிருஷ்ணா நதி; பளீரென்ற பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்றதொரு பள்ளத்தாக்கு; மயிலிறகால் மெலிதாக வருடுவது போன்ற மென் காற்று, காலார நடக்க, நடக்க நெடிதுயர்ந்த சில்வர் ஓக் மரங்கள்; யூகலிப்டஸ், பைன் வகைகள், பசேலென்ற பயிர் வகைகள்; பரவிச் செழித்துக் காணும் ஸ்ட்ரா பெர்ரி, பைன் ஆப்பிள் பயிர்கள். இத்தனையும் கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலையின் சகயாத்ரி தொடரில் அமைந்த அற்புத மலைவாசஸ்தலங்கள் பஞ்ச்கனியும், மகாபலேஷ்வரும்! இவற்றை 'இந்தியாவின் ஸ்விட்ஜர்லாந்து' என்கின்றனர், சுற்றுலாத் துறையினர். 'மகாராஷ்டிரத்தின் காஷ்மீர்' என்கிறார்கள் இம்மாநிலத்தினர்.

● பூனாவிலிருந்து சரியாக நூறு கி. மீ. தொலைவில் வளைந்து, வளைந்து செல்லும் மலைப் பாதைக்கு அப்பால், இயற்கைச் சூழலில் அமைந்த பஞ்ச்கனியைக் குன்னூருக்கு ஒப்பிட்டால், அதனின்று 19 கி.மீ. தூரத்தில் உள்ள மகாபலேஷ்வரை உதகைக்கு உதாரணமாக்கலாம். நீலகிரி மலை நகரங்களைப் போலவே இவை அழகிலும், வளத்திலும் ஒன்றுக்கொன்று சளைக்காத இரட்டை ஊர்கள்!

● 'கனி' என்றால் மராத்திய வட்டார வழக்கில் கிராமம். முக்கியமான ஐந்து கிராமங்கள் இந்த மலைத்தொடரில் இணைவதால் இதற்கு 'பஞ்ச்கனி' என்று பெயர் என்கின்றனர் சிலர்... 'மகாபாரத காலத்தில் இங்கு தங்கிய பஞ்ச பாண்டவர், ஐந்து அக்னிகளை மூட்டி வழிபட்டனர். இதனால்தான் இதற்கு 'பஞ்ச அக்னி' என்று பெயர். இதுவே 'பஞ்ச்கனி' ஆனது' என்கின்றனர் வேறு, சிலர்.

• 'டேபிள் லாண்ட்'டின் ஒரு தோற்றம்.





பாக்கெட்டில் வானிலை!

பாக்கெட்டில் போட்டுக் கொண்டு போகக் கூடிய சின்னஞ்சிறு வானிலை அறிவிப்பு உபகரணம் உருவாக்கப்பட்டுள்ளது. பத்து கிலோமீட்டர் சுற்றளவில், அடுத்த நான்கு மணி நேரத்தில் வானம் எப்படி இருக்கும் என்று இந்த இயந்திரம் துல்லியமாகச் சொல்லிவிடும். ஒரு ஜப்பானிய நிறுவனம் இதை உருவாக்கியுள்ளது. எழுபத்தைந்து சதவிகிதம் இதன் கணிப்பு தவறாகப் போவதில்லை என்கின்றனர்.

— இண்டியன் எக்ஸ்பிரஸிலிருந்து.

— சேலம் சக்திக்கொடி.

● இங்கு ஒன்றுக்கொன்று போட்டியாகப் பதினாறு கான்வென்ட் பள்ளிகள் உள்ளன! இவையனைத்தும் மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதி கொண்டவை. இவற்றில் சேர ஒரு மாதத்திற்கு ரூ. 2000 முதல் ரூ. 3000 வரை செலவிடப் பெற்றோர் தயாராக இருக்க வேண்டும்!

● ஏறக்குறைய 4000 அடி உயரத்தில் அமைந்த பஞ்ச்கனியில் மகாபலேஷ்வரை விட மழை குறைவு. மலை உச்சியில், அகன்ற மைதானம் போன்ற (டேபிள் லாண்ட்) இயற்கையான அமைப்பு உண்டு. கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கின் அழகை இங்கு நின்று ரசிக்கலாம்; ஒட்டகம் அல்லது குதிரைச் சவாரி செய்து களிக்கலாம்; இடையே கரும்புச் சாற்றைப் பருகி ருசிக்கலாம்.

● இங்கே காற்றில் ஈரப்பசையே கிடையாது என்றும் ஆஸ்துமா, போன்ற நுரையீரல் சம்பந்தப்பட்ட வியாதிகள் உள்ளவர்களுக்கு இந்த ஊர் சுகம் தரும் என்றும் கூறுகிறார்கள். இங்கு தங்கி மருத்துவ வசதி பெற, சானடோரியம் உண்டு.

● ரம்மியமான பஞ்ச்கனி சூழ்நிலைதான் தத்துவ அடிப்படையிலான ஆராய்ச்சிக்கும், சிந்தனைக்கும் சிறந்தது என்று ராஜ்மோகன் காந்தி, இங்கு மாரல் ரீ ஆர்மமெண்ட் சென்டர் ஒன்று அமைத்துள்ளார். இது 1965 இல் துவங்கிய அனைத்து நாடுகள் இயக்கம். இதில் மனிதனின் அடிப்படைக் குணங்களைப் பற்றியும், தலைமையேற்று மக்களை நல்வழிப்படுத்துவதற்கான தேவைகளைப் பற்றியும் ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

● பஞ்ச்கனியிலிருந்து 4 கி. மீ. தொலைவிலுள்ள பிலர் கார்டனில் (Bhilar Gardens), நூற்றுக் கணக்கில் வண்ண வண்ணப் பூக்கள், முக்கியமாக அழகு ரோஜாக்கள் மலர்ந்து சிரிக்கின்றன. இங்கும் ஊட்டியைப் போன்று மலர்க் கண்காட்சி உண்டு. ரோஜா இதழ்களைக் கொண்டு 'மாப்ரோஸ்' என்ற நிறுவனம் தயாரிக்கும் 'ரோஜா சிரப்' புகழ் பெற்றது.

● தேனீ வளர்த்தல் இங்கு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குடிசைத் தொழிலாகவே நடக்கிறது. 'தேன்' என்றவுடன் 'தேனிலவும்' நினைவுக்கு வரும். புதுமணத் தம்பதிகள் தங்கள் தேன் நிலவை இங்கு கழித்தால், வாழ்வு முழுதும் இன்பமும், அமைதியும் நிலவும் என்ற ஒரு நம்பிக்கை பரவி இருப்பதால் இங்குள்ள ஓட்டல்கள், லாட்ஜுகள் மழைக்காலங்களில் கூடக் காலியாக இருப்பதில்லை! பஞ்ச்கனி மகாபலேஷ்வரில் தங்க ஐம்பதுக்கும் மேலாக ஓட்டல்கள் உண்டு. ரூ. 50 முதல் 600 வரை வசதிக்கேற்ற வாடகை.

● எப்படி நீலகிரி செல்பவர்கள் குன்னூர் மட்டும் சென்று திரும்புவதில்லையோ, அப்படி பஞ்ச்கனி போகின்றவர்கள் மகாபலேஷ்வர் போகாமல் இருக்க மாட்டார்கள். 12 மைல் தூரத்தில் உள்ள மகாபலேஷ்வர் சிவன் கோயிலில்தான் புனித நதிகளான கிருஷ்ணா, வெண்ணா, கொய்னா, சாவித்திரி, காயத்ரி என்ற ஐந்து நதிகளும் உற்பத்தியாகின்றன.


● வெள்ளையர்களால் 1824 முதலே கோடை வாசஸ்தலமாக்கப் பட்டுப் பிரபலமானது மகாபலேஷ்வர். பஞ்ச்கனிக்கும் மகாபலேஷ்வருக்கும் இடையே அமைந்த வெண்ணா ஏரியில் பயணிகள் 'போட்டிங்க்' செய்யலாம்.

● பம்பாய் அருகே இருப்பதால் இங்கு எப்போதும் படப்பிடிப்புகள் நடப்பதுண்டு. பல மீட்டிங்குகள், செமினார்கள் போன்றவையும் இங்கு நடக்கும்.

● ஜனவரியில் மகாராஷ்டிர, ஆந்திர, கர்நாடக முதலமைச்சர்கள் கிருஷ்ணா நதி மூலஸ்தானமான மகாபலேஷ்வரில் அமர்ந்து அந்நதி நீர்ப் பங்கீடு பற்றியும், தெலுங்கு கங்கா மூலம் சென்னைக்குக் கிருஷ்ணா நீர் கொடுப்பது பற்றியும் விவாதிக்க இருக்கிறார்கள். புதிய பிரச்னைகளை உருவாக்காமல் சென்னைக்கு விரைவில் விமோசனம் கிடைக்கச் செய்தால் சரி!

— ராஜீவி நரசிம்மன்.





சிவகாமியின் சபதம்

முன் கதைச் சுருக்கம்

இன்றைக்கு ஆயிரத்து முந்நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னால் கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரில் தர்ம மகா ராஜாதி ராஜ மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி செங்கோல் செலுத்தி வந்தார். அவருடைய சாம்ராஜ்யம் தெற்கே பாண்டிய நாட்டு எல்லையிலிருந்து வடக்கே கோதாவரி நதிக்கரை வரையில் பரவியிருந்தது.

கீழைச் சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்திலிருந்து பரஞ்சோதி என்னும் இளைஞன் காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காக வந்தான். வழியிலே சந்தித்த நாகநந்தி என்னும் புத்த சந்நியாசியுடன் அவன் ஒரு நாள் இருட்டிய பின்னர் காஞ்சிக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அதே தினத்தில், சளுக்க மன்னனாகிய புலிகேசி பல்லவ சாம்ராஜ்யத்தின் மேல் படையெடுத்திருக்கும் செய்தி வந்ததின் காரணமாக, ஆயனச் சிற்பியின் பெண் சிவகாமியின் நடன அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்டது.

தெறி கெட்டு ஓடி வந்த மதயானையின் மேல் வேலை எறிந்து ஆயனரையும் சிவகாமியையும் பரஞ்சோதி தப்புவித்துவிட்டு, தான் தப்புவதற்காக ஓடுகிறான். அவனை ஒற்றன் என்று சந்தேகித்துக் காவலர்கள் சிறையில் அடைக்கிறார்கள். அன்றிரவே நாகநந்தி அவனைச் சிறையிலிருந்து தப்புவித்து இரகசிய வழியின் மூலம் கோட்டைக்கு வெளியே அழைத்துச் செல்கிறார்.

திருநாவுக்கரசருக்கும் ஆயனருக்கும் பரஞ்சோதி ஓலை கொண்டு வந்திருந்தான். திருநாவுக்கரசர் காஞ்சியில் இல்லை என்று அறிந்து, அவன் புத்த பிக்ஷுவுடன் ஆயனர் வீடு செல்கிறான்.

ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாத அஜந்தா வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து வருவதற்காகப் பரஞ்சோதியைக் கிருஷ்ணை நதிக்கரையிலுள்ள நாகார்ஜுன மலைக்கு ஆயனரும் நாகநந்தியும் அனுப்புகிறார்கள்.

மகேந்திர சக்கரவர்த்தி, சிவகாமியிடம் காதல் கொண்ட குமார சக்கரவர்த்தி நரசிம்ம வர்மரைக் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியில் போகக் கூடாதென்று திட்டம் செய்துவிட்டு, வடக்கே போர்க்களம் செல்கிறார்.

காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்துக்கு ஒரு நாள் ஆயனரும் சிவகாமியும் வருகிறார்கள். நாவுக்கரசரின் திருப்பாசுரங்களுக்குச் சிவகாமி அபிநயம் பிடித்து உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையடைகிறாள்.

அச்சமயம் அங்கிருந்த நரசிம்ம வர்மரின் நடவடிக்கைகளிலிருந்து அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலை அவருடைய ரத சாரதி கண்ணபிரான் தெரிந்து கொள்கிறான். அதைப் பற்றி அவன் தன் மனைவி கமலியிடம் அன்றிரவு பேசிக் கொண்டிருந்ததைச் சிவகாமி ஒட்டுக் கேட்க நேருகிறது.

ஓலையுடன் சென்ற பரஞ்சோதிக்கு வழியில் வஜ்ரபாகு என்னும் வீரன் பழக்கமாகிறான். மகேந்திர மண்டபத்தில் அவர்கள் இரவு தூங்கிய போது பரஞ்சோதியின் ஓலை மாற்றப்படுகிறது. மறு நாள் அவனைப் புலிகேசியின் ஆட்கள் வாதாபி சைன்யத்தின் பாசறைக்குப் பிடித்துச் செல்கிறார்கள். ஓலையின் கருத்து விளங்காமல் புலிகேசி பரஞ்சோதியைக் காவலுடன் ஸ்ரீபர்வதத்துக்கு அனுப்புகிறான்.

அன்றிரவு, மலைப் பாதையில் உள்ள பாழடைந்த வீட்டில் வீரர்களும் பரஞ்சோதியும் தங்குகிறார்கள். அவ்வீட்டு வாசலில் ஜபம் செய்து கொண்டிருந்த கிழவர் ஒருவர், நள்ளிரவில் பரஞ்சோதியை இரகசியமாக எழுப்புகிறார்.

நாற்பத்து நாலாம் அத்தியாயம்

மாயக் கிழவன்

கிழவனுடைய கையில் வேல் ஒன்று இருப்பதையும், அதைப் பெற்றுக் கொண்டு தன்னுடன் கிளம்பி வரும்படி கிழவன் சமிக்ஞை செய்வதையும், பலகணி வழியாக வந்த நிலவின் மங்கிய ஒளியில் பரஞ்சோதி உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டான். பரஞ்சோதி சிறிது தயங்கிய போது, கிழவன் அவனுடைய ஒரு கையைத் தன்னுடைய இடது கையினால் அழுத்திப் பிடித்தான். உடனே, பரஞ்சோதிக்குப் பழைய ஞாபகம் ஒன்று வரவே, அந்த மாயக் கிழவன் கொடுத்த வேலை வாங்கிக்

கொண்டு துள்ளி எழுந்தான்.

இருவரும் வீட்டின் கொல்லைப்புறம் வழியாக வெளியே வந்தார்கள். பரஞ்சோதி தன்னுடைய குதிரையும் இன்னொரு குதிரையும் அங்கே சேணம் பூட்டி ஆயத்தமாக நிற்பதைக் கண்டான். இருவரும் குதிரைகள் மேல் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள்.

பரஞ்சோதி எதிர்பார்த்தது போல், கிழவனுடைய குதிரை உடனே பாய்ச்சலில் கிளம்பவில்லை. பரஞ்சோதிக்கு முதுகுப்புறத்தைக் காட்டிய வண்ணம் அவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். எனவே, பரஞ்சோதியும் தன்னுடைய குதிரையை இழுத்துப் பிடிக்க வேண்டியதாயிற்று.

தாமதம் செய்து கொண்டிருந்த கிழவன் நடுவில், "தம்பி! என்னை யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டான்.

"தாடியைப் பார்த்து முதலில் ஏமாந்து தான் போனேன். கையைப் பிடித்து அமுக்கியதுந்தான் தெரிந்தது. பிசாசுக்குப் பயப்படாத சூரர் வஜ்ரபாஹு தாங்கள் தானே?" என்றான் பரஞ்சோதி.

உரத்த சப்தத்துடன் சிரித்துக் கொண்டு கிழவன் திரும்பிய போது அவன் முகத்திலிருந்த நரைத்த தாடியைக் காணவில்லை. தாடி நீங்கிய முகம் வீரன் வஜ்ரபாஹுவின் முகமாகக் காட்சியளித்தது.

"யோசித்துச் சொல்லு, அப்பனே! என்னோடு வருவதற்கு உனக்குச் சம்மதமா?" என்று வஜ்ரபாஹு கேட்க, பரஞ்சோதி, "எனக்கு வரச் சம்மதந்தான். உங்களுக்குத்தான் இங்கிருந்து போகும் உத்தேசம் இல்லை போலிருக்கிறது!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"பின்னே, இப்படிச் சப்தம் போட்டுப் பேசுகிறீர்களே, அவர்கள் விழித்துக் கொள்ள மாட்டார்களா?"

"அவர்களை எழுப்புவதற்காகவேதான் இரைந்து பேசுகிறேன். தூங்குகிறவர்களை ஏமாற்றிவிட்டு ஓடித் தப்பித்துக் கொண்டான் என்ற அவப்பெயர் அச்சுத விக்கிராந்தனுடைய வம்சத்தில் உதித்த வீரன் வஜ்ரபாஹுவுக்கு வரப்படுமா?" என்று கூறி, எதையோ நினைத்துக் கொண்டவன் போல் இடி இடியென்று சிரித்தான்.

இதற்குள் வீட்டு வாசலில் காவலிருந்த வீரன் குதிரைகளின் காலடிச் சப்தத்தையும், பேச்சுக் குரலையும் கேட்டு வீட்டைச் சுற்றிக் கொல்லைப்புறம் வந்து பார்த்தான். இரண்டு பேர், குதிரை மேலேறிக் கிளம்பிக் கொண்டிருப்பதை அவன் கண்டு, "ஓ!" என்ற கூச்சலுடன் வீட்டுக்குள் ஓடினான். உடனே, அந்த வீட்டுக்குள் வீரர்கள் ஒருவரை ஒருவர் எழுப்பும் சப்தமும், "என்ன? என்ன?" என்று கேட்கும் சப்தமும், "மோசம்!" "தப்பி ஓடுகிறார்கள்" என்ற கூக்குரலும் ஒரே குழப்பமாக இருந்தன.

வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் ஏறியிருந்த குதிரைகள் முதல் நாள் வந்த பாதையில் திரும்பிச் செல்லத் தொடங்கின. ஆனால், வஜ்ரபாஹு குதிரையை வேண்டுமென்றே இழுத்துப் பிடித்து அதன் வேகத்தைக் குறைத்ததுடன் ஆங்காங்கு நின்று நின்று சென்றான். பரஞ்சோதி இந்தத் தாமதத்தைப் பற்றிக் கேட்ட போது, "சளுக்கர்கள் நம்மை வந்து பிடிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டாமா? அவர்கள் வழி தப்பி வேறு எங்கேயாவது தொலைந்து போய்விட்டால்...?" என்றான்.

"போய் விட்டால் என்ன?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"இவ்விடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு மலைக் கணவாய் இருக்கிறதல்லவா? அந்தக் கணவாயில் துர்க்காதேவி கோயில் ஒன்று இருக்கிறது. நேற்று வரும் போது நீ கவனித்தாயா?"

"இல்லை!"

"நீ எங்கே கவனிக்கப் போகிறாய்? உன்னுடைய கவனமெல்லாம் ஒருவேளை திருவெண்காட்டுக் கிராமத்திலே இருந்திருக்கும்..."

"என்ன சொன்னீர்கள்?"

"அந்தத் துர்க்கையம்மன் கோயில் வழியாக நான் நேற்றைக்கு வந்த போது, இன்று சூரியோதய சமயத்தில் அம்மனுக்கு ஒன்பது உயிர்களைப் பலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இவர்கள் வேறு வழியில் போய் விட்டால், என்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற முடியாதல்லவா?"

ஆனால், கிழவனின் மேற்கூறிய வார்த்தைகள் பரஞ்சோதியின் செவியில் விழுந்தனவாயினும், அவன் மனத்தில் பதியவில்லை.

பெரியதொரு வியப்பு அவனுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. திருச்செங்காட்டாங்குடியிலிருந்து அவன் கிளம்பியதிலிருந்து, எத்தனை எத்தனையோ தூரம் பிரயாணம் செய்திருக்கிறான்; எவ்வளவோ அதிசய சம்பவங்களைப் பார்த்திருக்கிறான். இவ்வளவிலும் இடையிடையே அவனுடைய மன்மானது திருவெண்காட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த விஷயம் இந்த வேஷதாரி வஜ்ரபாஹுவுக்கு எப்படித் தெரிந்தது என்று

நினைத்து, பரஞ்சோதி ஆச்சரியக் கடலில் மூழ்கினான்.

பலபலவென்று பொழுது விடியும் தருணத்தில் வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் ஒரு மலைக் கணவாயை அடைந்தார்கள். அவர்கள் இதுகாறும் வந்த பாதையானது அங்கே குறுகி இருபுறமும் செங்குத்தாக, ஓங்கி வளர்ந்த பாறைச் சுவர்களின் வழியாகச் சென்றது. கணவாயைத் தாண்டியதும், ஒரு பக்கம் மட்டும் பாறைச் சுவர் உயர்ந்து, இன்னொரு பக்கம் அதல பாதாளமான பள்ளத்தாக்காகத் தென்பட்டது.

இந்த இடத்துக்கு வந்ததும் வஜ்ரபாஹு தன் குதிரையை நிறுத்தினான். பரஞ்சோதியையும் நிறுத்தும்படிச் செய்தான்.



காலை நேரத்தில் குளிர்ந்த இளங்காற்று மலைக்கணவாயின் வழியாக ஜிலு ஜிலுவென்று வந்தது. பட்சிகளின் மனோகரமான குரல் ஒலிகளுடன் தூரத்திலே குதிரைகள் வரும் காலடிச் சப்தம் டக், டக், டக், டக், என்று கேட்டது.

"தம்பி! உன்னை மறுபடியும் கேட்கிறேன்; அந்தச் சளுக்க வீரர்கள் வருவதற்குள்ளே தீர்மானமாகச் சொல். உனக்கு என்னோடு வருவதற்கு இஷ்டமா?" என்று வஜ்ரபாஹு கேட்டான்.

"உங்களோடுதான் வந்து விட்டேனே? இனிமேல் திரும்பிப் போக முடியுமா?"

"உனக்கு இஷ்டமில்லாவிட்டால் இப்போது கூட நீ திரும்பிப் போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்."

"சேர்ந்து கொண்டு...?"

"அவர்கள் போகும் இடத்துக்கு நீயும் போகலாம்."

"அவர்கள் எங்கே போகிறார்கள்?"

"நாகார்ஜுன மலைக்குப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் போகப் போவது யமலோகத்துக்கு!"

"அங்கே அவர்களை அனுப்பப் போவது யார்!"

"உனக்கு இஷ்டமிருந்தால் நீயும் நானுமாக; இல்லாவிட்டால் நான் தனியாக."

"பரஞ்சோதி சிறிது யோசித்துவிட்டு, "தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"பல்லவ சைனியத்தின் பாசறைக்கு!"

"ஆஹா! நான் நினைத்தபடிதான்!" என்றான் பரஞ்சோதி.

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நேற்றெல்லாம் யோசனை செய்ததில் தெரிந்தது."

"இன்னும் என்ன தெரிந்தது?"

"தாங்கள் காஞ்சிச் சக்கரவர்த்தியின் ஒற்றர் என்றும் தெரிந்தது."

"தம்பி! உன்னை என்னவோ என்று நினைத்தேன். வெகு புத்திசாலியாக இருக்கிறாயே?"

"ஐயா! நான் தங்களுடன் வந்தால் பல்லவ சைனியத்தில் என்னைச் சேர்த்துக் கொள்வார்களா?" என்று கேட்டான் பரஞ்சோதி.

"கட்டாயம் சேர்த்துக் கொள்வார்கள். கரும்பு தின்னக் கூலியா? உன்னைப் போன்ற வீரனைப் பெறப் பல்லவ சைனியம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?" என்றான் வஜ்ரபாஹு.

பரஞ்சோதி இதற்கு மறுமொழி சொல்லவில்லை. சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு, "அப்பனே! என்ன யோசிக்கிறாய்?" என்று வஜ்ரபாஹு கேட்டான்.

"என்னிடமுள்ள ஓலையை என்ன செய்



வது என்றுதான்!''

''அதோ தெரிகிற பள்ளத்தாக்கிலே ஓடுகிற தண்ணீரிலே போடு. அதனால் இனி மேல் பிரயோஜனம் ஒன்றுமில்லை.''

''நாகநந்தியும் ஆயனரும் எவ்வளவு ஏமாற்றமடைவார்கள்?''

''ஆம்; நாகநந்தி பெரிய ஏமாற்றந்தான் அடைவார்!'' என்று கூறிவிட்டு, வஜ்ர பாஹு 'கல, கல'வென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''இப்படிப்பட்ட கும்பகர்ணனாகப் பார்த்து, அந்தப் புத்த பிக்ஷு ஓலையைக் கொடுத்தாரே என்றுதான்.''

''ஐயா! தயவு செய்து என்னை மன்னியுங்கள். நான் இப்படியே நாகார்ஜுன மலைக்குப் போய் நாகநந்தியின் ஓலையைக் கொடுத்து விட்டுப் பின்னர் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வருகிறேன்.''

''வீண் வேலை, அப்பனே! நாகநந்தி உன்னிடம் கொடுத்த ஓலை அக்கினிக்கு அர்ப்பணமாகி விட்டது!''

''என்ன சொன்னீர்கள்!''

''நாகநந்தியின் ஓலை தீயில் எரிந்து போய்விட்டது என்றேன்.''

''இதோ என்னிடம் இருக்கிறதே!''

''அது நான் எழுதி வைத்த ஓலை, தம்பி!''

''என்னுடைய சந்தேகம் சரிதான்'' என்று பரஞ்சோதி கூறி ஓலைச் சுருளை எடுத்து வீசிப் பள்ளத்தாக்கில் எறிந்தான்.

''அன்றிரவு தீபத்தில் மயக்க மருந்து சேர்த்து என்னைத் தூங்க வைத்து விட்டுத் தானே ஓலையை எடுத்தீர்கள்?'' என்று கேட்டான்.

''உன்னுடைய வேலின் முனையைப் போலவே உன் அறிவும் கூர்மையாகத்தான் இருக்கிறது!'' என்றான் வஜ்ரபாஹு.

வஜ்ரபாஹுவை ஆச்சரியமும் பக்தியும் ததும்பிய கண்களினால் பரஞ்சோதி பார்த்து, ''ஐயா! நாகநந்தி என்னிடம் அனுப்பிய ஓலையில் என்ன எழுதியிருந்தது?'' என்று கேட்டான்.

''புலிகேசியைக் காஞ்சிமா நகருக்கு உடனே வந்து, தென்னாட்டின் ஏக சக்ராதிபதியாக முடிசூட்டிக் கொள்ளும்படி எழுதியிருந்தது!''

''அடடா! அப்படிப்பட்ட துரோகமான ஓலையையா நான் எடுத்துக் கொண்டு வந்தேன்? ஐயோ! என்ன மூடத்தனம்!'' என்று புலம்பினான் பரஞ்சோதி.

''போனதைப் பற்றி அப்புறம் வருத்தப்படலாம். இதோ சளுக்க வீரர்கள் யமனுலகம் போக அதிவேகமாக வருகிறார்கள். நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று வஜ்ரபாஹு கேட்டான்.

''தங்கள் விருப்பம் எப்படியோ, அப்படி!''

''சரி, இந்தக் கணவாயின் இருபக்கமும் நாம் இருவரும் நிற்கலாம். முதலில் வருகிறவன் மார்பில் உன்னிடமுள்ள ஈட்டியைப் பிரயோகம் செய். அப்புறம் இந்த வாளை வைத்துக் கொண்டு உன்னால் முடிந்த வரையில் பார்!'' என்று வஜ்ர பாஹு கூறி, தான் வைத்திருந்த இரண்டு வாள்களில் ஒன்றைக் கொடுத்தான்.

பரஞ்சோதி ஆர்வத்துடன் அந்த வாளை வாங்கிக் கொண்டு தன்னுடைய 'கன்னி'ப் போருக்கு ஆயத்தமாய் நின்றான்.

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

மலைக் கணவாய்

சூரியன் உதயமாகி இரண்டு நாழிகைப் பொழுது ஆனபோது, அந்த மலைக் கணவாய்ப் பிரதேசம் கோரமான ரணகளமாய்க் காட்சியளித்தது.

இளம் கதிரவனின் செங்கிரணங்கள் பாறையில் ஆங்காங்கு தோய்ந்திருந்த கரும் இரத்தத்தில் படிந்து ரணகளத்தின் கோரத்தை மிகுதிப்படுத்திக் காட்டின.

கால் கை வெட்டுண்டும், தலை பிளந்தும் தேகத்தில் பல இடங்களில் படுகாயம் பட்டும் உயிரிழந்த ஒன்பது வீரர்களின் பிரேதங்கள் அந்தக் கணவாய்ப் பாதையிலே கிடந்தன.

அப்படிக் கிடந்த உடல்களிடையே வஜ்ர பாஹு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அந்த உடல்களை அவன் புரட்டிப் பார்த்தும், அவற்றின் உடைகளைப் பரிசோதித்தும் எதையோ பரபரப்புடன் தேடிக் கொண்டிருந்ததாகத் தோன்றியது.

சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மீது பரஞ்சோதி உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் மிகுந்த சோர்வும் அருவருப்பும் குடி கொண்டிருந்தன. கையிலே வாளைப் பிடித்து ஊன்றிக் கொண்டிருந்தான். பக்கத்திலே இரத்தம் தோய்ந்த வேல் கிடந்தது.

சற்று முன்னால் நிகழ்ந்த கொடுமையான ஒரு சம்பவம் பரஞ்சோதியின் மனக்கண் முன்னால் நின்றது. சளுக்க வீரர்களில் மூன்று பேரைப் பரஞ்சோதியும் ஐந்து பேரை வஜ்ரபாஹுவும் யமனுலகுக்கு

நடிகை ராதாவும் ஒரு ரஷ்யரும் சந்தித்துக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். "ஐ ஆம் ராதா" என்று ராதா அறிமுகப்படுத்திக் கொண்டால், ரஷ்யர் என்ன சொல்வார்?

"ஐ ஆம் ஆல்லோ ராதா" என்பார்!

ஏனாம்?

ரஷ்ய மொழியில் 'ராதா' என்றால், 'ரொம்ப சந்தோஷம்!' என்று அர்த்தம்!

— சாமி.



அனுப்பினார்கள். அவர்களுக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்ற ஒன்பதாவது வீரன் சண்டையிடாமல் குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு ஓடப் பார்த்தான். அப்போது வஜ்ரபாஹு வேலை வீசி எறிய, அது ஓடுகிறவன் முதுகில் போய்ப் பாய்ந்தது. அவனும் செத்து விழுந்தான். அதுவரையில் வஜ்ரபாஹுவின் அசகாய சூரத்தனத்தைப் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டிருந்த பரஞ்சோதிக்கு இதைப் பார்த்ததும் பெரும் வெறுப்பு உண்டாயிற்று. "ஓடுகிறவன் முதுகில் வேல் எறிவதும் ஒரு வீரமா?" என்று வஜ்ரபாஹுவை அவன் மனம் இகழத் தொடங்கியது.

திடீரென்று 'ஆ!' என்ற சப்தத்தைக் கேட்டுப் பரஞ்சோதி திரும்பிப் பார்த்த போது, வஜ்ரபாஹு ஓர் ஓலையைக் கையில் வைத்துக் கொண்டு படிப்பதைக் கண்டான்.

பிறகு, வஜ்ரபாஹு விரைந்து வந்து பரஞ்சோதி உட்கார்ந்திருந்த பாறைக்குப் பக்கத்தில் நின்ற தன் குதிரை மீது ஏறிக் கொண்டான். பரஞ்சோதி இன்னும் எழுந்திராமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "தம்பி! நீ வரப் போவதில்லையா?" என்று கேட்டான்.

பரஞ்சோதி ஆசாபங்கமும் அருவருப்பும் நிறைந்த கண்களினால் ஒரு தடவை வஜ்ரபாஹுவைப் பார்த்துவிட்டு மறுபடியும் முன்போல் தலையைக் குனிந்து கொண்டான்.

வஜ்ரபாஹு குதிரையுடன் பரஞ்சோதியின் அருகில் வந்து, "அப்பனே! கைதேர்ந்த வீரனைப் போல் நீ சண்டையிட்டாய். அதிலாகவத்துடன் போர் புரிந்து மூன்று ராட்சஸச் சளுக்கர்களைக் கொன்றாய். உன்னைப் பல்லவ சைனியத்தின் குதிரைப் படைத் தலைவனாக ஆக்க வேண்டும் என்று பல்லவ சேனாதிபதியிடம் சொல்ல எண்ணியிருக்கிறேன். இத்தகைய சோர்வும் சோகமும் உன்னை இப்போது பிடித்ததன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

பரஞ்சோதி மறுமொழி சொல்லவும் இல்லை; தலைநிமிர்ந்து பார்க்கவும் இல்லை. வஜ்ரபாஹுவின் முகத்தையே பார்க்க விரும்பாதவன் போல் கிழக்கே மலைக்கு மேலே சூரியன் தகதகவென்று ஒளி வீசி எழுந்து கொண்டிருந்த திசையை நோக்கினான்.

வஜ்ரபாஹு குதிரையை இன்னும் கொஞ்சம், பரஞ்சோதியின் அருகில் செலுத்திக் கொண்டு கூறினான்:

"தம்பி! உன்னை இந்த நிலையில் பார்த்தால் எனக்கு யாருடைய ஞாபகம் வருகிறது தெரியுமா? குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இருதரப்பு சைனியங்களும் வந்து யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்றன. யுத்தம் ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் அர்ச்சுனன் வில்லைத் தேர்த் தட்டில் போட்டுவிட்டு, 'எனக்கு ராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்னால் யுத்தம் செய்ய முடியாது!' என்று சோகமடைந்து விழுந்தான். உன்னை இப்போது பார்த்தால் அந்த அர்ச்சுனனைப் போலவே இருக்கிறது."

அர்ச்சுனன் என்ற பெயர் காதில் விழுந்த வுடனேயே பரஞ்சோதி வஜ்ரபாஹுவை நோக்கினான். அவனுடைய கண்களிலே சோர்வு நீங்கி, ஒரு புதிய ஒளி சுடர் விட்டது. வஜ்ரபாஹு நிறுத்தியதும், "அப்புறம் என்ன நடந்தது?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.


"நல்ல வேளையாக அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண பகவான் ரதசாரதியாக அமைந்திருந்தார். பரமாத்மா அர்ச்சுனனைப் பார்த்து, 'அர்ச்சுனா! எழுந்திரு! நீ ஆண் பிள்ளை! க்ஷத்திரியன்! யுத்தம் செய்வது உன் தர்மம். கையிலே வில்லை எடு!' என்றார். இந்த மாதிரி இன்னும் பதினெட்டு அத்தியாயம் உபதேசம் செய்தார்! அதனால் அர்ச்சுனனுடைய சோர்வு நீங்கி மறுபடியும் ஊக்கம் பிறந்தது..." என்று சொல்லி வஜ்ரபாஹு நிறுத்தினான்.

"பிறகு?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"பிறகு என்ன! அர்ச்சுனன் காண்டீபத்தைக் கையில் எடுத்து நாணேற்றி டங்காரம் செய்தான். கிருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்கிற சங்கை எடுத்து 'பூம் பூம்' என்று ஊதினார். உடனே மகாபாரத யுத்தம் ஆரம்பமாயிற்று."

தொடர்ச்சி: 42 ஆம் பக்கம்...

காலேஜில் நீங்கள் பயாலஜி, ஜியாலஜி எதை எடுத்தாலும் நண்பர்களிடையே நாயகியாகத் திகழ்ந்திட க்ளியரெஸில் கம்பல்ஸரி.




காரணம் க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்.

நண்பர் குழாம் ஆக்கிக் கொள்ளும் விஷயத்தில் இந்த க்ளியரெஸில் ஃபார்முலா ஒருபோதும் ஃபெயிலாகாது. சருமம் அதிகத் தெளிவாக இருந்தால் எல்லோர் கவனத்தையும் உங்கள்பால் ஈர்க்கச் செய்யும்.

க்ளியரெஸில் பருக்களில் மூன்று வழிகளில் ஆற்றலுடன் செயல்புரிகிறது.

ஒன்று — பருவுக்குள் ஊடுருவிச் செல்கிறது. இரண்டு — கூடுதல் எண்ணெய்ப் பசையை நீக்குகிறது. மூன்று — பருவைக் காயவைத்துப் போக்குகிறது.





பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் க்ளியரெஸில்தான் உலகிலேயே முதன்மையானது என்பது இதனால் தெள்ளத்தெளிவாகிறது.

பருக்கள் உங்கள் வாழ்க்கைக்கு முட்டுக் கட்டையாக இருக்க விடாதீர்கள்.

க்ளியரெஸில் உபயோகியுங்கள். நண்பர் குழாம் ஏற்படுத்திக் கொள்ளும் விஞ்ஞானத்தில் ஃபர்ஸ்ட்-க்ளாஸ் மதிப்பெண் பெறுங்கள்.



பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உலகிலேயே முதன்மையானது.



அருள்வாக்கு

பரோக்ஷம், அபரோக்ஷம் என்று இரண்டு. பரோக்ஷம் என்பது நமக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டிருப்பது. ரஹஸ்யமாயிருப்பது. அபரோக்ஷம் அதற்கு ஆப்போஸிட்: நமக்கு நன்றாகத் தெரிவது. கேள்வியறிவு பரோக்ஷம், அனுபவ அறிவு அபரோக்ஷம். அனுபவத்துக்கு வராத வரையில் ஒன்றைப் பற்றிய அறிவு அதன் பிரயோஜனமான ஆனந்தத்தை நமக்குக் காட்டாமல் ரஹஸ்யமாக வைத்துக் கொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

குற்றாலம் அருவியைப் பற்றிப் பக்கம் பக்கமாகப் படிக்கிறோம். போய் விட்டு வந்தவர்கள் அதைப் பற்றி மணிக் கணக்காக வர்ணித்துக் கேட்கிறோம். ஆனாலும் இதனாலெல்லாம் அனுபவ ஆனந்தம் நமக்குக் கொஞ்சமாவது ஏற்படுகிறதா? நாமே போய், மணிக்கணக்கெல்லாம் வேண்டாம், நாலு நிமிஷம், அஞ்சு நிமிஷம் அதன் கீழே நின்றுவிட்டால், அப்போது, தானே நிஜமாக அதைத் தெரிந்து கொண்ட ஆனந்தம் ஏற்படுகிறதே?

ஆத்மாவுக்கான ஸமாசாரங்களை டன் டன்னாகப் புஸ்தகத்தில் பார்த்தும் படித்தும் நெட்டுருப் போட்டும் பண்ணியும் பிரயோஜனமில்லை. குருவே உபதேசம் பண்ணியும் கூட, அது காதுக்குள்ளே, காது வழியாக மூளைக்குப் போனாலும் கூட ப்ரயோஜனமில்லை. அதுவரை அது பரோக்ஷம்தான். ஆத்மாவிலேயே அது அனுபவமாகப் பேசணும். அப்போதுதான் அபரோக்ஷம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

39ஆம் பக்கத் தொடர்ச்சி...

"யுத்தம் எப்படி நடந்தது?" என்றான் பரஞ்சோதி.

"லட்சணந்தான்; இங்கே நான் உட்கார்ந்து உனக்கு பாரத யுத்தக் கதை சொல்லிக் கொண்டிருந்தால், இப்போது நடக்க வேண்டிய யுத்தம் என்ன ஆகிறது?" என்று சொல்லிவிட்டு வஜ்ரபாஹு தன்னுடைய குதிரையைத் திருப்பிக் கொண்டு அந்த மலைப்பாதையில் மேலே போகத் தொடங்கினான்.

பரஞ்சோதி துள்ளி எழுந்து வேலையும் வாளையும் எடுத்துக் கொண்டு தன் குதிரையின் மீது தாவி ஏறினான். விரைவில் அவன் வஜ்ரபாஹுவின் அருகில் போய்ச் சேர்ந்தான்.

வஜ்ரபாஹு திரும்பிப் பார்த்து, "தம்பி! வந்துவிட்டாயா? உன் முகத்தைப் பார்த்தால், என்னோடு சண்டை பிடிக்க வந்தவன் மாதிரி தோன்றுகிறது; அப்படித் தானோ?" என்றான்.

"பயப்படாதீர்கள். அப்படி நான் உங்களோடு சண்டை செய்ய வந்திருந்தாலும் பின்னாலிருந்து முதுகில் குத்திவிட மாட்டேன்! முன்னால் வந்துதான் சண்டையிடுவேன்! போர்க்களத்திலிருந்து ஓடும் எதிரியின் முதுகில் வேலை எறிந்து கொல்லும் தைரியம் எனக்குக் கிடையாது!" என்று பரஞ்சோதி கசப்பான குரலில் சொன்னான்.

வஜ்ரபாஹு சற்று மௌனமாயிருந்துவிட்டு, "அப்பனே! ஓடித் தப்ப முயன்றவனை நான் வேல் எறிந்து கொன்றிராவிட்டால் என்ன நேரும் தெரியுமா?" என்றான்.

"என்னதான் நேர்ந்துவிடும்?"

"நாம் பார்த்த மாபெரும் வாதாபி சைனியம் ஒரு மாதத்திற்குள்ளாகக் காஞ்சி நகரின் வாசலுக்கு வந்து சேர்ந்துவிடும். வைஜயந்திப் பட்டணத்துக்கு என்ன கதி நேர்ந்ததென்று சொன்னேன் அல்லவா?"

"வைஜயந்தியின் கதி காஞ்சிக்கு நேருமா? பல்லவ சைனியம் எங்கே போயிற்று? மகேந்திர சக்கரவர்த்தி எங்கே போனார்?"

"அதுதானே மர்மமாயிருக்கிறது, தம்பி! காஞ்சியிலிருந்து கிளம்பிய மகேந்திர பல்லவர் எங்கே போனார் என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை! அவர் இன்னும் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வந்து சேரவில்லையாம்!" என்றான் வஜ்ரபாஹு.

பரஞ்சோதி சற்றுச் சும்மா இருந்துவிட்டு, "ஐயா! அப்புறம் அர்ச்சுனன் என்ன செய்தான்? சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

(தொடரும்)

ஐயா

உலகம் உங்கள் உள்ளங்கையில்...



உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும், அப்பகுதியில் வாழும் மக்களுடன் நீங்கள் உரையாட, உறவாட ஆங்கில மொழி தெரிந்திருந்தால் போதும் என்பதுஉங் களுக்குத் தெரியும். இத்தகையச் சிறப்புப் பெற்ற உலக மொழியான ஆங்கிலத்தை நீங்கள் எளிய முறையில் தமிழில், தபால் மூலம் கற்றுக் கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு.

ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்க மின்றிச் சரளமாக உரையாட,

இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுத தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

விட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் நீங்களும் இப்பயிற்சியை மேற் கொள்ளலாம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு

இன்றே உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள். பயிற்சி பற்றிய விவரங்களை உடனே உங்களுக்கு அனுப்பி வைப் பார்கள். இனியும் தயக்கம் ஏன்? இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

இனி உலகம் உங்கள் உள்ளங்கையில்!

☎ 441216

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்:4986, 9,நடேசன் தெரு, தி.நகர், சென்னை-17.

NAGA

பாம்பே டையிங்

வாங்குவீர், சேமிப்பீர்

தள்ளுபடி விற்பனை

எல்லா வகை பாம்பே டையிங் துணிகள் மற்றும் விவால்டி ரெடிமேட் அணிவரிசைமேல்

15% தள்ளுபடி

பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள்,
பாலியெஸ்டர் மற்றும்
பாலியெஸ்டர் வுல்
ப்ளெண்டெட் சூட்டிங்குகள்
எல்லா ரகங்களுக்கும்

15% தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும் காட்டன்
விரிப்புகள், டவல்கள்,
ஃப்ர்னிஷிங்குகள்,
ப்ளாங்கெட்டுகள் மற்றும்
க்வில்ட்கள் - எல்லா ரகங்களுக்கும்

15% தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும் காட்டன்
சேலைகள், டிரெஸ்
மெட்டீரியல்கள், ரூபியா,
கேம்ப்ரிக், லான் - எல்லா
ரகங்களுக்கும்

15% தள்ளுபடி

விவால்டி ரெடிமேடு
ஷர்ட்டுகள், ட்ரௌசர்கள்,
ஜீன்ஸ்கள், பனியன்கள்,
ஜட்டிகள், கைக்குட்டைகள்
-மற்றவைகளுக்கும்

தமிழ்நாடு, கேரளா, மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள எங்களது 120-க்கும் மேற்பட்ட ஷோரூம்களிலும் 600-க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற டீலர்களிடமும் கிடைக்கும்

விநியோகஸ்தர்கள்
சிவ்ராம்ஸ் அஸோஸியேட்ஸ்/சிவ்சேல்ஸ் கோயமுத்தூர் - 11 சென்னை - 17

Bankers : The Federal Bank Ltd.

இச்சலுகை குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே



ஜல்லிக்கட்டு:

வீரமா? குரூரமா?

விவாதிப்பவர்கள்: பாபு — திரைப் பட ஒளிப்பதிவாளர்; ரவிச்சந்திரன்— வங்கி ஊழியர்.



பாபு: முரட்டுக்காளை படத்துக்காக 'ஜல்லிக்கட்டு' காட்சியைப் படமாக்கிய என்னுடைய அனுபவம் திரில்லிங்கானது. ரொம்பவும் ரிஸ்க் எடுத்துக் கொண்டு அந்தக் காட்சியைப் படம் பிடித்தேன். பாய்ந்து வந்த காளை, ஒருவரைத் தூக்கி எறிந்தது. மதுரை பக்கத்துக் கிராமங்களில், ஜல்லிக்கட்டுக்கு என்றே, பலர் ஸ்பெஷலாய்க் காளைகளை வைத்திருப்பார்கள். ஒவ்வொன்றும் கம்பீரமாய் இருக்கும்.

ஜல்லிக்கட்டுக் காளை அங்கேயெல்லாம் ஓர் அந்தஸ்துக்குரிய விஷயம்.

ரவிச்சந்திரன்: நானும் மதுரைக்காரன் தான். பொங்கலுக்கு முந்தைய சில நாட்களில், அந்தப் பக்கத்துக் கிராமங்களுக்குப் போனால், ஜல்லிக்கட்டுக்காகக் கொம்பு சீவி, வண்ணம் அடித்து, காளைகளைத் தயார் செய்வதைக் காணலாம். ஆனால் ஜல்லிக்கட்டு ஒரு குரூரமான விளையாட்டு! மனிதனும், மாடும் நேருக்கு நேர் மோதிக் கொள்வதை எப்படி சார் ரசிக்க முடியும்?

பாபு: மனிதனும், மாடும் மோதுவதாய்ச்



• பாபு

சொல்லுவதே தப்பு. ஜல்லிக்கட்டுக்கு மஞ்சு விரட்டு என்றும் ஒரு பெயர் உண்டு. அதாவது, ஒரு காளையை விரட்டி, ஒரு சில நிமிடங்கள் அடக்கி, தன் வசப்படுத்தி, அதன் கொம்பில் கட்டப்பட்டுள்ள பரிசுப் பொருளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதானே! இதிலே கொடுமை எங்கே வருகிறது?

ரவி: இது ரொம்ப ரிஸ்கான விளையாட்டாயிற்றே? பாய்ந்து வரும் காளை தாக்கினால், அதனுடன் மோதுகிறவரின் கதி?

பாபு: அப்படிப் பார்த்தால், எந்த விளையாட்டில்தான் ரிஸ்க் இல்லை? கார் ரேஸ் நடக்கிற போது, கார் உருண்டு, மோதி, தீப்பிடித்துக் கொள்வதில்லையா? 'பஞ்சி ஜம்ப்பிங்' என்று ஒரு விளையாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே! மலை மீதிருந்து கால்கள் இரண்டையும் கட்டிக் கொண்டு தலைகுப்புறக் கீழே பள்ளத்தாக்கில் குதிக்கிற விளையாட்டு — அப்படி குதிக்கும் போது தவறிப் போய்த் தலை ஏதாவது பாறையில் மோதினால் தேங்காய் போல உடைந்து சிதறி விடும். கரணம் தப்பினால் மரணம்தான்! அதைத் தெரிந்து கொண்டு தானே பஞ்சி ஜம்ப்பிங் செய்கிறார்கள். இப்படி ரிஸ்க் இருப்பதால்தானே வீர விளையாட்டு என்று சொல்கிறார்கள்!

ரவி: இது எப்படி வீர விளையாட்டாக இருக்க முடியும்! ஆபத்தான விளையாட்டு என்று வேணுமானால் சொல்லலாம்! மஞ்சு விரட்டில் பாதிப்பு, காளையுடன் மோதுகிறவருக்கு மட்டும் இல்லையே! வாயில்லா ஜீவனான காளைக்கு ஏற்படும் உடல், மன பாதிப்பும் ஏராளம். அதே மாதிரி வேடிக்கை பார்க்கக் கூடியிருக்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்கும் பாதிப்பு. காளை மிரண்டு, தறிகெட்டு ஓடும் போது பார்வையாளர் பலரையும் இடித்துத் தள்ளி, முட்டி மோதியபடிதானே போகிறது? ஜல்லிக்கட்டு பார்க்க வந்தவர்கள் அடிபட்டுச் சாவது என்பது வாடிக்கையாகி விட்டது.

பாபு: அதற்கு யார் என்ன செய்ய முடியும்? ஜல்லிக்கட்டை வேடிக்கை பார்க்க வேண்டுமென்றால் அதற்குரிய ரிஸ்க் எடுத்துக் கொண்டுதான் வர வேண்டும். கூச்சல், குழப்பம் என்றால் மாடுகள் மிரளத்தானே செய்யும்!

ரவி: இந்த முரட்டு விளையாட்டை நடத்தித்தான் தீர வேண்டுமென்றால் ஒழுங்காகப் பாதுகாப்பு ஏற்பாடுகளாவது செய்ய வேண்டும். ஒரு தடுப்பு போல வைத்து, அதற்குள் காளைகளை விரட்டிப் பிடிக்கும்



• ரவிச்சந்திரன்

படி ஏற்பாடு செய்தால், மக்கள் தடுப்புக்கு வெளியே இருந்து பார்த்து ரசிக்க முடியுமல்லவா?

பாபு: கட்டைகளால் தடுப்பு ஏற்படுத்தி

னால், மிரண்டு வரும் காளை, கட்டைகளை யெல்லாம் பெயர்த்து விட்டு ஓடும்; அல்லது தடுப்பையே தாண்டி, எகிறிப் பாயும்; கல் சுவர் என்றால், ஆக்ரோஷமாய் வந்து சுவரில் மோதுகிற போது, காளைக்குப் பலமாய் அடிபடும். விசாலமாக இடம் விட்டு அடைப்பு ஏற்படுத்தினால் மஞ்சு விரட்டைக் கிட்டே இருந்து பார்த்து ரசிக்கிற சுவாரசியம் போய் விடும்.

ரவி: ஏன், ஸ்பெய்னில் காளை மாட்டுச் சண்டை பிரபலமாயிற்றே! அங்கேயெல்லாம் பெரிய மைதானத்தினுள் வீரனும், காளையும் சண்டையிட, சுற்றிலும் கேலரியில் அமர்ந்து மக்கள் பார்த்து ரசிப்பார்களே! அங்கே சுவாரசியம் குறைந்து போய் விட்டதா என்ன?

பாபு: ஸ்பெயின் நாட்டின் புல் ஃபைட்டையும் நம்ம ஊர் ஜல்லிக்கட்டையும் ஒப்பிடுவதே தவறு. அங்கே காளையைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்வார்கள். இல்லையென்றால், காளையிடம் மனிதன் சித்திரவதைப்படுவான். பார்வையாளர்கள் மனத்தில் ஒருவித ஸாடிஸ்டிக் மகிழ்ச்சியே மேலோங்கி நிற்கும்.

ரவி: அப்படிப் பார்த்தால், இங்கே கூடத்தான் காளைகளுக்கு வெறியூட்டச் சாராயம் ஊற்றுகிறார்கள். இது தவறில்லையா? வாயில்லா ஜீவனுக்குப் போதையேற்றி, மிரளச் செய்து... அதிகமான எண்ணிக்கையில் பார்வையாளர்களுக்கு அடிபடுவதற்கு இதுதான் காரணம்.

பாபு: சாராயம் ஊற்றுவது தவறுதான். நானும் ஒப்புக் கொள்ளுகிறேன்.

ரவி: கொம்புகளைக் கூராய்ச் சீவி விடுகிறது கூட வம்பை விலைக்கு வாங்குகிற வேலைதானே?

பாபு: அதுதானே வீரத்துக்கு அடிப்படை? பாய்ந்து வரும் காளையைப் பிடிக்கவே தைரியம் வேண்டும். அதிலும் கூரிய கொம்புகளுடன் பாய்ந்து வரும் காளையைப் பிடிக்க அதிகப்படியான துணிச்சல் தேவைதானே? இத்தகைய துணிச்சலான விளையாட்டு தமிழ் நாட்டு மண்ணுக்கு உரியது என்பது குறித்து நாம் பெருமைப் படலாம். ஜல்லிக்கட்டு உள்நாட்டு டூரிஸ்ட்டுகளை மட்டுமின்றி, அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் அதிக அளவில் ஈர்க்கிற ஒரு விஷயம். அதுவும் இந்த ஆண்டு அகில உலகச் சுற்றுலா ஆண்டு. இந்தியாவில், இன்றைக்குள்ள சூழ்நிலையில், பல முக்கியமான சுற்றுலாத் தலங்கள், சுற்றிப் பார்க்க ஏற்றதொரு நிலைமையில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் நம் மாநில அரசு, மஞ்சு விரட்டு போன்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விஷயங்களைப் பிரமாதமாய் விளம்பரப்படுத்தி, அதிக எண்ணிக்கையில் டூரிஸ்ட்டுகளை ஈர்க்க வேண்டும்.

ரவி: உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? தமிழ்நாட்டுச் சுற்றுலாத் துறை, ஜல்லிக்கட்டை ஒரு விளம்பர அம்சமாய்ப் பயன்படுத்தியதற்குப் பலத்த எதிர்ப்புத் தோன்ற, அரசாங்கமே இனி ஜல்லிக்கட்டை, சுற்றுலாத் துறை விளம்பரங்களில் பயன்படுத்துவதில்லை என்று தீர்மானித்து விட்டது. இதிலிருந்தே ஜல்லிக்கட்டு வீரம் மட்டுமில்லை; கொடுமையும் கூட என்று புரிகிறதல்லவா!

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி.**

வண்ணப்படங்கள்: **வி. முத்துராமன்.**

புகைப்படங்கள்: **சோமு.**



தலையைப் பலிகொடுத்துக் கால்பந்து!

உலகப் போரின் போது நாஜி படையினர் உக்ரைன் தலைநகரான கீவ் நகரைக் கைப்பற்றிய சமயம் ரஷ்ய விளையாட்டு வீரர்களைத் தங்கள் குழுவுடன் கால்பந்துப் போட்டியில் ஈடுபடுமாறு சவால் விட்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றால் தங்கள் தலை தப்பாது என்பதை நன்கு உணர்ந்திருந்த போதிலும் ரஷ்ய வீரர்கள் கடுமையாக விளையாடி வெற்றி பெற்றுக் கூடியிருந்த தாய்நாட்டு மக்களின் முன் தங்கள் நாட்டுப் பெருமையைக் காப்பாற்றினர்.

எனினும் எதிர்பார்த்தபடி நாஜிகள் ஈவிரக்கமின்றி ரஷ்ய வீரர்களைக் கொன்று விட்டனர்.

உயிரா, மானமா என்ற பிரச்னையை முன் வைத்து மானங்காத்து உயிர் நீத்த கால்பந்தாட்ட வீரர்களின் நினைவாகக் கால் பந்தாட்ட வீரர் ஒருவர் ஆக்ரோஷமாகப் பந்தை உதைப்பது போன்ற சிலை ஒன்று, சில ஆண்டுகளுக்கு முன், போட்டி நிகழ்ந்த அதே மைதானத்தில் நிறுவப்பட்டது.

— தெ. சுந்தரமகாலிங்கம்.



COUNT DOWN – 0

பாகிஸ்தானுக்கு முதல் பத்திரிகை!

"கதை இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறது. அச்சுதன்!''

கர்னலின் குரலில் இருந்த வியப்பு அச்சுதனையும் தொற்றிக் கொண்டது.

''இவை நீங்கள் எதிர்பார்த்த மைக்ரோ ஃபிலிம்கள் இல்லையா, கர்னல்?''

''இந்தியாவுக்கு எதிரான வன்முறைப் பயிற்சி முகாம்கள் பாகிஸ்தானில் எங்கெங்கே இருக்கின்றன என்பது பற்றிய தகவல்கள் இந்த ஃபிலிம்களில் இல்லை...''

''பின்னே?''

''இந்த ஃபிலிம்கள் பாகிஸ்தானின் சரித்திரத்தையே மாற்றி எழுதப் போகின்றன அச்சுதன்.''

''புரியவில்லை கர்னல்.''

''சொல்கிறேன். தில்லி போகும் வழியில்.''

''தில்லியா... இப்போதுதான் ஹைதராபாத் கட்டடங்களையே நிமிர்ந்து பார்க்க ஆரம்பித்தேன். இன்னும் பிர்லா மந்திர், சார்மினார், சாலார் ஜங் மியூஸியம் என்று எத்தனை இடங்களுக்கு அழைத்துப் போவதாக ப்ராமிஸ் பண்ணியிருக்கிறேன், தெரியுமா கர்னல்?''

''சாந்தினியிடமா?'' கர்னல் சக்கர நாற்காலியில் சற்று முன்னே நகர்ந்து குனிந்து அச்சுதனின் முகத்தில் படர்ந்த லஜ்ஜையை ரசித்தார். ''இந்த கர்ஃப்யூ சமயத்திலா? உன் ஹனிமூனின் போது எல்லா இடங்களுக்கும் சாந்தினியைக் கூட்டி வரலாம். இப்போது தில்லி.''

ராணுவ விமானம் தில்லியைத் தொட்ட போது பனி சூழ்ந்திருந்தது. விமானத்தின் பிரும்மாண்ட விளக்குகளே வலுவிழுந்திருந்தன. ராணுவ ஜீப் அவர்களை அள்ளிக்கொண்டு போகத் தயாராக இருந்தது. ஜீப்பின் உச்சியில் இருந்த குமிழ் விளக்கு சுழன்று சுழன்று தன் அவசரத்தைத் தெரிவித்தது.

புது தில்லியின் ஆதவ உதய சமயத்தில் ஜீப் விரைந்தது.

சாந்தினி சால்வையை இழுத்துப் போர்த்தியிருந்தாள். சால்வைக்குள், அச்சுதனின் வெப்பமான கையைத் தன் கையுடன் கோத்திருந்தாள். சாந்தினியின் அண்மையும், நெருக்கமும் தரக்கூடிய துடிப்பான சந்தோஷத்தை விடவும், பிரதமரைச் சந்திக்கவிருக்கும் கணங்களின் முக்கியத்துவம் அச்சுதனின் நரம்புகளில் பரவி இருந்தது.

ஜீப்பைச் செலுத்திக் கொண்டிருந்த கேப்டன் யாதவ் கர்னல் அருள்தாஸின் புறம் திரும்பினான்.

''என்ன கர்னல், வெகு அவசரமான செய்தி என்று தகவல் வந்தது?''

''ஸாரி கேப்டன், இது பரம ரகசியமான விஷயம். உன்னிடம் சொல்லக் கூட எனக்கு அனுமதி இல்லை.''

கர்னல் ரகசியம் என்று சொன்னால் அது ரகசியமே!

ஜீப் பிரதமரின் வீட்டுக்குள் நுழைந்தது. வாசல் பக்கம் டெண்ட் அடித்து செக்யூரிட்டி. வரவேற்கும், பாதுகாக்கும், காவல்புரியும் இரும்புறுதி மனிதர்கள். புல்வெளி.

செக்யூரிட்டிக்காரர்களின் சம்பிரதாயமான சோதனைகள்.

சாந்தினியை முன்னறையில் விட்டு விட்டு, கர்னலும், அச்சுதனும் மட்டும் உள்ளறைக்குள் நுழைந்தார்கள். காத்திருக்கச் சொல்லப்பட்டார்கள். காத்திருந்தார்கள்.

கர்னலின் சக்கர நாற்காலி மட்டும் அதி முக்கிய சிந்தனை காரணமாக முன்னும் பின்னும் உருண்டது.

உள்ளறைக் கதவு திறந்து பிரதம மந்திரி நுழைந்தார். தூக்கமற்ற கண்கள். களைத்த உடல். கைகளைக் கூப்பி வணங்கினார். அரைக் கோட்டை சட்டையின் மேல் இழுத்து விட்டுக் கொண்டார்.

அச்சுதன் எழுந்து நின்று வணங்கினான்.

''கர்னல், வெகு முக்கியம் என்று உங்களிடமிருந்து தகவல் வந்ததால், இன்றைக்குக் காலையில் நான் கலந்து கொள்ள இருந்த ஒரு நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டேன்'' என்றார் பிரதமர் இருக்கையில் அமர்ந்ததும்.

ஒருவரை ஒருவர் ஒற்று அறியாதீர்கள்.

— புனித குரான்.

அஞ்சனா மைக்கேல்ராஜ்

கர்னல் நேரடியாகத் தொடங்கினார்.

"இந்தியாவுக்கு எதிரான முகாம்களைப் பாகிஸ்தான் நடத்திக் கொண்டிருக்கிறது என்ற நம்முடைய சந்தேகம் காரணமாக அவை பற்றி ஆராய்ந்தோம். பாகிஸ்தானின் முக்கிய ராணுவ அதிகாரிகளில் ஒருவரான அப்துல் கரீம் என்பவர், வன்முறை முகாம்களைப் பற்றிய விவரங்களை மைக்ரோ ஃபிலிம்களில் பதிவு செய்து ஒரு டம்மித் துப்பாக்கியில் ஒளித்து வைத்திருக்கிறார் என்ற ரகசிய தகவல் நமக்குக் கிடைத்தது. அதைக் கவர்ந்து வர அமீர் ஜவஹர் என்ற டபிள் ஏஜண்டை நியமித்தோம். அவனும் அந்த டம்மித் துப்பாக்கியைச் சாதுர்யமாகக் கவர்ந்து வந்தான். ஆனால் இந்திய கேப்டன் மணிமாறனின் தேசத்துரோகம் காரணமாக டம்மித் துப்பாக்கி அவனிடம் போய் விட்டது. அவனைத் துரத்தி அந்தத் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு வந்தவன் இதோ இங்கே இருக்கும் அச்சுதன்..."

"அச்சா!"

"துப்பாக்கியில் இருந்த ஃபிலிம்களை பிராசஸ் செய்து பார்த்த போது நமக்கு வியப்பு காத்திருந்தது. ஃபிலிம்கள் வன்முறை முகாம்களைப் பற்றியவை அல்ல."

"பின்னே?"


"பாகிஸ்தானில் நாளை ஜின்னா பல்கலைக் கழகம் தன் வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறது.

"நமக்கும் அழைப்பு வந்திருக்கிறது."

"அந்த விழாவில் சொற்பொழிவாற்றி வெள்ளி விழா மண்டபத்தைத் திறந்து வைக்கப் பாக் பிரதமர் ஒப்புக் கொண்டிருக்கிறார்."

"தெரியும்."

"அந்த விழா மேடையில் பிரதமர்



உபயோகிக்கப் போகும் மைக்கிலும், அவர் நிற்கும் மேடைப் பகுதியிலும் வெடிகுண்டுகளைப் பொருத்தி, அவரைத் தீர்த்துக் கட்டும் சதி வேலையைப் பாகிஸ்தான் ராணுவத்தின் சில உயர் அதிகாரிகள் திட்டம் போட்டிருக்கிறார்கள்."

"மை காட்!"

"பாகிஸ்தானை மறுபடி ராணுவத்தினர் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரத் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தின் பல்வேறு கட்டங்களை மைக்ரோ ஃபிலிம்களில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அமீர் ஜவஹர் அதைக் கவர்ந்து வந்து விட்டதால் தான், அந்த ஃபிலிம்களை உடனே கைப் பற்றும் அவசரத்துடன் பாகிஸ்தானிலிருந்து செயல்பட்டிருக்கிறார்கள். இருந்தும் அச்சுதன் ஜெயித்து விட்டான்."

"ஜனநாயக ஆட்சியைக் கலைக்கும் எந்த திட்டத்திற்கும் இந்தியா என்றைக்கும் துணை போகாது" என்றார் பிரதமர். "இப்போதே ஹாட்லைனில் பாகிஸ்தான் பிரதமரிடம் நானே பேசுகிறேன். இந்த சதித் திட்டத்தைப் பற்றிச் சொல்லி எச்சரிக்கிறேன். இந்தியா அமைதியைத்தான் விரும்புகிறது. அண்டை நாடுகளின் நட்பைத்தான் விரும்புகிறது என்று புரிந்து கொண்டு, இனி மேலாவது இந்தியாவுக்கெதிரான செயல்களில் பாகிஸ்தான் ஈடுபடாமல் இருக்கும் என்று நம்புவோம்... கர்னல் நீங்களும் என்னருகிலேயே இருங்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர்களைப் பாக் பிரதமருக்குச் சொல்ல வேண்டும்."

எழுந்தார். அச்சுதனின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"உன்னைப் போன்ற துடிப்பான இளைஞர்கள் இந்தியாவுக்கு நிறையத் தேவை."

TOP MEN IN PAK ARMY REPLACED.
PAK PM's SURPRISE MOVE!

— தினசரிகளில் கொட்டை எழுத்துக்கள் முதல் பக்கங்களைச் சாப்பிட்டிருந்தன.

சாந்தினியிடமிருந்து பேப்பரை வாங்கி மடித்து வைத்தான் அச்சுதன்.

"இப்போது போய் பேப்பர் படிக்க வேண்டுமா?"

"வேறென்ன 'செய்ய வேண்டும்?" என்றாள் சாந்தினி கொஞ்சம் மழலையான குரலில்.

"ஒத்திகை பார்க்க வேண்டும்?"

"எதற்கு?"

"கல்யாணத்திற்குப் பிறகு என்ன செய்யப் போகிறோம் என்பதற்கு..."

சாந்தினியின் முகம் நாணத்தால் சிவந்தது. தலைகுனிந்தாள்.

"சீய்..." என்றாள்.

"சாந்தினி" அச்சுதனின் வெப்பமான மூச்சுக்காற்று அவள் கழுத்தில் மோதியது. சாந்தினியின் உடல் கழுத்து நீவி விடப்பட்ட கன்றுக் குட்டிக்குச் சிலிர்ப்பது போல் சிலிர்த்தது.

"ம்.."

"ஐ லவ் யூ."

"அச்சுதன்..."

"ம்?"

சாந்தினி இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு விரலிடுக்கு வழியே அவனைப் பார்த்தாள்.

"நான்..."

"நான்?"

"நிங்களை..."

"நிங்களை?"

"பிரேமிக்குனு... சரியா அச்சுதன்?"

"நீ எவ்வளவு தப்பாய்ச் சொன்னாலும் சரியாய்த்தான் இருக்கும்" என்று அவளை நோக்கிக் குனிந்தான் அச்சுதன்.

அருகில் கர்னலின் கனைப்புக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விலகினான் அச்சுதன்.

"அவசரமா அச்சுதன்?"

"ஹி... ஹி..."

"சாந்தினி, நீ சொன்னாயே என்று உன் அப்பாவைப் போய்ப் பார்த்தேன். உன் கல்யாணச் செய்தி கேட்டு சந்தோஷப் பட்டார். கல்யாணம் முடிந்த கையோடு ஆசீர்வதித்து விட்டுப் போய் விடுகிறாராம்.

இந்தத் தள்ளாத வயதில் உன் குடும்பத்தோடு வந்து பாரமாக இருக்க விரும்பவில்லை என்று சொல்லி விட்டார்.''

''சொந்த அப்பாவை வைத்துக் கொள்வது பாரமா?''

''இந்திய அரசாங்கம் பார்த்துக் கொள்கிற அளவுக்கு அன்பாய், அனுசரணையாய் நீங்கள் பார்த்துக் கொள்வீர்களோ, மாட்டீர்களோ என்று அவருக்குச் சந்தேகம் இருக்கலாம்'' என்றார் கர்னல் கண்களைச் சிமிட்டி.

''கர்னல்?''

''என்ன டியர்?''

''உங்கள் அனுமதியுடன் என் முதல் இன்விடேஷனைப் பாகிஸ்தானில் ஒருத்தருக்கு அனுப்ப விரும்புகிறேன் கர்னல்.''

''யாருக்கு?''

''மேஜர் நாஸருக்கு. என்னையும், அண்ணனையும் பார்த்துப் பார்த்து வளர்த்தவர் அவர்தான். தேசத்தின் காரணமாக எங்களிடம் பொய் சொல்லியிருக்கலாம். எங்களைப் பயன்படுத்த திட்டங்கள் போட்டிருக்கலாம். ஆனால் அவருடைய பாசத்தில் பொய் இருந்ததில்லை. அண்ணன்தான் சதுரங்க ஆட்டத்தில் பகடைக்காய் மாதிரி வெட்டப்பட்டு விட்டான்...'' சாந்தினியின் கண்களில் கண்ணீர் மிதந்தது.

கர்னல் அவள் கண்ணீரைச் சுண்டி விட்டார்.

''ரோ மத் பேட்டீ'' என்றார் கர்னல் முதல் முறையாகப் பாசத்தால் நெகிழ்ச்சியுற்று.

''அமீர் ஜவஹர்.. வெரிகுட் பாய்.. பட்புவர் பாய்...'' சாந்தினியின் தலையை மெல்ல வருடினார்.

''நீ இன்விடேஷனைக் கொடு சாந்தினி பேட்டீ. மேஜர் நாஸர் பாகிஸ்தானின் எந்தச் சிறையில் அடைபட்டிருக்கிறாரோ, பாவம்! இருந்தாலும் உன் முதல் அழைப்பிதழ் அவர் கைகளுக்குப் போய்ச் சேர நான் ஏற்பாடு பண்ணுகிறேன்...''

சக்கர நாற்காலி அச்சுதன் பக்கம் திரும்பியது!

''அச்சுதன், உன்னால் எத்தனையோ தேசத்துரோகிகளைக் கைப்பற்றி இருக்கிறோம். அவர்களுக்கான தண்டனையை கோர்ட்கள் தீர்மானிக்கட்டும். நீ நாளையிலிருந்து மறுபடியும் வழக்கம் போல் சர்க்கார் ஆபீஸ் ஊழியன் அச்சுதன். அடுத்த அவசியம் வரும் வரை... கொச்சு வேலாயுதம் இல்லாமல் நீ எப்படி சமாளிக்கப் போகிறாய் என்றுதான் எனக்குப் புரியவில்லை.''

''எந்தா கர்னல்... அச்சுதன் சாருக்கு ஞான் உண்டல்லே?'' என்றான் சாந்தினி மூக்கால் மலையாளம் முயற்சி செய்து.

(முற்றும்)



* நாட்டியம் ஆரம்பிக்கப் போகிறது.

கட்டுரை,
படங்கள் :
திலீப்பிரகாஷ்

ஜபுவாவில் பகோரியா :

வடக்கே ஒரு வண்ணமிகு விழா!

ஒழுங்கான வயல்களும் சலசலக்கும் சிற்றோடைகளும் அங்கங்கே தென்படும் உயரமான மரங்களும் திடீரென்று காணாமல் போய் விடுகின்றன! சாலை சர்ப்பமாக நெளிந்து வளைய ஆரம்பிக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரத்துக்குக் காவிச் செம்மண் நிறத்தில் வறண்ட குன்றுகள் நிறைந்த பிரதேசம் விரிகிறது! மேடு பள்ளங்களில் சின்னக் குடிசைகள் சிதறிக் கிடக்கின்றன.

மத்தியப் பிரதேசத்தை குஜராத்தும் ராஜஸ்தானும் முட்டும் எல்லையில் இருக்கிறது ஜபுவா. இண்டோரிலிருந்து ஜபுவாவை நோக்கிப் பிரயாணம் செய்யும் போதுதான் ஊரை நெருங்க நெருங்க, சூழ்நிலையில் மேற்படி மாறுதல் தெரிகிறது.


நிலப்பரப்பின் பழுப்புப் பின்னணியை உயிர்ப்பித்து ஒளிரச் செய்வது பழங்குடி மக்களின் வண்ணமிகு ஆடைகள். பளீரிடும் சிவப்பிலும் ரோஜா, சாமந்தி நிறங்களிலும் முண்டாசுகள், பாவாடைகள், சோளிகள். கிழங்கு போல் வெள்ளியில் கொலுசு; வளை, ஜிமிக்கி, நத்து என்று கனமான நகைகளைப் பூண்டிருந்தனர் பெண்கள். இவர்கள், ஆட்டுக் குட்டி, கோழிகள், சட்டி, பானைகள் என்று வகை வகையான சுமைகளைத் தவிர குழந்தைகளையும் தூக்கியபடி ஆண்களைப் பின் தொடர்ந்து ஜபுவாவை நோக்கிச் சென்றார்கள்.

ஒவ்வொரு வருடமும் ஹோலிப் பண்டிகைக்குச் சற்று முன்னால் துவங்கும் 'பகோரியா' கொண்டாட்டம் அன்று ஜபுவாவில் நடைபெறவிருந்தது. பில், பில்லால — பழங்குடிகள்; அக்கம் பக்கத்துக் கிராமவாசிகள், காவல் துறையினர், விருந்தினர் என்று அலையலையாய் ஜன சமுத்திரம் ஜபுவாவுக்குள் நுழைந்தது.

பெரிய திறந்த வெளியில் சந்தை விரித்திருந்தது. அசப்பில் பார்த்தால் சாதாரண காய்கறி மார்க்கெட் போல் தோன்றினாலும் உட்புகுந்து பார்த்த போது ஒரு சூப்பர் மார்க்கெட்டே தெரிந்தது. பன்றிக் கூட்டங்கள் குப்பையைத் தேடித் திரிந்தன; ஆடுகள் திமிரெடுத்த முதுகுகளைக் கம்பங்களில் தேய்த்துக் கொண்டன; 'எந்த டண்டூரி அடுப்பு அழைக்குமோ' என்ற விசாரத்தில் கோழிகள் நடுங்கியபடி மூங்கில் கூடைகளில் அடைந்து கிடந்தன. காய்கறிகள், தானியங்கள், மசாலா சாமான்கள், பிளாஸ்

டிக் பொருள்கள், பிஸ்கட், இனிப்பு வகைகள், உருகிச் சொட்டும் குல்ஃபி, கசியும் வெல்லம், கரும்பு... இந்த 'சூப்பர் மார்க்கெட்'டில் விற்பனையும் பண்டமாற்றும் படு சுறுசுறுப்பாக நடந்தன. ஆனால் அந்தப் பண்டங்களை வாங்கியவர்களைக் காட்டிலும் பிறர் வாங்கும் போது அறிவுரை கூறி, அழகு பார்த்து, விமர்சித்து மகிழ்ந்த மக்கள்தான் அதிகம்!

மற்றொரு பகுதியில் சிகை அலங்காரக் கடைகளும், மசாஜ் பார்லர்களும் வரிசைகட்டியிருந்தன. பெண்கள் வம்பளந்தபடி காத்திருக்க, ஆண்கள் முகத்தையும் தலையையும் நிபுணர்கள் வசம் ஒப்படைத்தனர். கத்தரிக்கோல், கத்தி, எண்ணெய், ஷாம்பூ என்று எல்லாவற்றுக்கும் வேலை கொடுத்துவிட்டு, கடைசியில் அனைத்தையும் மறைக்கும் அலங்கா



• சந்தை



• சிகை அலங்காரம்

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்?

மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் ஸூரிய பகவான், ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் ஸூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர்: ஸங்கராந்தி சமயம் ஸூக்ஷ்மமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸ்ங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

"ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்"

ரத் தலைப்பாகை மீண்டும் பொருத்தப்பட, பகோரியா கொண்டாட்டத்துக்கு மிடுக்கு டன் சென்றனர் அவர்கள்!

கூச்சலும் குதூகலமும் நிரம்பிய இந்தச் சூழலில்தான் தாளகதியுடன் இலேசான ஓசை ஒன்று எழுந்தது. விரை விலேயே அந்த ஒலி தாங்க முடியாத அள விற்கு உயர்ந்தது. 'டம் டம்' என்று மேளம் முழங்க, 'சலங் சலங்' என்று தாளம் முழங்க, சாரிசாரியாக வந்தனர் நாட்டியக் கலை ஞர்கள். வெயிலின் உக்ரமும் உள்ளூர் 'சரக்'கான மஹுவாவின் வீரியமும் ஒருங்கே ஏற, நடனம் ஆரம்பமாயிற்று.

தாளகதிக்கு ஏற்ற எளிமையான, உயிர்த் துடிப்புள்ள நடனம். சுழன்று சுழன்று அவர் கள் ஆடியதைப் பார்க்க வந்த கூட்டம், வீட்டுக் கூரைகள் மீது ஏறிக் கை கொட் டிக் கும்மாளம் போட்டது.

இளைஞர்களும் யுவதிகளும் காதல் வயப்பட்டு, கண்காணாமல் போய், மீண் டும் சந்தித்துக் கடைசியில் திருமணம் செய்து கொள்வதற்குத் தகுந்த நிலைக் களன் பகோரியா கொண்டாட்டம். உடம் பில் வெள்ளியும் கண்களில் மையும் தரித்து இளம் பெண்கள் வளைய வந்தனர். ஆண் களோ கவர்ச்சியான முண்டாசுகளும் காது களில் நீளமான சங்கிலிகளும் அணிந்து காட்சியளித்தனர். கண்கள் சந்தித்துக் கைதாகி நின்றால், அடுத்த கட்டமாக இளைஞன் யுவதிக்கு, ஐஸ் ஃப்ரூட் வாங் கித் தந்து, குடை ராட்டினத்தில் ஏற்றி விடு வான்...

கூட்டம் முழுதுக்குமே குடை ராட்டினம் தான் ரொம்பவும் பிடித்திருந்தது. வளைந்து நீண்ட கியூ வரிசைகளில் தங்கள் 'டிஸ்னி லாண்ட்' அனுபவத்தை ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்து நின்றனர் அந்த எளிய மக்கள். எண்ணெய்ப் பூச்சில் பளபளத்த கட்டுமஸ்தான உடலுடன் நான்கு பேர் குடை ராட்டினத்தை இயக்கினர். மூச்சி ரைக்க, வியர்வை வழிய அவர்கள் சக்கரத் தைச் சுழற்றிய போது, ராட்டினத்தில் தாவணி பறக்க அமர்ந்த பெண்கள், ஒரு வரை ஒருவர் பற்றிக் கொண்டு, இறுகக் கண்களை மூடிக் கொண்டு 'வீல் வீல்' என்று கூச்சலிட்டனர்!

குடை ராட்டினச் சக்கரங்களின் வேகம் தணிந்தது. நிழல்கள் நீண்ட நேரத்தில் கூட்டம் கரைய ஆரம்பித்தது. உள்ளூர் டாக்ஸிகள், பஸ்களின் கூரை, மாட்டு வண்டிகள் என்று பலவித வாகனங்களிலும் கால் நடையாகவும் பில், பில்லாலப் பழங் குடியினர் வீடு திரும்பினர். ஜபுவா சோர் வுடன் கண்மூடித் துயில் கொண்டது. அடுத்த ஆண்டு பகோரியா வரை இந்த ஓய்வு நீடிக்கும்!

சுற்றுலா ஆண்டின் சோகங்கள்!



"காஷ்மீரின் கதவுகள் மூடப்பட்டு விட்டன; இல்லியின் பதற்றமான சூழ்நிலை ஆக்ராவுக்கும் பரவுகிறது; பஞ்சாபிலோ கேட்கவே வேண்டாம். இதனாலெல்லாம் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையே ரொம்பவும் குறைந்து போனது.

"ஆயினும் தெற்கே பயணிகளை ஈர்க்கவும் அதன் மூலம் அந்நியச் செலாவணி நிறைய சம்பாதிக்கவும் நிறைய வாய்ப்பு உள்ளது. கேரளா, கோவா, லட்சத் தீவுகள் இங்கெல்லாம் வந்து விடுமுறையை விச்ராந்தியாகக் கழிக்க அயல்நாட்டவர் பெரிதும் விரும்புவார்கள். தமிழ் நாட்டில் அருமையான மலை வாசஸ்தலங்கள்! மிக நீண்டதான கடற்கரை. ஆலய நகரங்கள் எல்லாம் உள்ளன. கர்நாடகாவிலும் அயல் நாட்டவரைக் கவர அருமையான இடங்கள் இருக்கின்றன. ஒரு பக்கம் சிங்கப்பூர்; இன்னொரு பக்கம் மாலத் தீவுகள். இவற்றுக்கிடையே நாம் இருப்பது கூடுதல் வசதி. அங்கே போகும் பயணிகளை இங்கேயும் வரச் செய்வது எளிது. ஆனால் நமது அசிரத்தையால் பொன்னான வாய்ப்புக்களை நாம் நழுவ விட்டுக் கொண்டிருக்கிறோம். எப்படியெனில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை நாம் செய்யவில்லை. இவ் விஷயத்தில் தெற்கு மிகவும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் பல, சுற்றுலா மூலமே ஏகப்பட்ட அந்நியச் செலாவணி சம்பாதித்து வளமான நிலையில் உள்ளன. நாம் மிகவும் பின்தங்கி இருக்கிறோம்.

"சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்ப்பது என்ன? அவர்களுக்கு இந்தியா பற்றிய வீடியோ காட்சிகளையும் வண்ணமயமான பிரசுரங்களையும் அளித்தால் போதாது. அவற்றைப் பார்த்து விட்டு இங்கே வரும் போது அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கூட இல்லை என்பதைக் காணும் போது பெரிய ஏமாற்றம் ஏற்படும். திரும்பிப் போய் நண்பர்களிடம் இந்தியாவில் தாங்கள் அனுபவித்த துயரங்களைப் பேசுவார்கள். அவ்வளவுதான், சுற்றுலாப் பயணிகளின்



வருகை மேலும் குறையும்! என்னதான் பிரசாரமும், விளம்பரமும் செய்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாக, வந்து போகும் சுற்றுலாப் பயணிகளின் வாய்வழிப் பிரசாரம்தான் சுற்றுலாத் துறையில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறப்பதற்கில்லை. ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக்கும் தனது இந்தியப் பயணம் வசதியாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும்படி நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

"ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கு விதிக்கப்படும் வரிகள் கடுமையானவை. (அரசு நிறுவனங்களான ஐ.டி.டி.சி; டி.டி.டி.சி.க்கு மட்டும் விதிவிலக்கு! ஆனால் அவர்களிடம் போதிய அளவு பஸ்கள் இல்லை!) அதனால் தனியார் நிறுவனங்கள் சுற்றுலா பஸ்கள் விடத் தயங்குகின்றன. மேலும், அதிகமான இறக்குமதி வரிகள் காரணமாக, தேவையான அளவில் சொகுசு பஸ்களை நம்மால் தருவிக்கவும் முடிவதில்லை.

"தரமான பஸ்கள் நிறைய இருந்தால் மட்டும் போதாது; அவை ஓடும் சாலைகள் குண்டு குழியின்றி, நல்லபடியாக நிர்வகிக்கப்பட வேண்டும். நாலு தடவை தூக்கிப் போட்டுக் குலுங்க நேரிட்டால் அப்புறம் அயல் நாட்டுப் பயணி இந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டான்!

"பெரு நகரங்களில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் மட்டுமே சுற்றுலா வளர்ச்சிக்கு உதவி விடாது. எந்தச் சுற்றுலா மையத்துக்குப் போனாலும் அங்கே இராத் தங்க நேர்ந்தால் நியாயமான வாடகையில் தரமான தங்குமிடங்கள், சுத்தமாக, புது மெருகு குன்றாமல் அமைந்திருக்க வேண்டும். அழுக்கு, தூசி, எச்சில் கறை, ஒட்டடை, கரப்பான் பூச்சி இவையெல்லாம் அயல் நாட்டவருக்கு அலர்ஜி. நல்ல ஓட்டல்கள் தோன்ற ஊக்கமளிக்க வேண்டும். மலைவாசஸ்தலங்களில் உள்ள ஓட்டல்களுக்கு மட்டும் சற்று வரிச் சலுகை அளித்துள்ளது அரசு. இது போதாது.

"மகாபலிபுரம், குற்றாலம் என்று அழைத்துப் போய்க் காட்டினால் அருகே படுசுத்தமான கழிப்பறைகள், முகம், கை கழுவச் சுத்தமான நீர் வசதி, குடிநீர் வசதி முதலியன மேல்நாட்டுத் தரத்தில் இருக்க வேண்டும்.

"விஷய ஞானமுள்ள, நன்கு ஆங்கிலம் பேசுகிற கைடுகள் தேவை. பிச்சைக்காரர்களும் சில்லறை வியாபாரிகளும் டூரிஸ்டுகளைச் சூழ்ந்து மொய்த்து அவர்களைத் துன்புறுத்தாமல் கண்காணிக்க வேண்டும்.

"இன்று வருபவர் மேலும் பலரை இங்கே வரச் செய்யுமாறு நாம் இதிலெல்லாம் கவனம் செலுத்தாமல் சுற்றுலா ஆண்டு கொண்டாடினால் அது சோகமாகத்தான் முடியும். தாற்காலிகக் குறைந்தபட்ச லாபமே கிடைக்கும்.

"ஒன்று செய்யட்டும் அரசு. சுற்றுலாத் துறையை முழுக்க முழுக்கத் தனியார் வசம் ஒப்படைத்து, அந்நியச் செலாவணி ஈட்டும் ஏற்றுமதித் தொழில் போல் கருதி ஊக்கமளிக்கட்டும். வளர்ச்சி எப்படி இருக்கிறது என்று பார்க்கட்டும்!"



செஸ் விளையாடத் தடை!

சௌதி அரேபியாவில் 1980 ஆம் ஆண்டு வரை செஸ் விளையாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

சிப்பாய், குதிரை, பிஷப் என்னும் சாதாரணக் காய்கள் கூட அரசரைச் சிறைப்படுத்த முடியும் என்ற செஸ் விளையாட்டின் அடிப்படை, சௌதி அரேபிய நாட்டு மக்கள் மனத்தில், நாட்டின் அரசருக்கு எதிரான உணர்வுகளை எளிதில் ஏற்படுத்தி விடலாம் என்ற அச்சமே செஸ் விளையாட்டுக்குத் தடை விதிக்கக் காரணம்!

— தெ. சுந்தரமகாலிங்கம்.



— இப்படி சோகத்தை வெல்லும் ஒரு சவாலுடன் பேட்டியை முடிக்கிறார் ராஜ் டிராவல்ஸின் சென்னை அதிகாரி கோபால் பதிஜா.

கட்டுரை வடிவம்: **சாருகேசி.**
படம்: **ரமணன்.**

அடிவாரம் :

உணர்வுகளால் கூர்மைப்பட்டு — உறவுகளால் அந்நியப்பட்டு — நகரத்தின் சப்தக் கலாசாரத்தில் இருந்து தப்பித்து மலையூத்து என்னும் மலை கிராமத்தை வந்தடைகிறான் கனவுகளில் கலா போதைகாணும் திருஞானம். எந்திரங்களின் பற்சக்கரங்களில் வாழ்க்கையை மனிதன் தொலைத்து விட்டான் என்று கவலை கொள்ளும் அந்தக் கவிஞன், இயற்கைக்கும் இதயங்களுக்கும் பாலம் கட்டப் பார்க்கிறான். நிலாவில் குளிக்கவும் மழையில் நனையவும் மனிதர்களை அழைக்கிறான். அங்கே அவனுடைய கனவுலகவாதங்களை உடைக்கிறாள் ஓவியா என்கிற உன்னதப் பெண். "வயிறு காலியாகவும் இருக்கையில் இதயம் நிறையாது" என்கிறாள்.

ஒருநாள்...

மலையைக் கரைத்த ஒரு மழையில் திருஞானத்தின் மூங்கில் வீடு சரிந்து மூர்ச்சையாய்க் கிடக்க, அவனை அவள் காப்பாற்றித் தன் வீட்டில் தங்க வைக்கிறாள்.

தன் தந்தை நுண்ணுயிர்கள் ஆராயும் ஒரு விஞ்ஞானி என்றும் அவரது ஆய்வுகள் திருடப்பட்ட விரக்தியில் அந்த வீட்டு நிலவறையிலேயே நீண்ட காலம் தங்கிக் கிடக்கிறார் என்றும் தகவல் தருகிறாள்.

அவனைக் கனவுகளின் பரண்களில் இருந்து எதார்த்தத்தின் தரைக்கு இறக்கி விடுகிறாள். தங்குவதற்கு இடம் வேண்டும் என்கிறான். இடம் இதயத்திலேயே இருக்கிறது என்கிறாள். அந்த வார்த்தைகளில் அவனுக்குக் காதல் வாசனை வீசுகிறது.

13

காதல் தேவதை விசித்திரமானவள்.
அவள் தன் ஒரு கையில் மயிலிறகு வைத்திருக்கிறாள்; மறுகையில் ஒரு மழு வைத்திருக்கிறாள்.

அவள் மயிலிறகால் எப்போது வருடி விடுவாள்; மழுவால் எப்போது இடறி விடுவாள் — எவருக்கும் தெரியாது.

திருஞானத்திற்குஇப்போதுமயிலிறகுமாதம்.
அவன் மயிர்க்கால்களெங்கும் மயிலிறகின் ஸ்பரிசம்.

மார்கழி மாதத்து வெயிலாய் மனசெங்கும் கதகதப்பு!
யாரிடமாவது சொல்லத் துடிக்கிற — ஆனால் சொல்ல முடியாத சுக உளைச்சல்.

என் கால்கள் ஒரு கால் நூற்றாண்டு சகாராவைக் கடந்து வந்தனவே!

இந்த நிழலில் ஒதுங்கத்தானா?

இத்தனை காலம் என் வாலிப நதி நுரைக்க நுரைக்க ஓடி வந்ததே!

இந்தக் கடல் மடியில் வந்து கலக்கத்தானா?

யாரும் இப்படி என் மனசை ஆணியடித்து மாட்டியதில்லையே!

இதற்கு முன்னால் என் புலன்கள் இப்படிப் பூப்பூத்ததில்லையே!

அவள் புன்னகையை எடுத்துப் பூசிக் கொண்டேன்;

என் காயங்கள் ஆறுகின்றன.

அவள் பார்வைகள் பற்றிப் பரவியதில் என் சோகங்கள் எரிந்து விட்டன.

நேற்று என் நெற்றி தொட்டாள்.

அந்தச் சித்திர விரல்களின் சீதளத்தில் அத்தனை உஷ்ணங்களும்ஆவியாகிவிட்டன.

அவள்தொட்டால்உச்சிச்சூரியனே உறைந்து விடுமே! உடற்சூடு எம்மாத்திரம்?

இங்கேதான் — சிறகடித்துக் கொண்டே கிடந்த என் ஜீவன் அமைதி கொள்கிறது.

இங்கேதான் — என் ரத்தத்தில் கொதித்துக் கொண்டிருந்த உலை கொஞ்சம் உறங்கப் பார்க்கிறது.

இந்த இதம் தந்தது எது?

என் வாழ்க்கையைச் சுகப்படுத்தும் வஸ்துதான் யாது?

இந்த இடம் — இந்தச் சூழல் இவைதாம் காரணமா?

இல்லையே!

விழிகளுக்கு விருந்து வைக்கும் இந்தத் தாவர சங்கமம் எனக்குப் புதிதில்லையே!

மேகத்திரைகட்டி மறைவாய்க் குளிக்கும் அந்த மலைமுகடு எனக்குப் புதிதில்லையே!

அசையாத-கால்களோடு அசையும் இறக்கைகளோடும் பறந்து போகும் அந்தப் பறவைகள் எனக்குப் புதியவையில்லையே.

அப்போதெல்லாம் தோன்றாத அர்த்தம் இப்போது தோன்றுகிறதே!

அப்போதெல்லாம் ஓர் ஆனந்தபோதை மட்டும் இருந்தது.

இப்போது — வேர்களில் ஒட்டியிருக்கும் மண் மாதிரி அந்த ஆனந்தத்தின் கீழே அவஸ்தையும் ஒட்டியிருக்கிறது.

இப்போது புரிகிறது!

இடத்தின் அழகு இடத்தில் இல்லை; இதயத்தில் இருக்கிறது.

ஒரு தேவதை என் வானத்தில் பறந்து போகும் போது என் மீது அதன் நிழல் விழுகிறதே!


அதுதான் இந்தச் சராசரி இடத்தில் சௌந்தர்யம் சேர்த்திருக்கிறது.

இதுவரை என் தட்டில் உணவு மட்டுமே பரிமாறப்பட்டிருக்கிறது.

அதில் உணர்வையும் பரிமாறியவள் இவள்

வைரமுத்து

சிகரங்களை நோக்கி...



மட்டும்தான்.

இதுவரை என் கேள்விகளுக்கு பாஷையால் மட்டுமே பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

புன்னகையும் பதிலாக முடியும் என்று போதித்தவள் இவள் மட்டும்தான்.

காதல் என்ற பருவக்காற்று இப்போது என் திசையில் வீசப் பார்க்கிறதா?

இல்லை, வீசிக் கொண்டிருக்கிறதா?

இந்த அனுபவம் எனக்கொன்றும் புத்தம் புதியதில்லை.

நானும் சில பெண்மைகளின் பிரம்மாண்டங்களில் தூரத்து ரசிகனாய்த் துடித்தவன்தான்.

பிரபஞ்சத்தின் ரகசியத்தைப் பெண்மையில் கண்டறிய நினைத்தவன்தான்.

பெண்கள் மட்டும் இல்லையென்றால் இந்த பூமியில் ஒட்டகங்கள் மட்டுமே யாத்திரை போகலாம் என்று உணர்ந்தவன்தான்.

ஆனால் — எந்தப் பெண்ணும் எனக்குள் பௌதிக மாற்றங்களை நிகழ்த்தியதில்லை.

சில பெண்கள் என்னையும், சில பெண்களை நானும் கடந்து போனதுண்டு!

அப்போதெல்லாம் கிளி உட்கார்ந்து போன கிளையாய் என் இலைகள் ஆடியதுண்டே தவிர என் வேர்கள் ஆடியதில்லை!

என் ஆணிவேரில் அபாயச் சங்கு ஒலித்தது இவள் வந்த பிறகுதான்.

சொல்லிவிட வேண்டும்!

தண்ணீருக்குள் முட்டையிடுகிறவாத்துமாதிரி நான் தனிமைக்குள்ளேயே முட்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது.

இந்த மண்ணில்தான் நல்ல காதல்களும், நல்ல மருத்துவங்களும் சொல்லப்படாமலேயே தூர்ந்து போயிருக்கின்றன.

சொல்லிவிட வேண்டும்.

அவளுக்குள் என் அதிர்வு பதிவாக வேண்டும்!

காதல் என்னும் மருந்து அவளது இதயத்தையும் கடைகிறதா என்பதை நான் கண்டுகொண்டாக வேண்டும்.

நேரம் வந்தால் சூரியனைக் கிழக்கு உமிழ்ந்து விடுகிறது.

குழந்தையைக் கர்ப்பம் உமிழ்ந்து விடுகிறது.

நேரம் வரட்டும் நானும்...

நிலச்சரிவுக்கு மெல்ல மெல்ல நிவாரணம் கிடைத்தது. ஒரு புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பிறகு சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

''அழுந்து கிடக்கும். சாலைகளைத் தைப்பதெப்படி?

அரசாங்கத்தின் கோப்புகள் நகர்வதற்குள் இன்னொரு மழையில் இந்த மலையே நகர்ந்து விடும்.

தண்ணீரில் விழுந்தவனைக் காப்பாற்றுங்கள் என்று தகவல் கொடுத்தால், ''சம்பந்தப்பட்ட அதிகாரி ஊரில் இல்லை'' என்று செத்ததற்குப் பிறகு செய்தி வரும்.

காத்திருக்க வேண்டாம்.

சிதைவுகளை நாமே சீர்செய்வோம்.''

ஒவியாவின் உத்தரவுக்கு ஊர் வளைந்தது.

இளைஞர்கள் கல்சுமக்க, யுவதிகள் மண் சுமக்க, முடமான சாலைகள் நடமாடத் தொடங்கின.

கல் சுமந்தான் திருஞானம்.

புரிகிறது!

கனவுகளைச் சுமப்பதுபோல் கல் சுமப்பது எளிதில்லை.

ஒருநாள் சுமப்பதற்கு உயிர் பிதுங்குகிறதே!

இந்த பூமியை எனக்கும் சேர்த்துச் சுமப்பவர்கள் எத்தனை பேர்!

இது புது அனுபவம்தான்.

என் சதைபிழியும் சம்பவம்தான்.

ஆனால் — அர்ச்சுனன் பேர் சொன்னால் இடி தாக்காதாமே! அது மூடநம்பிக்கை.

ஆனால் அன்பே!

உன் பெயரைச் சொல்லுகிறேன்; என்னை வலி தாக்கவில்லை; இது என் முழுநம்பிக்கை!

எப்போது சொல்லப் போகிறேன்!

என் இதயத்தை மொழிபெயர்த்து எப்போது உன்னிடம் வாசிக்கப் போகிறேன்!

கூடாது!

காதலையும் வைத்தியத்தையும் தள்ளிப் போடக் கூடாது.

●

- அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் மட்டும் அங்கு மொத்தம் 13000 ஹோட்டல்களும், மோட்டல்களும் கட்டியுள்ளனராம்!
- உலகமெங்கும், ஒவ்வொரு வருடமும் சுமார் 1000 மில்லியன் மக்கள் சுற்றுலா செல்கின்றனர். இவர்களில் இரண்டு மில்லியன் மக்கள் மட்டுமே இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்கின்றனர்...!

— ''கேரியர் டைம்ஸ்''

தகவல்: ராஜிராதா.

அட்டையில்:

சிரிப்பும், கும்மாளமுமாக டூர் கிளம்பும் மூடில் இருப்பவர்கள். சாந்தா, ஸ்ரீவித்யா, ஹேமமாலினி, சங்கீதா, கவிதா, சுவர்ணா, விநித், விது.

வண்ணப்படம்: உத்ரா.

சரளைக் கற்களின் சங்கீதத்தில் — கடப்பாரைகளும், மண்வெட்டிகளும் பாடும் கரங்களில் — அவன் தன் காதலுக்கு இசையமைத்துக் கொண்டான்.

ஒரு தோளில் கற்கூடை சுமந்தான்;

அவள் பார்வைகளின் ஸ்பரிசம் படும் போதெல்லாம் மறுதோளில் பூக்கூடை சுமந்தான்.

கற்கூடை சுமந்து திரும்புகையில் சாலைக்கு மேலே ஒரு ரோஜா அவனைப் பார்த்து "ஐ லவ் யூ" சொன்னது.

அதன் காம்புக்கும் வலிக்காமல் கவனமாய்ப் பறித்தான்.

கற்கூடையோடு — கையில் ரோஜாவோடு ஓவியாவின் முகத்தையே கொஞ்ச நேரம் முற்றுகையிட்டவன் — அவசரமாய் ரோஜாவை நீட்டி "ஐ லவ் யூ" என்றான்.

அவளுக்கு அதிலொன்றும் அதிர்ச்சியில்லை!

நதி வந்து கலப்பதால் கடல் ஒன்றும் கைதட்டிக் கொள்வதில்லை; கண்டனம் தெரிவிப்பதுமில்லை.

நீட்டிய ரோஜாவை நிதானமாய் வாங்கிக் கொண்டு, "நன்றி" என்றாள்!

அதிர்ச்சி அவனுக்குத்தான்!

அவள் முகத்தில் ஒரு வெட்கவெயில் அடிக்காதது கண்டு அவன் இருண்டு போனான்.

"நீ... நீ... நீயும்தானே?" என்று தப்புத் தப்பாய்த் தந்தியடித்தான்.

அவள் சிரித்தாள்; நீளமாய்ச் சிரித்தாள்.

அந்த சப்த அலைகள் அவன் மீது சாட்டை சொடுக்கின.

"ஏன்?"

ஏன் சிரிக்கிறாய்?

நான் சொல்வது உனக்குப் புதிதாய் இருக்கிறதா?"

"இல்லை!
புதியதில்லை!

அதுதான் சிரிக்கிறேன்."

"புரியவில்லை!"

"என்னைப் பார்த்து "ஐ லவ் யூ" சொன்ன ஆட்களின் வரிசையில் நீங்கள் கடைசியில் நிற்கிறீர்கள்!

'ஐ லவ் யூ' என்ற வார்த்தை ஒன்றுதான்! வாய்களே வேறு வேறு!"

"ஏன்?

காதல் என்ற தத்துவத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"தகராறு தத்துவத்தோடு அல்ல; தலைமுறையோடு

இந்தத் தலைமுறைக்குக் காதலிக்கத் தெரியவில்லை; காரணம் காதலென்றால் என்னவென்றே தெரியவில்லை.

'கைக்காய்' என்பது 'சேக்காய்' என்று திரிந்தது மாதிரி — காதல் என்ற புனிதமான பதமும் பொருள் புரண்டு விட்டது."

கற்கூடை சுமந்த கற்றூணாய் நின்றபடி திருஞானம் கேட்டான்:

"காதல் என்பதன் புரளாத பொருள் யாது?"

"காதலை வெறும் தத்துவமாகப் பார்க்கிற கூட்டம் அதை உள்ளம் சார்ந்ததென்றே உணர்த்துகிறது.

காதலை ஒரு தாகமாகப் பார்க்கிற கூட்டம் அதை உடல் சார்ந்ததாகவே உணர்கிறது.

ஆனால் உண்மையில் காதல் என்பது பாச உணர்ச்சியும் பாலுணர்ச்சியும் பின்னிப் பின்னி ஜடை போட்டுக் கொள்கிற சம்பவம்.

பாச உணர்ச்சி மட்டுமே காதலென்றால் ஒரு பிராணி போதும்.

பாலுணர்ச்சி மட்டுமே காதலென்றால் ஒரு விலைமகள் போதும்.

ஆனால் இந்த இரண்டும் எந்தப் புள்ளியில் சந்தித்துக் கொள்கின்றனவோ அந்தப் புள்ளிதான் காதல்.

இப்போது சொல்லுங்கள்!
நீங்கள் அந்தப் புள்ளியில் நிற்கின்றீர்களா?"

அவன் நின்றது நின்றபடியே நின்றான்.

கற்கூடை தாளாமல் கைகள் நடுங்கின.

"கொட்டி விடுங்கள் — பாரமாக இருக்கப் போகிறது."

அவன் இரக்கம் காட்டினாள்.

அவன் நினைத்துக் கொண்டான்:

"கொட்டிய பிறகுதானே பாரம் அதிகமாக இருக்கிறது!"

— (இன்னும் சொல்வேன்)

பார்! பட்டணம் பார்!

* முனுசாமி

இதுவரை சென்னை மாநகரையே பார்த்திராத முனுசாமியைச் சென்னையைச் சுற்றிப் பார்க்க வருமாறு அழைப்பு விடுத்தோம். மரக்காணத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சிறு கிராமமான முருந்தகிரியிலிருந்து 35 வயதான முனுசாமி, மடித்துக் கட்டிய வேஷ்டி, வெள்ளைச் சட்டை அணிந்து, கையில் ஒயர் கூடை, குடை சகிதம் பெரியார் பஸ்ஸில் வந்து இறங்கினார்.

அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆட்டோவில், அவருடன் புகைப்படக்காரரும் நானும் ஏறிக் கொள்ள, முதலில் உட்லண்ட்ஸ் டிரைவ்-இன். வித்தியாசமான டிஃபனை ருசித்துச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்ட முனுசாமி திடீரென்று "சார்! சார்!" என்று பதற்றத்துடன் அழைத்தார். திடுக்கிட்டுத் திரும்பினோம்.

"சார்! காசை விட்டுட்டுப் போறீங்களே!" என்றார் முனுசாமி! "பட்டணத்துலே இப்படித்தான் எல்லாரும் கவனக் குறைவா இருப்பாங்களா?"

"அப்படியில்லை" என்று சமாதானப் படுத்தி, 'டிப்ஸ்' பற்றி விளக்கிய போது, "அப்படியா? இது தெரியாம நான் பாட்டுக்கு..." என்று இழுத்தார், ஆச்சர்யக் குரலில்.

"முதலில் எங்கே போகலாம்?" என்றதும், "கோவிலுக்கு" என்றார் முனுசாமி.

இடம், கபாலீசுவரர் கோவில். பக்தியுடன் கோவிலைச் சுற்றி வந்தவர், சன்னிதிகளில் கண்மூடி நின்று பிரார்த்தனை செய்தார். கொடுக்கப்பட்ட விபூதி, குங்குமப் பிரசாதங்களை, கவனமாய், காகிதத்தில் மடித்து வைத்துக் கொண்டார். "ஊர்ல என் சம்சாரம், புள்ளைங்க எல்லாம் இருக்காங்க! அவங்களுக்குக் குடுக்கத்தான்" என்றார் நம்மிடம். "கல்கி பத்திரிகையால எனக்கு இந்த மாதிரி பாக்கியம் கிடைச்சிருக்கு; எம்மாம் பெரிய கோவில்?" என்று கோவிலின் சுவர்களில் எழுதப்பட்டுள்ள ஓவியங்களையும் பிறகு கோபுரத்தையும் பிரமிப்புடன் பார்த்தார்.

"வாங்க இன்னும் நாலு இடம் பார்க்கணுமில்ல" என்று நாம் கூறவும் மனமின்றித்தான் ஆட்டோவில் ஏறினார்.

காமராஜ் நினைவாலயம், உள்ளே சென்ற போது, ரொம்ப அமைதியாய்க் காணப்பட்டார் முனுசாமி. "காமராஜரை நான் நேரில் பார்த்ததில்லை! பெருந்தலைவரைப் பற்றி ஊர்ப் பெரியவங்க சொல்லக் கேட்டதோடு சரி. இன்னைக்கு அவருடைய சமாதிக்கு வந்திருக்கேன்" என்றார் குரல் தழுதழுக்க.

அடுத்தது காந்தி மண்டபம். "இங்கே காந்தியோட சமாதி இருக்குதா?" என்றார் முனுசாமி.

"இல்லை! இது காந்திஜியின் ஞாபகார்த்தமாய்க் கட்டப்பட்ட மண்டபம் அவர் டில்லியில் தகனம் செய்யப்பட்டார்" என்று விளக்கினோம். ராஜாஜி நினைவாலயம், கலைஞரின் யோசனைப்படி ராமரின் 'திருமுடி' போன்று வடிவமைக்கப்பட்டிருப்பதை விவரமாக எடுத்துச் சொன்ன போது, "அப்படிங்களா?" என்று கேட்டு நெகிழ்ந்து போனார். அவர் கண்களில் நீர் திரையிட்டதைக் காண முடிந்தது.

அவரை உற்சாகப்படுத்த எண்ணி, "பாம்புப் பூங்கா பார்க்கறீங்களா?" என்று கேட்டோம்.





ஏ. வி. எம். இல் நடிகர்களுடன்...



• வள்ளுவர் கோட்டம்.

''எங்க ஊர்ல வயல்ல நிறைய பாம்பு அடிச்சிருக்கேன். எனக்குப் பாம்பைக் கண்டா பயமில்லை'' என்றார், புன்சிரிப்புடன்.

பாம்பு அவருக்குப் புதிய விஷயமில்லை என்றாலும் பலவிதமான பாம்புகளும், இஷ்டப்படி சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டதும் முனுசாமிக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது!

டெமான்ஸ்டிரேஷன் நடந்தது. 'பாம்பு உழவர்களின் நண்பன்' என்று அறிவிப்பாளர் கூறிய போது முனுசாமி நம்ப முடியாமல் தலையசைத்தார். எலிகளை அழிப்பதில் பாம்புகளின் பணி பற்றிக் கூறக் கேட்ட பிறகு நம்பிக்கை பிறந்தவராக ''சரிதான் சரிதான்'' என்றார். ''இனிமே நான் பாம்பு அடிக்கக் கூட யோசிக்க வேண்டியதுதான்!''

ராட்சஸ சைஸில் ஆமை, முதலை இவற்றை வெகு நேரம் நகராமல் பார்த்துக் கொண்டிருந்தார் முனுசாமி. ''' ஜூ'வுல பிராணிகள் எல்லாம் இருக்கும்னு சொல்லுவாங்க! பாம்பு, முதலை இதுங்களுக்கே பட்டணத்துல தனி ஜூ வைச்சிருக்காங்களே!'' என்று அதிசயப்பட்டார்.

''எம். ஜி. ஆர். நினைவு இல்லம் பார்க்கறீங்களா?'' என்று கேட்டதும் ஒரு துள்ளலுடன், அப்படி ஒரு இடம் இருக்கா? வேற எதுக்கு நேரமில்லாட்டியும் போகட்டும்; முதல்ல அங்கே போயிடுவோம்'' என்றார். ஆட்டோவில் போகும் போது ''நான் எம். ஜி. ஆர். படங்களை விரும்பிப் பார்த்தவனுங்க'' என்று கூறிப் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போனார்.

நாடோடி மன்னன் வெற்றி விழாவில் எம். ஜி. ஆருக்கு வழங்கப்பட்ட ஆளுயர வெள்ளிக் கோப்பை தங்கத்தாலான சில பரிசுகள், இவற்றையெல்லாம் திறந்த வாய் மூடாமல் பார்த்தார். ''எத்தனையோ பேர் என்னென்ன பொருள்களைக் கொடுத்திருக்காங்க!'' என்று வியந்தவர், அடிமைப் பெண் படத்தில் நடித்து, பாடம் செய்யப்பட்டுள்ள சிங்கம், எம். ஜி. ஆரின் கார் இவற்றின் அருகே நின்று போட்டோ எடுக்குமாறு ஆசையோடு கேட்டுக் கொண்டார்.

எம். ஜி. ஆரின் தொப்பி, கண்ணாடி, கை கடிகாரம் இவற்றைப் பார்த்த போது



• டைரக்டர் ரங்கராஜ்: பொறுமையாக விளக்கினார்.



• கபாலீஸ்வரர் கோவிலை விட்டுக் கிளம்ப மனமில்லை...

அவர் யாருமறியாமல் கண்களைத் துடைத்துக் கொள்ள முயன்று மேலே நகர்ந்தார். எம். ஜி. ஆர். பட ஸ்டில்களை வரிசையாய்ப் பார்த்துக் கொண்டே வந்த போது, ''இதில் முக்கால்வாசி சினிமாக்களை நான் பார்த்திருக்கேன்'' என்றார் பெருமை பொங்க. எம். ஜி. ஆர். படப் பாடல்கள் தொடர்ந்து ஒலிபரப்பப்படுவதை ''நல்ல ஏற்பாடுங்க'' என்று கூறிப் பாராட்டினார்.

வள்ளுவர் கோட்டம். ''எம்மாம் பெரிய தேர்! ரொம்ப நல்லா இருக்குதுங்க'' என்றார்.

''சினிமா ஷூட்டிங் பார்க்க ஆசையா? என்று கேட்டவுடன் பலமாய்த் தலையை ஆட்டி, ''ரஜினிகாந்த் பார்க்க முடியுமா?'' என்று ஆர்வத்தோடு கேட்டார்.

அதற்கு உத்தரவாதம் தர முடியாத நிலையில் ஏ. வி. எம். ஸ்டுடியோவுக்கு அழைத்துப் போனோம். செக்யூரிட்டியில், முனுசாமியை முதலில் உள்ளே அனுமதிக்கவில்லை. விஷயத்தை விளக்கியதும் சம்மதம் கிடைத்தது. ஏமாற்றத்துக்குப் பிறகு கிடைத்த வாய்ப்பாதலால் மகிழ்ச்சி இரட்டிப்பாக, டைரக்டர் ரங்கராஜின் இயக்கத்தில் 'பாட்டொன்று கேட்டேன்' படத்தின் ஷூட்டிங் பார்த்தார் முனுசாமி. சித்தாரா, நிழல்கள் ரவி, தியாகு, லிவிங்ஸ்டன் ஆகியோர் இடம்பெறும் காட்சி. பிரும்மாண்ட பங்களா! ''இத்தனை பெரிசாய்க் கூட வீடு இருக்க முடியுமா?'' என்று கேட்ட முனுசாமி திறந்த வாய் மூடாமல் ஆச்சர்யமாய்ப் பார்த்தார். டைரக்டர் ரங்கராஜிடம் முனுசாமியை அறிமுகப்படுத்திய பின் அவர் முனுசாமியிடம் விவசாயம், மழை நிலவரம், பற்றி விசாரித்து விட்டு, ''கூச்சப்படாதீங்க, ஏதாவது கேட்க விரும்பினா கேளுங்க!'' என்றார், அவர் தயங்குவதைப் பார்த்து.

''நாங்க மூணு மணி நேரம் ஒரு சினிமா பார்க்கிறோம்! நீங்களும் மூணு மணி நேரத்துல சினிமா எடுத்துடுவீங்களா?'' என்று முனுசாமி வெகுளித்தனமாகக் கேட்க, டைரக்டர் அவரைத் தட்டிக் கொடுத்து,

''இல்லீங்க! ஆறு மாசத்துக்கு மேலே கூட ஆகும். முதலில் கதை தயார் பண்ணணும். அதை சினிமாக்கு ஏத்தாற் போல மாற்றி

(தொடர்ச்சி — பொங்கல் வாழ்த்து அட்டைகளுக்குப் பிறகு.)



• அழகைப் பெண் சிங்கத்தின் அருகே...





கல்கி

பொங்கல் வாழ்த்து!

மங்கையர் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!
மலர்ந்தது 'தை'யென நம்பிக்கை மலர்ச்சி!
பொங்கிடும் புதுமையும் பூத்தநற் பழமையும்
சங்கமம் ஆவதால் தனியொரு கவர்ச்சி!
வளைக்கரம் பற்றிட வலுக்கரம் வந்திடும்!
வாழ்க்கை வாசலில் வாழை குலைதரும்!

வண்ணப்படம்: சுத்ரா.

கல்கி

பொங்கல் வாழ்த்து!

மனவாசலைத் திறக்கிறதே
இந்த மனைவாசத்தலம்!
மஞ்சளிலும், சிவப்பிலும் மலர்கள்!
பச்சைப்புல்வெளி! நீலவானம்!
எண்ணத்தில் இனிக்கிறது
வண்ணத்தின் சேர்க்கை!
இதயத்தில் தெரிகிறது
இந்திய ஒருமைப் பொங்கல்!

வசனம் எழுதணும்...'' என்று ஆரம்பித்து, சென்ஸார் ஆகி தியேட்டரில் ரிலீஸ் ஆவது வரை அன்புடனும் பொறுமையுடனும் விளக்கினார்.

''இது மறக்க முடியாத அனுபவங்க'' என்றார் முனுசாமி. 'கனவில்லை; நிஜம்' என்பதை அவருக்கு என்றைக்கும் நினைவூட்ட வசதியாக சித்தாரா, ரங்கராஜ், ரவி, தியாகு, லிவிங்ஸ்டன் ஆகியோருடன் முனுசாமி சேர்ந்து நின்று கொள்ள ஒரு 'கிளிக்'.

''அடுத்தாப்பல மியூஸியத்துக்குப் போகலாம்'' என்று கூறி, அது பற்றி விளக்கியதும் முனுசாமி கேட்ட கேள்வி: ''செத்த காலேஜின்னு சொல்லுவாங்களே அதுவா?'' மியூசியத்தில் இருந்த சிற்பங்கள், எலும்புக் கூடுகள் போன்ற எதையும் முனுசாமி ரசிக்கவில்லை.

அண்ணா சமாதியைப் பார்த்தபின் அதற்குப் பின்புறம் புதிதாய்த் திறக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தினுள் நுழைந்தோம். ''அண்ணாதுரையோட கலியாணப் பத்திரிகை கூட வெச்சிருக்காங்களே! அபூர்வமா இருக்கு'' என்றார் முனுசாமி.

பக்கத்தில் உள்ள எம். ஜி. ஆர். சமாதிக்குப் போனோம். முனுசாமியின் ஆசைப்படி ஒரு போட்டோ எடுத்து விட்டு வண்டலூருக்குச் சென்றோம். சுமார் ஒன்றரை மணி நேரம் போல் பல்வேறு மிருகங்களையும், பறவைகளையும் கண்டு மகிழ்ந்தார். ''என் சம்சாரத்தையும், புள்ளைங்களையும் ஒரு தடவை கண்டிப்பா அழைச்சுக்கிட்டு வரணும்'' என்றார்.

திரும்பத் தாம்பரம் வந்து, அவரை மரக்காணத்துக்கு பஸ் ஏற்றி விடக் காத்திருந்த நேரத்தில், ''இன்னிக்கு நீங்க பார்த்த இடங்களிலே உங்களுக்கு மிகவும் பிடிச்ச இடம் எது?'' என்று கேட்டோம்.

''எம். ஜி. ஆர். வீடுதாங்க மனசிலேயே இருக்குது! எத்தனை பெரியமனுஷரு! அவர் இருந்த வீட்டைச் சுத்திப் பார்க்க முடிஞ்சது சந்தோஷமாய் இருக்குது சார்! அதுக்கப்புறம் சினிமா ஷூட்டிங்! ஊர்ல போய்ப் பெருமையாய்ச் சொல்லிக்குவேன்.''

பஸ் வந்தது. விடைபெறும்போது, ''கல்கி பத்திரிகை தயவால் இன்னிக்குப் பட்டணம் சுத்திப் பார்க்க முடிஞ்சுது!'' என்றார் முனுசாமி.

'முனுசாமி தயவில்தான் பட்டணத்திலேயே இருந்தும்கூட நான் பார்க்காத இடங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது' என்ற உண்மையை மறைக்கவில்லை நான்!

— எஸ். சந்திரமௌலி

படங்கள்: ரமணன்



அமர்நாத் பனிலிங்கம்: ஆவணி அவிட்டம் பௌர்ணமி அன்று முழு அமைப்பில்...

யாத்ரா ஸ்பெஷல்

பலமுறை தனிப்பட்ட முறையிலும் யாத்ரா ஸ்பெஷல்களிலும் குடும்பத்தோடு சுற்றுப் பயணம் செய்த திருமதி அகிலா ராமன் கூறுகிறார்:

எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் அக்கடா என்று நிம்மதியாகப் போய்விட்டு வர முடிகிறதே! அது ஒன்று போதும், யாத்ரா ஸ்பெஷலைத் தேர்ந்தெடுக்க.

நாமாகப் பயணம் மேற்கொள்கிறபோது மொழிப் பிரச்னை, சாப்பாட்டுப் பிரச்னை, பாதுகாப்புப் பிரச்னை எல்லாம் உண்டு. கைப் பணத்தைப் பார்த்துப் பார்த்துச் செலவிட வேண்டும். யாராவது ஏமாற்றி மோசம் செய்து விடுவார்களோ என்ற பயம் பயண உற்சாகத்தையே கெடுத்துவிடும்.

யாத்ரா ஸ்பெஷல்களில், அதுவும் தமிழகத்திலிருந்து புறப்படும் சில நம்பகமான குழுக்களோடு போவதில் முக்கியமான உணவுப் பிரச்னை அடிபட்டுப் போகிறது. ஏழெட்டு உதவியாளர்கள் வருகிறார்கள். பயணிகள் எங்காவது பராக்குப் பார்த்து நின்று விட்டால் கூடத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். சமையல் சாமான்கள் அவ்வளவும் எடுத்துக்கொண்டு போய் ''போதும், போதும்'' என்று சொல்லும் அளவுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு. உங்கள் சொந்தப் பணம் இருந்தால் கூட அவர்களிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாகக் கையை வீசிக் கொண்டு பயணம் போய் வர முடிகிறது.

கேதார் நாத், பத்ரி நாத், அமர் நாத் போகிற போதெல்லாம், குழந்தைகளை ஆட்கள் முதுகில் கூடைச் சுமையாக ஏற்றி விட்டு விட்டு, நாம் குதிரையிலோ டோலியிலோ போக வேண்டும், டோங்காவாலா, குதிரைக்காரன் இவர்களிடமெல்லாம் நிச்சயம் ஏமாந்து போக வாய்ப்பு உண்டு. பழக்கமான யாத்ரா ஸ்பெஷல்களில் அந்தத் தொல்லை இல்லை. நம்பிக்கையான காண்டிராக்டர்களை அவர்களுக்குத் தெரியும்!

நாங்கள் முதன் முதலில் யாத்ரா ஸ்பெஷலில் போனது அமர் நாத்துக்குத் தான். ஆவணி அவிட்டப் பௌர்ணமி அன்றுதான் நல்ல நேரம். பனிலிங்கம் நான் கைந்து நாட்கள் இருக்கும் என்றாலும் அந்தப் பௌர்ணமி அன்றுதான் முழு அமைப்பில் இருக்கிறது. சரயூ நதியின் அழகு ம்றக்கவே முடியாத ஒன்று. மிகவும் சிரமமான யாத்திரை என்பது அமர்நாத் யாத்திரைதான். அடுத்தது கேதார் நாத், யமுனோத்ரி போன்றவை. பத்ரிக்கு வாசல் வரை பஸ் போகும். கங்கோத்திரியும் சிரமம் இல்லாதது தான்.

இது போன்ற பயணங்களில் தங்குமிடங்கள் தான் கொஞ்சம் ஏமாற்றம் அளிக்கக் கூடும்.

ஏனென்றால் ஸ்பெஷலில் அழைத்துப் போகிறவர்கள், தங்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய இடமாகப் பார்த்து ஏற்பாடு செய்வார்கள். அந்த இடங்களிலே தான் தங்கியாக வேண்டும்! வசதியுள்ளவர், வசதி குறைந்தவர் என்கிற பேதம் இல்லாமல் எல்லோருமே புண்ய யாத்திரை போய்க் கொண்டிருக்கிறோம் என்பதால் தங்குமிடத்தில் வசதிக்குறைவுகளைப் பொருட்படுத்தத் தோன்றுவதில்லை.

— 'யெஸ்'

லண்டன் அனுபவங்கள் :

போற்றப்படும் பழைமை; பரிமளிக்கும் புதுமை!

●● இங்கிலாந்தில் தற்போது சுமார் ஆயிரம் குறவர்கள் (gypsies) இருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள்.

●● ஆக்ஸ்ஃபோர்ட் என்ற பெயர் எப்படி வந்தது? ஃபோர்ட் நதி சற்று ஆழம் குறைவாக ஓடிய ஓர் இடத்தில் காளை (Oxen) மாடுகள் . ஆற்றைக் கடந்து மறுகரைக்கு மேயச் செல்லும். ஃபோர்ட் நதியை ஆக்ஸென் கடந்த இடம் **Oxford** என்று வழங்கலாயிற்று!

●● 'பாபா பிளாக் ஷீப்' என்ற குழந்தைகள் பாட்டு, முன்னொரு காலத்தில் கறுப்பு ஆட்டு ரோமத்தின் மீது மட்டும் வரி விதிக்கப்படாததை மறைமுகமாகச் சுட்டிக்காட்டப் பாடப்பட்டது.

— மேற்படி தகவல்கள் எல்லாம் கலைக் களஞ்சியத்தில் தேடி எடுத்தவை அல்ல... லண்டனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை பஸ்ஸில் பல்வேறு இடங்களுக்கு ஒருநாள் சுற்றுப் பயணமாக அழைத்துச் சென்ற டூரிஸ்ட் கைடு வழி நெடுக அனாயாசமாக உதிர்த்துக் கொண்டே வந்த ரசமான விவரங்களுள் சில மட்டுமே!

இவர் ஓர் ஆச்சரியம்தான் என்றாலும் லண்டன் பயணத்தில் நாங்கள் சந்தித்த முதல் ஆச்சரியம் இவர் அல்ல. பிரிட்டிஷ் ஏர்வேஸின் பதினோரு மணி நேர டெல்லி — லண்டன் பயணத்தில் எங்களை உபசாரத்தில் மூழ்கடித்து 'தாங்க்யூ'க்களால் ஒற்றியெடுத்து, தமது உணவை மட்டும் நின்றபடியே சாப்பிட்ட ஸ்டுவர்ட்தான்! காப்பி குடித்துவிட்டுக் காலி கோப்பையை நீட்டினால்கூட 'தாங்க் யூ வெரி மச் இன்டீட்!' என்று பொன் நிறத் தலையை இலேசாகத் தாழ்த்தி வாங்கிக் கொண்டார்!

கருக்கலில் புறப்பட்டு, சூரியனின் ஆரஞ்சு ஒளிக் குழம்பு சிந்திய வானத்தில் நகர்வது தெரியாமல் நகர்ந்து, தெளிந்த வானத்திரையின் கீழ் தெரியாத ஊர்களைப் பார்த்தபடி பறந்து, கொஞ்சம் சாப்பிட்டுக் கண்ணயர்ந்து, விழித்ததும் இவ்வளவு பிரும்மாண்டமான வாகனத்தை அலுங்காமல் செலுத்தும்படி வடிவமைத்த மனித ஆற்றலை எண்ணி வியப்பதற்குள்... லண்டன் வந்துவிட்டது!.

பிரிட்டிஷ் டூரிஸ்ட் அதாரிட்டி அலுவலகத்தில், அயல்நாட்டுப் பத்திரிகையாளர்களைக் கவனித்துக் கொள்ளும் ரோஸ் ஹியூஸ் ஒரு வாரத்தில் பார்க்கக் கூடிய இடங்களைப் பட்டியலிட்டார். ஒரு டஜன் ஃபோன் கால்கள், செய்து தமது பச்சை அட்ரஸ் புத்தகத்தை நான்கைந்து முறை புரட்டி, பெரிய கையெழுத்தில் குறிப்புக்கள்

• ராக் சர்க்கஸில்...



எடுத்துக் கொண்டார். இடது பக்கமிருந்த கம்ப்யூட்டர் கீ போர்டை நாலு தட்டு தட்டி, இரண்டு நிமிடங்கள் கழித்து, வலது பக்கம் இருந்த பிரிண்டரிலிருந்து இரண்டு தாள்களை உருவித் தந்தார்.


எந்தெந்த இடத்துக்கு, எத்தனை மணிக்கு, என்ன தேதியில் போக வேண்டும். போவதற்குச் சுலபமான ரூட் எது என்று விலாவாரியாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது! ''எல்லா இடங்களிலும் உங்களுக்கு இலவச அனுமதி டிக்கெட்டுகள் ரிசப்ஷனில் காத்திருக்கும்'' என்று கூறி, லண்டன் பாதாள ரயிலில் பயணம் செய்வதற்கான இலவச பாஸையும் ரூட் மாப்பையும் அவர் கொடுத்த போது வியக்காமல் இருக்க முடியவில்லை.

இவ்வளவு சுலபமாக நடக்கும் என்று நம்ப முடியவில்லை.

ரோஸ் ஹியூஸ் கொடுத்த திட்டத்தின்படி ஃப்ரேம்ஸ் ரிக்கர்ட்ஸ் நிறுவனத்தின் ஒருநாள் சுற்றுப் பயணத்தில் இடம்பெற்றிருந்தோம். அந்த பஸ் பயணத்தின் போதுதான் ஆரம்பத்தில் குறிப்பிட்டவை போன்று பல நூறு சுவை



ராக் சர்க்கஸின் சின்னம்.




யான தகவல்களை அள்ளி வீசினார் கைடு, ரோனல்ட் பிரேஸ்.

முதலில் சென்ற இடம் வார்விக் அரண்மனை. ஒரு பாலத்தின் மீது பஸ்ஸை நிறுத்தி இங்கிருந்து போட்டோ எடுக்க நல்ல 'வியூ' கிடைக்கும் என்றார். ஜன்னல் வெளியே பார்த்த போது, கைதேர்ந்த



• ...மைக்கேல் ஜாக்ஸன்



• வார்விக் அரண்மனை.

ஓவியர் வரைந்தது போன்ற காட்சி தெரிந்தது: அமைதியாய் ஓடும் ஏவன் நதிக் கரையையொட்டிக் கொஞ்சமாகப் பசுமை போர்த்திக் கொண்டு கம்பீரமாக நின்றது வார்விக் அரண்மனை. ராஜ ஹம்சங்களைப் போல் இரண்டு அன்னப் பறவைகள் ஜோடியாக வெயிலில் ஒளிர்ந்தபடி மிதந்தன. அரண்மனை வாசலிலோ இரண்டு மயில்கள்!

பதினாலாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரண்மனையை அதன் பழைமை குன்றாமல் வைத்துள்ளார்கள். அக்காலத்தில் பயன்படுத்திய ஆயுதங்களின் அருங்காட்சியகம் தவிர பாதாளச் சிறைச்சாலையில் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருந்த சூழ்நிலையையும் சித்திரவதைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் கூடப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். தத்ரூபமான ஒளி ஒலி அமைப்பைப் பயன்படுத்திச் சூழ்நிலையின் குரூரத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள்.



அரண்மனையின் மற்றொரு பகுதியில், புகழ்பெற்ற மாடம் டுஸாட் மெழுகு பொம்மை மியூஸியத்தின் கலைஞர்கள், வார்விக் பிரபுவின் அரண்மனையில் 1898இல் நடந்த விருந்தினை மெழுகு பொம்மைக் கண்காட்சியாக வடித்து வைத்திருந்தனர். தவிர, ஒவ்வோர் அறையிலும் டாம்பீகப் பிரபுக்களும் உப்பிய கவுன்களில் ஒளிந்து கொண்டு உயர்குடிப் பெண்களும் பேசிக் கொண்டோ, மதுவருந்திக் கொண்டோ, இசை கேட்டபடியோ காட்சி அளித்தனர். ஒரு குளியலறையில், தண்ணீர்த் தொட்டியில் நீர் நிரப்பும் பணிப் பெண் கூட காட்சியளித்தாள்!

சரித்திரச் சின்னங்களையும், பொருளாதார, கலாசார வளங்களையும் பாதுகாத்துப் பறைசாற்றும் பிரிட்டிஷார் பழங்கால அரசர்களின் குரூரத்தை மூடி மறைத்துவிடவில்லை. இந்த அரண்மனையில் நான்கு சதுர அடி பொந்துக்குள் கைதிகள் சிறை வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதுண்டு என்பதையும் உறுதிப்படுத்திச் சொல்கிறார்கள். வார்விக் அரண்மனையின் ஒவ்வொரு மூலை முடுக்கும் பழங்கதை பேசியது... அங்கிருந்த டாய்லெட்டுகள் மட்டும் விதி விலக்கு – அவை அதி நவீனம்!

"ஷேக்ஸ்பியர் களைத்துப் போய் விடு

• ஆக்ஸ்ஃபோர்ட் – ஒரு தோற்றம்.



* ஷேக்ஸ்பியரின் மனைவி ஆன் ஹாதவேயின் வீடு.

திரும்பிய போது உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்ட 'பெஞ்ச்' "இதுதான். நீங்களும் இதில் உட்கார்ந்து பார்க்கலாம்..." சுட்டிக் காட்டப்பட்ட 'பெஞ்ச்', பழுத்த கிழவரின் முகம் போல் மேடு பள்ளம் விழுந்த குறுகலான கறுப்பு மர இருக்கை. அதைத் தொட்டுப் பார்த்த போது உடம்பில் இலேசாகச் சிலிர்ப்பு ஓடியது. பளபளவென்று பித்தளை ஜாரணிகள் தோரணம் போல் தொங்கிய அடுப்பங்கரையில் போடப்பட்டிருந்தது அந்த இருக்கை. கணகணவென்று எரிந்த அடுப்பு நெருப்பின் இதமான சூட்டில் குளிர் காய்ந்தபடி ஷேக்ஸ்பியர், ஒத்தெல்லோவையும், மாக்பெத்தையும், லியரையும் சிந்தனையில் உருவாக்கியிருப்பாரோ?

— ஸ்ட்ராட்ஃபர்ட் அப் ஆன் ஏவனில் ஷேக்ஸ்பியருடைய மனைவி ஆன் ஹாதவேயின் வீட்டில் நின்றபோது அதன் கூரையைப் பராமரிப்பதற்காக இன்றும் தனியாக ஒரு வகை கோதுமையைப் பயிரிட்டு அதிலிருந்து பெறப்படும் வைக்கோலையே உபயோகிப்பதாக ஒரு தகவல் கிடைத்தது! அப்போது தான் ஷேக்ஸ்பியர் காலத்தில் இருந்தது போன்றே அதன் தோற்றத்தைப் பாதுகாக்க முடியுமாம்!

மரப் படிக்கட்டில் ஏறி மாடிக்குப் போனால் படுக்கையறை. கயிற்றுக் கட்டில். "கயிறு நெகிழ்ந்து போனால் கட்டில் தொய்ந்து தூக்கத்தைக் கெடுக்கும். அவ்வாறு நிகழாமல் சுகமாகத் தூங்க வேண்டும் என்பதற்காகத்தான் 'Good night' 'Sleep tight' என்ற வாழ்த்து வழக்கில் வந்தது." — மீண்டும் ரசத்துளியான ஒரு தகவல்.

ஷேக்ஸ்பியர் சம்பந்தப்பட்ட ஐந்து கட்டடங்கள் Shakespeare Birth Place Trust ஆல் பராமரிக்கப்படுகின்றன. Shakespeare Study Centre என்ற ஆராய்ச்சி மையத்தையும் நிறுவியுள்ளது இந்த அறக்கட்டளை. உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஷேக்ஸ்பியர் தொடர்பாக எழுதப்படும் நூல்கள், மொழி பெயர்ப்புகள், போன்றவை பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வரிசைப்படுத்தி வைத்து ஆராய்ச்சிமாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவுகிறது.

ஸ்ட்ராட்ஃபர்டிலிருந்து ஆக்ஸ்ஃபோர்ட் சென்றோம். சுருக்கமாக ஒரு மணி நேரத்தில் சுற்றிக் காண்பித்தார்கள்.

ஆக்ஸ்ஃபோர்ட் மாணவர்கள் சைக்கிள்கள் தவிர வேறு வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற விதியிருப்பதாகச் சொன்னார்கள். கட்டடங்களின் வாசல்களையொட்டி. குவியல் குவியலாகச் சைக்கிள்கள் நின்றன. தெருக்களில் விதவித



* வார்விக் அரண்மனையினுள் அருங்காட்சியகம்.

மான சைக்கிள்களில் 'விதவிதமாக வேகத்தில் சென்றனர் மாணவர்கள். அந்தியோன்னியமாய்க்கைகோத்துச்செல்லவிரும்பிய ஜோடிகள் மட்டுமே தெருக்களில் நடக்கக் கண்டோம்!

லண்டன் நகரை 'மொட்டை மாடி பஸ்ஸில் ஏறிச் சுற்றிப் பார்த்தோம். அன்று வெயில் காய்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டது. 'சில்'லென்ற பனிக்காற்று கம்பளித் துணிகளை ஊடுருவித் தாக்கியது! திறந்த பஸ்ஸில் உட்கார்ந்தபடி இடது பக்கமும் வலது பக்கமும் மாறி மாறிப் பார்த்து, கைடு சொன்னவற்றை மனத்தில் வாங்கிக் கொள்ளத்

கசாப்புக் கடையாக இருந்தது): இது ஹாரிட்ஸ் — இன்றைய ஃபாஷன் கேந்திரம்... இவ்வாறு அடுக்கிக் கொண்டே போனவர், போர் அடித்து விடக் கூடாது என்பதற்காகத் தகவல்களுடன் ஜோக்குகளையும் இணைத்தார்: இது பாராளுமன்றக் கட்டடத்துக்குள் பிரதமர் நுழையப் பிரத்தியேக வாயில் — பலத்த காவலை மீறி அந்த அம்மாள் (மார்கரெட் தாட்சர்) எப்படித்தான் போய் வந்து கொண்டிருக்கிறாரோ! அங்கே பாருங்கள் ஸர் வின்ஸ்டன் சர்ச்சில் (சிலை) — கிழவர் இன்றைக்கு ஏனோ கொஞ்சம் சிடுசிடுவென்று இருக்கிறார்! 'பிக் பென்' — இந்த வருடம் காய்ந்த வெயிலால் கொஞ்சம் மூட் அவுட் ஆகிவிட்டது! அதனால் நேரம் காட்டுவதில் தகராறு. இரண்டு வினாடி தாமதமாக ஓடுகிறது!


லண்டனில் முதன் முதலாகப் போய் இறங்கும் புதுப் பயணிக்கு ஆபத்பாந்தவனாக, அனாதரட்சகனாக அபயக் கரம் நீட்டுவது 'அண்டர்கிரவுண்ட்' என்று அவர்கள் அழைக்கும் பாதாள ரயில்கள். இந்த ரயில் பாதையின் வரைபடத்தை இலவசமாகத் தருகிறார்கள். ஒரு வாரத்துக்குப் 'பாஸ்' வாங்கிக் கொண்டு வரைபடத்தின் துணையுடன் நகரின் எந்தப் பகுதிக்கும் தடுமாறாமல் சென்று வந்துவிடலாம். ஒவ்வொரு



• குண்டு பெண்மணி சிலை— தாடிக்காரன் நிஜம்!

இறங்கினோம். ஒரு மணி நேரச் சுற்றுப் பயணத்தில் ஐந்நூறு வகையான தகவல்களையாவது வழங்கியிருப்பார்!

"இது ஷேக்ஸ்பியரும் அவர் சகாக்களும் கூடி மாலை வேளையில் மது அருந்திய இடம். இது டிக்கன்ஸ் வசித்த இடம்; இந்த இடத்தில்தான் பதினேழாம் நூற்றாண்டில் லண்டனைச் சாம்பலாக்கிய (Great fire) தீ முதலில் பிடித்துக் கொண்டது. (அப்போது இக்கட்டடம் ஒரு





' Moml வில் பாசாங்கு 'டிக்கெட் கவுண்டர்!'

ஸ்டேஷனிலும் உள்ளே போக, வெளியே வர, தனித் தனி வழிகள்; சரியான தொகை கொடுத்து டிக்கெட் பெறவும் கூடுதல் தொகை கொடுத்துச் சில்லறையுடன் டிக்கெட் பெறவும் தனித் தனி இயந்திரங்கள், சந்தேகமிருந்தால் தீர்த்துக் கொண்டு வழி கேட்கத் தனி கவுண்டர்கள்... டிக்கெட்டை ஒரு மிஷினின் வாயில் நுழைத்ததும்



* மாடம் டுஸாட் — மெழுகுப் பொம்மைக் கலைஞரின் மெழுகுப் பொம்மை!



* தாட்சரும் தாட்சரும்!

'படார்' 'படார்' என்று திறந்து கொள்ளும் ஆட்டோமாடிக் கதவுகள்! வடிகட்டின அசடு கூடத் தொலைந்து போக முடியாத அளவுக்குத் தெளிவான அம்புக் குறியிட்ட அடையாளங்கள். அவற்றைப் பின்பற்றிச் சரியான பிளாட்ஃபாரமை அடைந்தால், 'அடுத்த ரயில் இன்னும் நான்கு நிமிடங்களில்' என்று அறிவிக்கும் ஒளியமைப்பு. ஒரு முறை கூட நான்கு நிமிடங்களுக்கு மேல் நாங்கள் காத்திருக்கவில்லை.


லண்டன் நகரின் ஜீவ நாடியே நூற்றாண்டு காணும் இந்தப் பாதாள ரயில் அமைப்புத்தான் என்றார்கள். அப்படியிருந்தும் நெரிசலான கூட்டத்தையே நாங்கள் பார்க்கவில்லை. அலுவலகப் பயணிகள் 'டியோடோரன்ட்' மணக்க, ஒரு கையில் பேப்பர் பிடித்துப் படித்தபடி, சென்றார்கள். காலைச் சிற்றுண்டியைக் கூட ரயிலில் சாப்பிட்டார்கள். மத்தியான வேளையில் தாய்மார்கள் குழந்தையைத் தள்ளு வண்டியோடு ரயிலில் ஏற்றி வந்தார்கள். பயணம் முடிந்து, படியேறி வெளியே போகும் போது வண்டியோடு குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டுபோய்ச் சாலையில் இறக்கினார்கள்!

பாதாள ரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் பார்த்த சில விளம்பரங்கள் மிகவும் சுவாரஸ்யம்:

அழகான நடுத்தர வயதுப் பெண்ணின் படத்துடன் 'நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் குரலைக் கேட்க ஆவல் கொள்வாள் அம்மா... அவளுடன் போனில் பேசுங்கள்' என்று பிரிட்டிஷ் டெலிகாம் நிறுவனத்தின் விளம்பரம். (ஊர் திரும்பிய சில தினங்களில் டெலிகாம் ஊழியர்கள் ஸ்டிரைக் என்றதும் நினைவு வந்தது அந்த விளம்பரம் தான்!)

சின்னச் சின்னதாக ஒரு டஜன் ஜோடிகளின் சந்தோஷப் புகைப்படங்களைப் போட்டு, 'இவர்களைப் போல் நீங்களும் மகிழ நாங்கள் உதவ முடியும்' — என்று ஒரு 'Dating' நிறுவன விளம்பரம்! — காதல் புரிவதற்கு உதவ ஒரு கம்பெனி!

லண்டனில் அவசியம் பார்க்க வேண்



• டாக்லாண்ட்ஸ் அபிவிருத்திப் பணிகள்.

டிய இடம் என்பதாக உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது மாடம் டுஸாட் மெழுகுப் பொம்மை மியூசியம். மெழுகுச் சிலைகளுக் கும் சிப்பந்திகளுக்கும் வித்தியாசம் தெரி யாமல் திகைத்த அனுபவம் இங்கே ஏற் பட்டது. சற்று நேரம் முறைத்துப் பார்த்து விட்டு, "நீங்கள் சிலையோ என்று நினைத் தேன்" என்று மன்னிப்புக் கோரும் தொனி யில் இழுத்தபோது, "கவலைப்படாதீர்கள், அந்தச் சந்தேகத்தை நான் அடிக்கடி நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற் பட்டிருக்கிறது!" என்று ஆயிங் கம் மெல்ல ஆரம்பித்தார் அந்த வாயில் காவலர்!

மரத்தின் மீது சீரியல் பல்புகளைத் தொங்கவிடும் சிப்பந்திப் பொம்மை; மைக் கேல் ஜாக்ஸனை மெய் மறந்து பார்த்துக் கொண்டிருக்கும் அழகி நிஜம்! பெஞ்சில் சோர்ந்து போய்க் கண்ணயர்ந்து விட்ட குண்டு பெண்மணி சிலை; அவள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் தாடிக்காரன் நிஜம்!

மெழுகுச் சிலைகள் எவ்வாறு தயாரா கின்றன என்பதைப் படிப்படியாக விளக்கி யும் தயாரிப்பில் என்னென்ன பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் ஓர் அறையில் காட்சியாக அமைத்திருந்தார் கள். சிலை செய்யும் காட்சியையே சிலை யாக வைத்திருந்தார்கள்!

டுஸாட் நிறுவனம் புதிதாக ஆரம்பித் துள்ள மற்றும் ஒரு காட்சியகம் 'ராக் சர்க் கஸ்'. Rock இசையின் ஆரம்பம் முதல் அதன் சரித்திரத்தில் இடம் பெற்ற கலைஞர்கள் எல்லோரையும் மெழுகுப் பொம்மைகளாக வடித்து வைத்துள்ளனர். அந்தக் காலத்து ஜெர்ரி லூயி தொடங்கி சமீபத்திய மைக் கேல் ஜாக்ஸன், மடோனா வரை அவ்வளவு பேரும் பாடி, ஆடுகிறார்கள்! இந்தக் காட்சியகத்துள் நுழையும் போதே தரப்படும் 'head phone' களை அணிந்து சென் றால், ஒவ்வொரு பகுதியை அடையும் போதும் அப்பகுதியிலுள்ள காட்சிக்கு ஏற்ப விளக்கமும் இசையும் காதில் ஒலிக்கின்றன.

அரங்கின் நட்ட நடுவிலுள்ள பியானோ வுக்குப் பின்னாலிருந்து எல்விஸ் பிரஸ்லி 'ஜில்'லென்று எலக்ட்ரானிக்ஸ் உதவியுடன் எழுகிறார். ஸ்டீவி வொண்டர் 'I just called to say I love you' பாடுகிறார். இசைக்கும் பொம்மைகளின் அசைவுகளுக்கும் கச்சித மாகப் பொருந்துகிறது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நகரும் போது அங்குள்ள பொம்மைக்கு ஏற்ப ஹெட் போன் இசையும் தானாகவே மாறு கிறது.

சுழலும் அரங்கத்தில் உட்கார்ந்து பீட்டில்ஸ் பாடுவதைக் கேட்கிறோம் — மூன்று காட்சிகளைக் காணச் சௌகரிய மாக அரங்கமே அரை வட்டமடிக் கிறது! தத்ரூபமான மெழுகுப் பொம்மை களின் தாளம் பிசகாத அசைவுகளும், ஒளி அமைப்பும், ஒவ்வொரு பாடகரின் காலத் துக்கும் ஏற்ப உடை, உபகரணங்களில் செலுத்தியிருந்த கவனமும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துகின்றன என்றால், அந்தந்த பொம்மை யருகே செல்லும் போது ஹெட்போனில் இசை அதற்குப் பொருத்தமாக மாறிக் கொண்டே வந்தது. ஏதோ மாயாஜாலம் போல் பிரமிக்க வைத்தது. சர்வ வியாபி யாகிவிட்ட கம்ப்யூட்டர்தான் இந்த வேலை களைச் செய்கிறது! இரண்டு ராக்ஷஸ கம்ப் யூட்டர்கள், பொம்மைகளின் இமை மூடித் திறப்பது முதல் எல்லா அசைவுகளை யும் ஒழுங்குபடுத்துகின்றன. ஒலிக்க வேண் டிய பாடல்கள் அனைத்தையும் காம்பாக்ட் டிஸ்க்கு (C. D.) களில் பதிவு செய்து வைத் துள்ளார்கள். ஒரு டிரான்ஸ்மிட்டர் மூலம் இசையை ஒலிபரப்ப, modulator என்ற கருவி, ஒலி அலைகளை infra red கதிர்களாக மாற்றி அந்தந்தக் காட்சிப்-பகுதியிலுள்ள விசேஷ ஹெட்போன்களுக்கு அனுப்புகிறது. நாம் அணிந்துள்ள அந்த ஹெட்போன்கள் அக் கதிர்களை மீண்டும் ஒலியலைகளாக மாற்றிக் காதில் இசைக்கின்றன!

விளைவு... இரண்டடி நடந்தால் ஒரு பாட்டு. வலது பக்கம் திரும்பினால் வேறொன்று. இடது பக்கம் சென்றால் இன் னொன்று என்று பாட்டு மாறுகிறது! பல இளைஞர்கள் அங்கங்கே சொக்கிப் போய்த் தாளம் போட்டுக் கொண்டிருக்க, முன்னும் பின்னும் ஓடி, பாட்டுகள் மாறி மாறி ஒலிக் கும் ஆச்சரியத்தையும் அனுபவித்தனர் சிலர்!

இக்காட்சியகத்தில் ஒரு பொம்மைக்கு 100 00 பவுண்டு வரை செலவழித்திருக்கி

றார்கள். இதனை ஃபூஜி ஃபிலிம் நிறுவனம் ஸ்பான்ஸர் செய்துள்ளது. மொத்த செலவு பத்து மில்லியன் பவுண்டுகள்!

பிரிட்டிஷ் டூரிஸ்ட் அதாரிட்டியின் 'Come to Britain' விருதைப் பெற்றுள்ளது Rock Museum. பிரிட்டிஷ் அரசாங்கத்தில் சுற்றுலா அமைச்சரோ அமைச்சகமோ தனியே கிடையாது. சுற்றுலாவைத் தொழில், வர்த்தகமாக அவர்கள் கருதுவதால் அத்துறையின் கட்டுப்பாட்டில்தான் 'சுற்றுலா' வருகிறது. 'British Tourist Authority' என்ற அமைப்புதான் சுற்றுலா அபிவிருத்திக்கு ஆவன செய்து வருகிறது. மிக அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அமைப்புக்குப் பரிசும் விருதும் அளிப்பது இதன் பணிகளுள் ஒன்று.

பிரிட்டனுக்குத் தற்போது மிக அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவது ஜப்பானிலிருந்துதான்! மணமாகாத ஜப்பானியப் பெண்கள் உலகைச் சுற்றிப் பார்க்க 'டக்'கென்று கிளம்பிவிடுகிறார்களாம். "வேலைக்குப் போக ஆரம்பித்ததும் பெண்கள் கையில் நிறையப் பணம் புரள்கிறது. ஆண்களைப் போல் குடும்பம் நடத்தப் பணம் சேர்த்து வைக்கும் சமூக நிர்ப்பந்தம் இவர்களுக்கு இல்லை. அதனால் சுதந்திரமாக இருக்கும் போதே சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிடுகிறார்கள்!" என்றார் பிரிட்டிஷ் டூரிஸ்ட் அதாரிட்டியின் ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கக் கிளையின் அபிவிருத்தி மேலாளர் மெல்வின் மான்ட்காமரி.

லண்டனில் அங்கங்கே (information) தகவல் மையங்கள் வைத்துச் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுகிறார்கள். பார்க்க வேண்டிய இடங்கள் கணக்கில் அடங்காது. பஸ்களில் டூர் அழைத்துப் போவது போல் 'guided walk tour' கூட உண்டு. சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்கு வழிகாட்டியுடன் கால்நடையாகப் போய் வரலாம்!

"**வெ**ல்கம் டு ஹாலிவுட்! சினிமாவில் நடிக்க உங்களுக்கு ஒரு ஸ்கிரீன் டெஸ்ட் எடுக்கலாமா...?" என்று அந்த இளைஞர் ஆரம்பித்ததும் தூக்கிவாரிப் போட்டது! அருகே நின்ற சிறுவர் சிறுமியர் உற்சாகமாகச் சம்மதிக்க, அவர்களை வரிசையாய் நிற்க வைத்து, 'ஹுர்ரே! ஹுர்ரே! ஹுர்ரே ஃபார் ஹாலிவுட்!' என்ற ஒரு வரிப் பாட்டுக்கு ஏற்ப, 'ஒன், டூ, த்ரீ, ஃபோர்', 'ஜம்ப்' டூ, த்ரீ, ஃபோர்' என்று தாளத்துக்குக் குதிக்க வைத்து; ஓரமாக வெட்கத்துடன் நின்ற சின்னப் பயலைக் காமெராவுக்குப் பின்னால் நின்று இயக்கச் செய்து; மற்றொரு பையனைக் 'கிளாப் போர்டு' தட்டச் செய்து... ஒரு உளளாக் கட்டி ஷூட்டிங்கையே நடத்திவிட்டார் அந்த இளைஞர்!

சிறுவர் சிறுமியரைப் பெருமிதத்தில் ஆழ்ந்து போகச் செய்த அந்த இளைஞரை அணுகி, பாராட்டுத் தெரிவித்து, "எப்படி இவ்வளவு சீரியசாகப் பாசாங்கு செய்கிறீர்கள்?" என்றோம்.

"பாசாங்கா! இதுதான் ஹாலிவுட் மேடம்!" என்றார் அவர் உறுதியாக. நாங்கள் இருந்தது Museum of the Moving Image என்ற இடத்தில். இந்த அருங்காட்சியகத்தில் சினிமாவின் சரித்திரமே வடித்து வைக்கப்பட்டுள்ளது. காமெராவின் கண்டுபிடிப்பு, ஃபிலிம் தயாரிப்பு, இதர தொழில் நுட்ப வளர்ச்சிகளின் வரலாறும் பாதிப்பும், காலத்துக்கேற்ப சினிமாவில் ஏற்பட்ட மாற்றங்கள், நடிக நடிகையரின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, இயக்குனர்கள், தொழில் நுட்ப வல்லுனர்களின் பங்கு என்று அக்கு வேறு, ஆணி வேறாக அலசியெடுக்கிறது, இந்தக் கண்காட்சி.

காட்சிப் பொருள்களைக் கண்ணாடிக் கூண்டுக்குள் அடைத்துவைத்து விடவில்லை; ஆங்காங்கே அவற்றைத் தொட்டுப் பார்க்க, இயக்கிப் பார்க்க அறிவிப்புகள் இருந்தன. சினிமா சரித்திரத்தின் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப உடை அணிந்த சிப்பந்திகள் விளக்கங்கள் அளித்து, படங்களைத் திரையிட்டு, வழிகாட்டி, விளையாடித் திரைக்காட்சியை உயிர்த் துடிப்புள்ள நிஜக் காட்சியாக்கினர்.

உலக சினிமா பகுதியில் இந்தியச் சினிமாவுக்கு ஓர் ஓரம் இருந்தது. சத்யஜித் ரே, ஷ்யாம் பெனகல், ஷபானா ஆஸ்மி... தெற்கு...? கேரளத்து 'எலிப் பத்தாயம்' ஸ்டில் இருந்தது. தமிழ்ப் படங்கள் பற்றி... மூச்!


லண்டனின் மியூசியங்களைப் பார்க்கவே வாழ்நாள் போதாது! அப்படியிருக்க, பிரம்மாண்டமான மியூசியங்களான விக்டோரியா அண்ட் ஆல்பர்ட் மியூசியம், மியூசியம் ஆஃப் நாசுரல் ஹிஸ்டரி — இரண்டும் அருகருகே இருக்கின்றன என்ற காரணத்துக்காக — அவற்றை ஒரே நாளில் சுற்றிப் பார்க்கும் தவறைச் செய்தோம்! V & A வில் கலைப் பொக்கிஷங்கள்; மற்றொன்றில் இயற்கைச் செல்வங்களைப் பற்றிய விளக்கங்கள். மியூசியத்தைப் பார்த்தால் போதாது, படித்தால் காணாது என்று வீடியோ விளையாட்டுகள், கம்ப்யூட்டர் குவிஸ்கள் போன்றவை மூலம் மூளையையும் கற்பனையை

அடுத்த இதழில்......

●● வில்லியாக மாறிய கதாநாயகி!

— கவர் ஸ்டோரி





"இந்த வயசுலே ஒளியும் ஒலியும் பார்க்கக் கூடாது. போப்படி."

"உங்க ரெண்டு பேருக்கும் இந்த வயசுலே ஒளியும் ஒலியும் கேக்குதான்னு அம்மா சொல்றாங்க, தாத்தா!"

யும் உபயோகித்து உணர்ந்து கற்றுக் கொள்ளும்படியும் அமைத்திருந்தார்கள்.

இரு மியூசியங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வியப்புடன் களைப்பும் மிதமிஞ்ச தெருவோர பெஞ்சில் சோர்ந்து உட்கார்ந்தோம். அன்று சனிக்கிழமை லண்டன், வாரக் கடைசிக்குரிய விழாக் கோலம் பூண்டிருந்தது. திங்கள் முதல் வெள்ளி வரை கண்ணில் படாத குழந்தைகள், தெருக்களில் வண்ண ரப்பர் பந்துகளைப் போல் துள்ளிச் சென்றனர். ஐந்து நாட்களின் பிரிவை ஒரே மாலையில் ஈடுகட்டும் தீவிரத்துடன் காதலர்கள் கண்கள் கலந்து, மெய்மறந்து உலா வந்தனர். பெண்களின் காதுகளில் தோள் தொட்டப் பெரிய வளையங்கள்! கொஞ்சிக் கொண்டே ரயிலேறி, கொஞ்சியபடியே இறங்கிய ஜோடிகள்...

தூக்கம் கலையாத கண்களுடன் பெண்கள் லாண்ட்ரோமாட்களுக்குப் படையெடுத்தனர். குழந்தை வண்டி (Pram) போன்ற தள்ளு வண்டியில் அழுக்கு மூட்டையை வைத்து 'ஜிப்' உரையால் மூடிப் பொட்டலமாக்கித் தள்ளி வந்தார்கள். ஒரு பவுண்டு கட்டணம் செலுத்தி பெட்ஷீட் முதல் கர்சீஃப் வரை அவ்வளவு துணிகளையும் வாஷிங் மெஷினில் சோப்புத் தூளுடன் போட்டுவிட்டு, இ ய ந் தி ர ம் சலவை முடிக்கும் வரை புத்தகம் படித்தார்கள். துவைத்த ஈரத் துணிகளைப் பிளாஸ்டிக் கூடைகளில் வாரி, காய வைக்கும் இயந்திரத்தில் போட்டுவிட்டு மீண்டும் புத்தகத்தில் மூழ்கினார்கள். இரண்டு வயதுக் குழந்தையுடன் வந்திருந்த பெண்மணி, நாய்க்குட்டியைப் போல் சங்கிலி போட்டுப் பிள்ளையைப் பிணைத்து வைத்திருந்தார்!

லண்டனில் யாரும் துணி உலர்த்தி விட முடியாது! உலர்த்தினால் சுற்றுச் சூழலின் அழகைக் கெடுத்த குற்றத்துக்கு உள்ளாவார்கள்! டெலிவிஷனுக்காக 'டிஷ்' ஆண்டெனாக்களை வாசலில் பொருத்துவதற்குக் கூட எதிர்ப்பு எழுப்பி ஒரு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம் போராடிக் கொண்டிருக்கிறது! வாசலில் தட்டுத் தட்டாக வைத்தால் கண்ணுக்கு உறுத்தலாய் இருக்கிறதாம்!

சுற்றுச் சூழல் தூய்மையை மதித்துத் தேம்ஸ் நதியின் சுத்திகரிப்புப் பணியை முழு மூச்சுடன் முடித்துவிட்ட லண்டன் நகரம், இப்போது அந்த நதிக்கரையையொட்டி, மிகப் பிரம்மாண்டமான விஸ்தரிப்புப் பணியை மேற்கொண்டுள்ளது. இதற்கு London Docklands Development என்று பெயர். அடிப்படை வசதிகளான சாலைகள் போன்றவற்றைச் செய்து; சுமார் இருபத்தைந்து மில்லியன் சதுர அடி நிலப்பரப்பில் பளபளக்கும் கண்ணாடி மாளிகைகள் போல் கட்டடங்கள் கட்டி, 1,15,000 பேருக்குக் குடியிருப்பு வசதியும் தொழிற்சாலை, அலுவலகங்கள் மூலம் 2,00,000 பேருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. நதிக்கரைப் பகுதி என்பதால் டாக்லாண்ட்ஸில் படகு விடுதல், ஸ்கீயிங் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடவும் வசதிகளை அபிவிருத்தி செய்துள்ளார்கள். விதவிதமான நவீன கட்டடங்கள் கட்டப்பட்டு வந்தாலும் பல பழைய கட்டடங்கள் சரித்திரச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன; அவற்றில் கை வைக்க முடியாது என்று சொன்னார்கள்.

மிகச் சிறிய நாடுகளுள் ஒன்றான பிரிட்டன் மிக வலிமை வாய்ந்த நாடாக உயர்ந்து, உலகின் பல பகுதிகளைத் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டுவர முடிந்ததென்றால் அதற்குக் காரணம் அதன் கடற்படைதான். எனவே, பிரிட்டனின் கடற்படைச் சரித்திரத்தையே விளக்கும் வண்ணம் ஒரு மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது. National Maritime Museum என்ற இந்த அருங்காட்சியகம் கிரீனிச்சில் உள்ளது. ஆமாம்! பூகோளப் பாடத்தில் படித்த, உலகின் ஜீரோ டிகிரி லாஞ்சிடியூட்டில் அமைந்துள்ள அதே கிரீனிச்தான்.

இந்த மியூசியத்துக்கு அருகே, ஆரம்ப காலத்திய ஒரு சரக்குக் கப்பலை அப்படியே பாதுகாத்து வைத்திருப்பது தவிர, வேறு பல கப்பல்களின் மாடல்கள், அவற்றிலிருந்த உபகரணங்கள், அந்தக் காலத்துக் கடற்படைத் தலைவர்கள் அணிந்த உடைகள் (நெல்சன் பிரபுவின் ஆடை உள்பட), உபயோகித்த ஆயுதங்கள் என்று கப்பல் படை தொடர்புடைய பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மியூசியத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது பூவாக மழை பெய்ய ஆரம்பித்தது. ஒரு வாரமாக இல்லாத குளிர், 'வெடுக்'கென்று காற்றில் கலந்து, கடும் குளிர் காலமான Winter க்குக் கட்டியம் கூறியது. 'ரிவர் பஸ்' என்று அழைக்கப்படும் விசைப் படகில் தேம்ஸ் நதியைக் கடந்தோம். காற்றின் குளிருடன், சிதறிய நீர்த் திவலைகளின் ஈரமும் கலந்து கொண்டது. 'ஊர் திரும்ப நேரமாகி விட்டது; கிளம்பு!' என்று லண்டன் மிக மென்மையாக எங்களை எச்சரித்தது!

— சீதா ரவி

ஒய். ஜி. மகேந்திராவின் நடன அரங்கேற்றம்!



குமார் ஒரு டஜன் நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர் ஒய். ஜி. மகேந்திரன். மறக்க முடியாத இரு அனுபவங்களைக் கூறுகிறார்:

டோக்கியோவில் நண்பர் ஒருவர் எனக்கு ஒரு ஃபிளாட் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். ஒரு நாள் நான் ஃபிளாட்டைப் பூட்டி விட்டுக் கிளம்பி ஊரெல்லாம் சுற்றி விட்டு இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் திரும்பி வந்து திறக்கப் பார்த்தால் திறக்கவில்லை! எவ்வளவோ முயன்று பார்த்தும் பயனில்லை. யாரையாவது கேட்கலாம் என்றால் எனக்கு ஜப்பானிய மொழி தெரியாது: அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது! இரண்டு பெண்கள் அந்த வழியாகப் போனார்கள். அவர்களை உதவிக்கு நெருங்கினேன். அவர்களோ இரவு நேரமாதலால் பயந்து போய் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்! நான் அவர்கள் முன்னே ஓடிச் சென்று ரொம்பத்தான் ஜப்பானிய பாணியில் உடல் வளைத்துக் கும்பிடுகள் போட்டு என் நிலைமையை ஒருவழியாக அவர்களுக்கு விளக்கினேன். நம்முடைய பரத சாஸ்திரம், அபிநயக் கலைகளின் சிறப்பு எத்தகையது என்பது அப்போதுதான் எனக்கு நன்றாக விளங்கியது! என் முக பாவங்கள், அபிநயங்களை ஒருவாறு அவர்கள் புரிந்து கொண்டு, என்னை ஓர் அறிவிப்பின் அருகே அழைத்துச் சென்றார்கள். அதில் ஆங்கிலத்தில் "இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஃபிளாட்டுக்குத் திரும்புகிறவர்கள், தங்களுடைய ஃபிளாட்டின் ரகசிய நம்பரை கம்ப்யூட்டரில் பொருத்தினால் தான் கதவு திறக்கும் என்று எழுதியிருந்தது. எனக்கோ அந்த ரகசிய கோட் நம்பர் தெரியாது! நல்லவேளையாக என்னிடம் நண்பர் தொஷிடாவின் போன் நம்பர் இருக்கவே அந்தப் பெண்களின் உதவியுடன் தொஷிடாவை ஃபோனில் பிடித்தேன். அவரும் பிளாட்டுக்கு விரைந்து வந்து, உரிமையாளரைச் சந்தித்து, கோட் நம்பரைப் பெற்றுக் கொண்டு, அதைக் கம்ப்யூட்டரில் பொருத்திக் கதவைத் திறந்து விட்டார். அப்புறம் கேட்டதற்கு, "நீ இவ்வளவு லேட்டாக ஃபிளாட்டுக்குத் திரும்புவாய் என்று எதிர்பார்க்கவில்லை" என்றார். "என்னுடைய ஊர் சுற்றும் திறமையை இவ்வளவு குறைவாக மதிப்பிட்டு விட்டீரே!" என்று சொல்லி வருத்தப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய?

பாலித் தீவில் இந்தியர்கள் தொண்ணூறு சதவிகிதம் இருக்கிறார்கள். ஹிந்து கலாசாரத்தைப் போற்றிப் பின்பற்றி வருகிறார்கள். இவர்கள் நடத்தும் ராமாயண நாட்டிய நாடகம் ஓர் அற்புத அனுபவம். "கெட்சக்" நடனம் என்று கூறுகிறார்கள்.

மரங்கள் சூழ்ந்துள்ள ஓர் இடத்தில் ராமாயணக் கதையை ஹனுமான் சொல்வது போல் நாட்டிய நாடகம் அமைத்து அரங்கேற்றுகிறார்கள். டிரம்ஸ் மட்டும் தான் ஒலிக்கிறது. வேறு இசைக் கருவிகளே கிடையாது. "கெட்சக், கெட்சக்" என்ற வார்த்தையைக் கோரஸாகவும், தனியாகவும், உரக்கச் சொல்லியும் மெல்லச் சொல்லியுமே அவர்கள் வேறு புதிய கற்பனை உலகுக்கு நம்மை அழைத்துச் செல்கிறார்கள். நம்மை மறந்து ராமாயண காலத்தில் ஒன்றி விடுகிறோம்.

லங்கா தகனக் காட்சி; அரங்கிலே நூறு பேர்களும் கைகளை உயரத் தூக்கி, விரல்களை மட்டுமே தீ நாக்குகள் போல் நெளியச் செய்து நாட்டியமாட வைக்கிறார்கள். அந்த விரல் அசைவுகளின் மீது மட்டுமே சிவப்பு விளக்கு வெளிச்சம் படச் செய்து, அதன் மூலம் நெருப்பு கொழுந்து விட்டு எரிவது போல் தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். பிரமித்துப் போனேன்!

பேட்டி: **சலன்**

காணும் பொங்கலின் நதி மூலம் என்ன?



டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் :

இந்து மதப் பண்டிகைகள் பலவும் இயற்கை, பறவைகள், பிராணிகள் முதலிய வற்றை வணங்குவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். பொங்கலன்று சூரியனை வழிபடுவது இயற்கைவழிபாடுதான். அடுத்த நாள், உழவுக்குத் துணை புரியும் மாடுகளை வணங்குகிறார்கள்.

ஹிந்துக்களில் சில வகுப்பினர் பொங்கலுக்கு மறு தினத்தைக் கனுப் பொங்கல் என்று அழைப்பார்கள். கனு என்றால் சம்ஸ்கிருதத்தில் அடுத்தது அல்லது சமீபத்தில் என்று பொருள்படும். பொங்கலுக்கு அடுத்த நாள் ஆனதால் கனுப் பொங்கல் என்று குறிப்பிடப்பட்டது. அன்று மஞ்சள் இலையில் பறவைகளுக்குப் பொங்கல் படைக்கிறோம். இதே நேரத்தில் பெண்கள் தங்கள் உடன்பிறந்தவர் நலனுக்காகப் பிரார்த்தித்துக் கொள்வர்.

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் கிராமப்புறங்களில் வயல்களில் வேலை நடக்காது. கரிநாள் என்பர். அன்று ஊர்ப் பெரியவர்களை — தங்களுக்கு வேலை கொடுப்பவர்களை — உழவர்கள் சென்று வணங்கி வருவார்கள். இது காணும் பொங்கல் என்பதாக வழக்கில் வந்திருக்கலாம். அல்லது கனுப் பொங்கல் காணும் பொங்கலாகத் திரிந்திருக்கலாம்.

ஆனால் இன்று பட்டணத்தில் காணும் பொங்கல் என்பது வீட்டை விட்டுக் குடும்பத்தோடு வெளியேறி ஏதாவது ஓர் இடத்துக்குப் போய் வருவது என்றாகி விட்டது. மகாபலிபுரம், வண்டலூர் ஜூ, கடற்கரை என்று எங்கேயாவது கிளம்பி விடுகிறார்கள். இந்த வழக்கத்துக்கு எனக்குத் தெரிந்தவரை இந்து மத நூல்கள் எதிலும் ஆதாரம் இல்லை. இது பட்டணத்தில் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கிற பழக்கமாகவே தோன்றுகிறது.



குடும்பத் தலைவி சத்தியவாணி :

காணும் பொங்கல் என்று ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்பது ஒருபுறமிருக்க, அது குடும்பத்தில் நாங்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நாளாகிவிட்டது. வருடம் முழுவதும் வேலை காரணமாகக் காலையில் போனால் இரவுதான் இவர் வீடு திரும்புகிறார். பொங்கலையொட்டி எங்கும் போகாமல் எங்களுடன் இருக்கிறார். நாங்களும் வருடம் முழுவதும் எங்கும் போகாமல் வீட்டோடு இருக்கிறோம். காணும் பொங்கல் அன்று ஒரு நாள்தான் அவருடன் எங்கேயாவது வெளியே கிளம்புகிறோம். பெரும்பாலான குடும்பங்களில் இதுதான் நிலைமை. அதனால்தான் இதற்கு இவ்வளவு முக்கியத்துவம்! இந்த வழக்கத்தை இனி மாற்றவே முடியாது. மாற்ற யாரும் அனுமதிக்கவும் மாட்டார்கள்!

— கௌசல்யா

படம்: **ராஜன்**

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/-; விமானத் தபால் ரூ. 350/-.


Velvette BLACK
Velvette EGG
வெல்வெட் என்றால்
காலி பாக்கெட்டுக்கு கூட
மதிப்பு உண்டு...
கொடுங்கள், 5 காலி வெல்வெட்
கண்டிஷனர் ஷாம்பூ பாக்கெட்டுகள்.
பெறுங்கள்
ஒரு வெல்வெட் கண்டிஷனர்
ஷாம்பூ பாக்கெட்.
இலவசமாக
Velvette BLACK CONDITIONER SHAMPOO
முந்துங்கள்!
இச்சிறப்புச் சலுகை
குறுகிய காலத்திற்கு
தமிழ்நாட்டில் மட்டுமே.
வெல்வெட்®
கண்டிஷனர் ஷாம்பூ
விநியோகஸ்தர்கள்: கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்
everest m/41a/90

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

புத்துணர்ச்சியும் பொலிவும் வழங்கும் ஹமாம்!



கண்டுகொள்வீர் ஹமாம் புரியும் ஜாலத்தை,
இதுவரை காணாத கூடுதல் புத்துணர்ச்சியும்
பொலிவும் உமக்கு. புதுமை குன்றாமல்
நீடித்துக் கமழும் நறுமணம். சொகுசான
நுரைவளம்—வழங்கும் என்றும் புதுமையான
ஹமாம். புத்துணர்ச்சியையும்
பொலிவையும் உணருவீர்.

ஹமாம்

குடும்ப சோப்



பாட்டா தயாரிப்பு

CLARION/B/T/23/173 TAM